www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 12 | பெப்ரவரி 2005 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 77

# வடக்கு கிழக்கை மீளக்கட்டியமைக்க

## அரசு-புலிகள் இணக்கம் அவசியம்!

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குக்கிழக்குப் பிரதேசங்களை மீளக்கட்டியமைக்க இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தேவை என்ற கோரிக்கை பேச்சுவார்த்தைக்கே எடுத்துக் கொள்ளப்படாத நிலை தொடர்ந்தது. சுனாமியின் தாக்கத்திற்குப் பிறகு பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கை மீள கட்டியமைக்க அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் ஒருங்கிணைவான செயற்பாடும் அதற்கான பொதுவான நிர்வாகக்கட்டமைப்பும் அவசியமாகிறது. இதற்கான விருப்பம் இருதரப்பிலிருந்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் அக்கட்டமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து இதுவரை இணக்கப்பாடு காணப்படவில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கிற்கு நிவாரணவேலைகளையும், மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளையும் விஸ்தரிப்பது தொடர்பாக அரசாங்கம் ஒரு உடன்பாட்டிற்கு பின்னடித்து வருகிறது. இது பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மக்களின் அவலநிலையைப் பயன்படுத்தி அப்பிரதேசங்களின் அரச ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான அரசின் உள்நோக்கத்தையே காட்டுகிறது. சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் எந்தவொரு யதார்த்தத்தையும் ஏற்றுக்கொள்ளாமலும் அங்கீகரிக்காமலும் வடக்கு கிழக்கில் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்கப்போவதில்லை.

வடக்கு கிழக்கில் சுனாமி பாதிப்புகளிலிருந்து மீளச் செய்யப்படவேண்டிய மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள் பற்றியும் அவற்றை முன்னெடுப்பதற்கான கூட்டு நிர்வாக அமைப்பு பற்றியும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அதன் யோசனைகளை முன் வைத்துள்ளது. அரசாங்கமும் அதன் யோசனைகளை முன்வைத்துள்ளதாக அறியமுடிகிறது. மேற்படி இரண்டு யோசனைகள் பற்றி பேசி முடிவெடுக்கப்படும் போது யுத்த பாதிப்புகளும் சுனாமி பாதிப்புகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். வடக்கு கிழக்கின் எல்லாப் பகுதிகளுமே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியமைக்க முன்னுரிமை வழங்கப் படவேண்டிய அதே வேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் மீளக்கட்டியமைக்கும் நடவடிக்கைகளும் ஏககாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். தென்பகுதியில் மேற்கொள்ளப்படும் மீளக்கட்டியமைக்கும் நடவடிக்கைகளிலிருந்து வடக்கு கிழக்கில் மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் வித்தியாசமாகவும் பிரத்தியேகமாகவும் இருப்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.



நடவடிக்கைகள் மட்டுமல்ல அவற்றை மேற்கொள்வதற்கான நிர்வாக யந்திரமும் வித்தியாசமாகவும் பிரத்தியேகமாகவுமே இருக்க வேண்டும். ஏனெனில் 20 வருடகால அரசின் இன அழிப்பு யுத்தமும் தமிழ் மக்களின் போராட்டமும் வடக்கு கிழக்கில் ஏற்படுத்தியிருக்கும் அரச நிர்வாகம் புலிகள் நிர்வாகம் என்ற இரட்டை நிர்வாகத்தையும் அதனுடைய தாக்கங்கள் சிக்கல்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

**சுனாமி மீட்புப் பணிக்கென இலங்கையில் வந்து இறங்கிய அமெரிக்க ராணுவம் உலக வரைபடத்தை வைத்து கலந்தலோசனை நடத்துவதைக் காணலாம்**

இவற்றுக்கு உரிய தீர்வு காணப்பட்டால் வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்க்கும் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதுற்கும் பாரிய தடைகள் இருக்கப்போவதில்லை. எனவே பேரினவாத யுத்தம் - விடுதலைப் போராட்டம்,

12ம் பக்கம் →

# அந்நியப் படைகள் வெளியேற வேண்டும்!

## அமெரிக்க ராணுவத்தால் பிராந்தியத்திற்கே ஆபத்து

2004 டிசம்பர் 26 சுனாமிப் பேரழிவைத் தொடர்ந்து இந்திய, அமெரிக்க, பிரித்தானியா, பாகிஸ்தான், கனடா, ராணுவப் படையணிகள் தத்தமது ராணுவ தளபாடங்களுடன் இலங்கைக்குள் வந்திறங்கிக் கொண்டன. மீட்புப் பணி, நிவாரண உதவி, புனரமைப்பு போன்றவற்றுக்காக இவை வந்துள்ளதாகவே கூறிக்கொண்டிருக்கின்றன. இலங்கை அரசாங்கம் இதற்கான அழைப்பை விடுத்திருந்தமையைச் சாட்டாக வைத்தே அவை இலங்கையில் கால் பதித்துக் கொண்டன. அவற்றுள் குறிப்பாக அமெரிக்க இந்தியப் படைகள் தத்தமது உள்நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளும் சந்தர்ப்பமாகவே சுனாமிப் பேரழிவைப் பயன்படுத்தி வருகின்றன.

அமெரிக்கா நீண்ட நாட்களாக காத்திருந்த ஒரு காரியத்தை நிறைவேற்றியிருக்கிறது. யுத்தம் உச்சமாக இருந்த காலத்திலும் பின்பு சமாதான முன்னெடுப்புச் சூழலிலும் இலங்கைக்குள் புகுந்து கொள்ளச் சந்தர்ப்பம் தேடி நின்ற அமெரிக்காவிற்கு இப்போது சுனாமிப் பேரழிவு வசதி வழங்கியுள்ளது. இங்கு வந்திறங்கி நாட்டின் பல பகுதிகளிலும் கூடாரமடித்துள்ள அமெரிக்க ராணுவம் மீட்புப் பணி என்ற பெயரில் ஒரு ஆக்கிரமிப்புக்கான அடித்தள வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன என்பதில் எவவித சந்தேகமும் இருக்க முடியாது. பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பெறத்தக்க வழிகளிலேயே அமெரிக்க ராணுவத்தினர் நடந்து கொள்கின்றனர்.

இலங்கையை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது நம்பகமான அடிமை விசுவாசியாக வைத்திருப்பதன் மூலம் உலக மேலாதிக்க நோக்கத்தின் தளமாகப் பயன்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா நேரடியாக இறங்கி நிற்கிறது. இதுவரை தேசிய இனப்பிரச்சினையை யுத்தமாக்கியதன் மூலம் அதன் மறைவில் தமது தாராளமயம், தனியார்மயம், உலகமயமாதல் போன்றவற்றை நடைமுறைப்படுத்திக் கொண்ட அமெரிக்கா இப்போது நேரடி ராணுவக் கால் பதிப்பை சுனாமிப் பேரழிவின் மறைவில் நடாத்தியிருக்கிறது.

அதேவேளை பிராந்திய மேலாதிக்கத்தை நோக்கமாகக் கொண்ட இந்தியா சுனாமியின் பெயரில் கப்பல்கள் ராணுவ தளபாடங்களுடன் வந்திறங்கி நிற்கின்றது. முன்பு சமாதானப்படையென வந்த இந்திய ராணுவம் இப்போது மீட்புப் பணிப்பாளர்கள் என்ற பெயரில் வந்துள்ளது. முன்பு வடக்கு கிழக்கில் வந்திறங்கிய இந்திய ராணுவம் இப்போது தென்னிலங்கையில் முதல் தடவையாக உட்புகுந்து நிற்கிறது.

தென்னிலங்கையின் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் எதுவுமே இவ் அந்நிய ராணுவங்கள் இங்கிருந்து வெளியேற வேண்டும் என வற்புறுத்தவோ எதிர்ப்புத் தெரிவிக்கவோவில்லை. குறிப்பாக ஏகாதிபத்திய எதிர்ப்புப் பற்றி வாய்கிழியக் கத்திவந்த ஜே. வி. பி அமெரிக்க ராணுவத்தின் வருகை பற்றி வாயேதிறக்காது இருந்து வருகிறது.

12ம் பக்கம் →

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# திருகோணமலை செயலகத்தில் சுனாமி உதவிகள் கொள்ளை?

## பிச்சை எடுத்தாராம் பெருமாள் அதைப் பிடுங்கித் தின்றதாம் அனுமார்

சுனாமிப் பேரழிவால் கரையோர மக்கள் படும் இன்னல்கள் விபரிக்க இயலாதவைகளாகும். நிவாரண உதவிகள் பெருமளவு வந்த போதிலும் அவற்றை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாகுபாடற்ற வழிகளில் பகிர்ந்து அளிப்பதற்கு உயர் அதிகா ரிகள் தொட்டு உள்ளூர் கிராம சேவையாளர்கள் வரை நடந்து கொள்ளும் விதம் வேதனை மிக்கதும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

இதற்கு திருகோணமலையில் இருந்து கிடைத்த செய்திகள் உதாரணமாகும். திருகோணமலை செயலகத்தில் சுனாமி அனர்த்தத்தை அடுத்து வந்த இருநூறு லொறிகளிலான நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேராது மர்மமாக மறைந்த மாயம் பற்றி பொது மக்கள் ஆத்திரத்துடன் கேள்வி எழுப்பியுள்ளனர். இந்த நிவாரணப் பொருட்கள் திருகோணமலை செயலகத்தின் கீழான பதினொரு பிரதேச செயலகங்கள் ஊடாகவே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதுவும் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகம் உள்ள செயலகப் பிரிவுகளுக்கே நிவாரணப் பொருட்கள் சென்றடைய வேண்டும்.

ஆனால் இங்கே முற்றிலும் இனவாத அடிப்படையில் சிங்கள உயர் அதிகாரிகளும் அவர்களுக்கு கீழ் உள்ளவர்களும் நடந்து கொள்ளும் முறைகள் கீழ்த்தரமானவைகளாகும். சிங்கள மக்கள் உள்ள செயலகப் பிரிவுகளில் பாதிக்கப்பட்டோர் குறைவாக உள்ள போதிலும் அங்கு கூடுதல் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டதாக விபர அறிக்கைகள் கூறுகின்றன. ஆனால் உண்மையாகவே அப்பொருட்கள் கூட சிங்கள மக்களின் கைகளுக்கும் கிடைக்காது இடையில் சில அதிகாரிகள், அரசியல் புள்ளிகள், கிராம சேவையாளர்கள் போன்றவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளதாகவே அறிய முடிகிறது.

அதே வேளை தமிழ் முஸ்லீம் மக்களை அதிகமாகக் கொண்ட செயலகப் பிரிவுகளுக்கு போதிய நிவாரணப் பொருட்கள் அனுப்பப்படவில்லை. இதில் இனவாதமும் அதன் பேரில் ஏப்பம் விடுவதுமே நடைபெறுகிறது. செயலகத்தின் நிவாரணப் பொருட்களை பிரித்து அந்தந்த செயலகப் பிரிவுகளுக்கு சேவையின் அடிப்படையில் பங்கீடு செய்வதில் தமிழ் முஸ்லீம் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் புறக்கணிக்கப்படுவதாக கவலை தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதே வேளை ராணுவம் தலையிட்டு தாம் விநியோகிப்பதாக பொருட்களை எடுத்துச் செல்கின்றது. மற்றொரு பகுதி பௌத்த விகாரைகளுக்கு வழங்கப்படுகிறது. அதே வேளை இந்து முஸ்லீம் கோவில்கள் - பள்ளிவாசல்கள் ஊடாக நிவாரணப்பொருட்கள் வழங்கப்படுவதில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சுனாமிப் பேரழிவைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் முறையாக பகிரப்படவில்லை என்றும் இனத் துவேசமும், தில்லுமுல்லுகளும், பாரபட்சங்களும், அபகரிப்புக்களும் திருகோணமலைச் செயலகத்தில் இடம் பெறுவதை அம்பலப்படுத்தி இரண்டு பிரசுரங்கள் பாதிக்கப்பட்ட திருகோணமலை மக்கள் சார்பாக வெளியிடப்பட்டுள்ளன. "பிச்சை எடுத்தாராம் பெருமாள்.... அதைப் பிடுங்கித் தின்றாராம் அனுமார்- திருமலை கச்சேரியில் "சுனாமி" உதவிகள் கொள்ளையிடுவதைத் தடுத்து நிறுத்திடுவீர்...." என்னும் தலைப்பில் ஒரு பிரசுரம் வெளிவந்துள்ளது.

"திருமலையில் "சுனாமி" பாதிக்கப்பட்ட மக்களின் பெயரால் கொள்ளை...!" என மற்றொரு பிரசுரமும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் பெயரில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

சுனாமிப்பேரலை இன மொழி மத வேறுபாடின்றி சகலரையும் அடித்துச் சென்றது. ஆனால் அதன் பாரிய அழிவுகளுக்கும் பாதிப்புகளுக்கும் வழங்கப்படும் நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பில் காட்டப்படும் இன மொழி மத வேறுபாடுகள் இழிவான செயற்பாடுகளாகத் தொடரப்படுகின்றன. இதனை திருகோணமலை போன்ற மூவின மக்கள் வாழும் பிரதேசங்களில் காணமுடிகின்றது. திருமலையின் செயலகம் தனது பேரின வாத விஷம் கலந்த செயற்பாட்டை மாற்றியமைக்குமா, பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் பாரபட்சமற்ற நிவாரணங்களை வழங்குமா என்பதையே திருமலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்கிறார்கள்.

நிலாவெளி சுந்தரேசன்

# வெறுப்பைக் காட்டும் தருணம் இதுவா?

தமிழ் மக்கள் வந்தோரை வரவேற்கும் பண்புடையோர் என்றும் அதிலும் துக்க நிகழ்வுகளில் கலந்து கொள்ள வரும் மாற்றாரை உள் அழைத்து உபசரிப்பவர்கள் என்றும் பெருமை பேசுவது வழக்கம். ஆனால் கடந்த 30-12-2004ல் பேரலைத் தொடரினால் பாதிப்புக்குள்ளான வடபகுதி மக்களைப் பார்வையிட வென பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் ஒரு குழுவினர் ஜே.வி. யினர் உட்பட யாழ் ப்பாணத்திற்கு வருகை தந்தனர். அவ்வமயம் பேரழிவிற்குள்ளாகி முகாம் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த மக்கள் நடந்து கொண்விதம் குறித்து வெட் கித் தலை குனிய வேண்டியுள்ளது. தமிழ் இன விரோதிகட்கு இங்கு என்ன வேலை? போ, போ வெளியே போ எனக் கூக்கிரலிட்டனர்.

ஆனால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டிக்குப் பாதயாத்திரை செய்து அதனைக் கிழித்தெறிய வைத்ததன் மூலம் இனப்பிரச்சினையை இன்றுவரை நீடிக்கவைத்து, யாழ்ப்பாணத்தின் முதுபெரும் சொத்தாகிய நூல் நிலையத்தை எரித்து அழித்து, வெலிக்கடைச்சிறையில் 52 தமிழ் இளைஞர்களைக் கொடூர மாகக் கொன்று 83 இன வன்முறையை கட்டவிழ்த்து விட்ட ஐ.தே.கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவுக்கு அரவணைப்பு அன்பு மரியாதை செலுத்தியுள்ளதை அவதானித்த போது பிரதமரை எதிர்த்தவர்களின் எதிர்ப்பு உண்மையில் பேரினவாதத்திற்கு எதிரானது தானா என்று சந்தேகிக்க வைக்கிறது.

"மக்கள் எப்போதுமே அரசியலில் ஏமாற்றத்துக்கும் சுய ஏமாற்றத்திற்கும் மடைமையாகப் பலியாவதுடன் சில வர்க்கத்தினரின் அல்லது தாம் சமயம், அரசியல் சமூக நலன்கள் பற்றி உண்மையான படிப்பினையை அடையும் வரை முட்டாள்களாகவே இருந்து வருகின்றனர்" என லெனின் தனது "மாக்சியம் பற்றிய மூன்று மூலகங்களும் மூன்று ஆக்கக் கூறுகளும்" என்ற நூலில் அன்று கூறியது அன்றுமட்டுமல்ல, இன்றும், பொருந்துவதாகவே உள்ளது.

மக்கள் அரசியலைப் படிக்கவேண்டும் அல்லது தாம் அதற்கு மடைமையாகப் பலியாகாமல் தம்மைப் பாதுகாத்தக் கொள்ளவாவது பழகிக் கொண்டால் நல்லது. தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் பரம்பரையினர் எவரும் இது போன்ற (Tsunami) பிரளயத்தை பார்த்திருந்ததுமில்லை அதனால் பாதிக்கப்பட்டதுமில்லை. இந்த நிலையிலும் கூடவா "மடமை வக்கிர வெறி" பிடித்து ஆடுகிறீர்கள் என இயற்கை அன்னை கலங்குகின்றாள். அடுத்து என்ன செய்யலாம் என கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றாள்.

யாழ்ப்பாணம் சிரகசியன்

# வவுனியா பாடசாலையில் இப்படி நடந்தது

10-12-2004 அன்று 03ம் தவணை பாடசாலை விடுமுறை தினம் பிள்ளைகளின் தேர்ச்சி அறிக்கையைப் பெறுவதற்காக வவுனியா இறம்பைக்குளம் மகளீர் மகா வித்தியாலம் (வவுனியாவின் பாடசாலைகளுள் ஒன்று) தந்தை என்ற வகையில் எனது மகளின் கணிப்பீடுகளை பார்வையிடுவதற்காக சென்றிருந்தேன். குறித்த எனது மகளின் வகுப்பு 6ம் தரம். சுமார் 34 பிள்ளைகள் எனது மகளின் வகுப்பில்- எல்லோரும் சாராசரியாக எல்லாப் பாடங்களுக்கும் 70 புள்ளிகள் அளவில் பெற்றிருந்தனர். குறிப்பிட்ட ஆங்கில பாடத்தை தவிர. ஆங்கிலபாடத்தில் ஆக மூன்று பிள்ளைகள் மட்டும் 70 புள்ளி 56 புள்ளி பெற்றிருந்தனர் மற்ற 31 பிள்ளைகளில் ஆகக்கூடிய புள்ளி 26. மிகுதி எல்லாம் பூஜ்ஜியத் திலிருந்து 13 வரையே. எனவே இது சம்பந்தமாக பலபெற்றோர் ஆசிரிய ரிடம் கேட்டபோது மூன்றாம் தவனை ஆங்கிலப் பாட ஆசிரியர் இல்லை என கூறப்பட்டது. இதே பாடசாலையில் தரம் 6 ஆங்கிலப்பிரிவும் உள்ளது. அதனை எடுத்து ஒப்பிட்டுப் பார்த் தால் சகல பாடங்களும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படுகிறது. ஆங்கில பாடத்துக்கு எல்லோரும் 100 புள்ளி 98 புள்ளி. எனவே இது சம்பந்தமாக நாம் 03-04 பெற்றோர் அதிபரிடம் சென்று வினவினோம்.

அருட்சகோதரியான அதிபர் இந்த ஆங்கில பாட விடயத்தை நாம் கோட்டபோது "விருப்பம் என்றால் பிள்ளையை இந்தப்பாடசாலை விட்டு வேறு பாடசாலைக்கு மாற்றுங்கோ" என அழகாக பதில் அளித்தார்.

கல்விச் சமூகத்தைச் சேர்ந்த அதிபரின் பதில் நியாயமானதல்ல என கூறிய நாம் உடனே ஒரு உதாரணமும் அவரிடம் கூறினோம். அது ''வீட்டில் ஒழுகினால் வீட்டை உடையும் அல்லது வேறு வீட்டைப்பாரும்" என சொல்வது போன்றது என்று கூறியது மட்டுமல்லாமல் எனது மனைவி சகோதரிகள்- மைத்துனிகள் பலரும் இப்பாடசாலையில் கல்வி கற்று இன்று ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும், மருத்துவர்களாகவும், பிரதேச செயலாளராகவும் உள்ளனர் என்றால் அவர்களால் பாடசாலைக்கு பெருமை யாகவே உள்ளது என்பதை அதிபருக்கு எடுத்துக் கூறி இப்படி கூறக் கூடாது என கூறினோம்.

இதனை பலரும் அறியவேண்டும். அருட்சகோதர சகோதரிகளிடம் அன்பும் கருணையும் இருப்பதாகவே கூறப்படுகிறது. ஆனால் இங்கு எடுத்தெறிந்த பேச்சையே அவ் அதிபரிடமிருந்து பெற முடிந்தது. ஆசிரியர் பெற்றோர் உறவு மாணவர்களுக்கு உதவக் கூடியதாகும்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபர் ஆசிரியர் மாணவர் பெற்றோர் ஆகியோரின் கூட்டு முயற்சி அவசியம் என்பதை அதிபர் உணரவேண்டும். அவசியமானதாகும்.

வவுனியா ரா. மெய்யழகன்

# நாலு நடக்கும் உலக'லே

நற்குணன்

## அறிஞர்கள் வாழ்க மாதோ!

சுனாமி அலையில் என்ன எல்லாம் அழிந்ததோ தெரியாது. காளான்கள் மாதிரி நிபுணர்கள் மட்டும் கிளம்பியுள்ளனர். தமிழில் உள்ள ஒரு வசதி என்னவென்றால் ஒன்றும் தெரியாமலே தமது பதவி பட்டங்களைக் காட்டி எவரையும் நம்ப வைக்கலாம். எதை எழுதினாலும் எவரும் கேள்வி கேட்கமாட்டார்கள்.

ஒரு பிரபல வார ஏட்டில் சுனாமி பற்றிய கேள்விகட்குத் தமிழில் விளக்கம் தந்த ஒரு பல்கலைக்கழக அறிஞர் சுமாத்ராவின் தரையில் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தால் சுமாத்ரா இருந்த இடமே தெரியாமல் போயிருக்குமென்று எழுதியிருந்தார்.

9றிக்ற்றர் அதிர்வில் சுமாத்ரா மாதிரி இந்து சமுத்திரத்தில் இரண்டாவது பெரிய தீவை அழிக்க 9றிக்ற்றர் போதாது என்பது போக றிக்ற்றர் அளவு முறையில் ஒவ்வொரு றிக்ற்றருக்கும் அதிர்வின் சக்தி முப்பது மடங்கால் வித்தியாசப்படும் என்றே கவனியாமல் நிலநடுக்கம் பற்றி இவர்கள் விளக்கங்களை வழங்குகிறார்கள். ஆறு றிக்ற்றரை விட ஒன்பது றிக்ற்றர் எத்தனையோ ஆயிரம் மடங்கு வலியது. இதை விளக்காமல் கிளிப்பிள்ளை போல பேசுவதற்கு அறிஞர்கள் தேவையா? மாணவர்கள் வாசிப்பது போதாது என்று பார்த்தால் ஆசிரியர்கள் அவர்களை விட மோசம் போலத் தெரிகிறது. கடைசியாக எழுதிய பரீட்சைக்குப் பிறகு எதையுமே வாசிக்க அவசியம் இல்லை என்று தான் பலரும் நினைக்கிறார்கள் போல!

## பேரழிவும் நாட்டை மேலும்

பேரினவாதம் என்பது பேரலை அடித்து முழுநாட்டையும் அழித்தாலும் போகாதது. அது மனித சுபாவமல்ல. ஒரு சுரண்டும் வர்க்கச் சுபாவம். அந்த வர்க்கம் உள்ள வரை அதை எந்தப் பேரலையாலும் அழிக்க இயலாது. நாட்டை மீள்கட்டமைப்பதற்கான உதவியை வழங்குவதற்கு வெளி நாடுகளிலிருந்து பெரும் நிதி திரட்டுகிற சில தேசபக்தர்கள், தென்னிலங்கையின் தேவைகட்காக மட்டுமே தாங்கள் உதவ ஆயத்தமாக இருப்பதாகப் பச்சையாகவே தெரிவித்திருக்கிறார்கள். இவர்களில் யாருமே இலங்கைக்குத் திரும்பிக் குடியேறப் போவதில்லை. இலங்கையை ஒரு சிங்கள பௌத்த உல்லாசப் பயண அல்லது விடுமுறை மூலமாகவே இவர்கள் பார்க்கிறார்கள். இலங்கையின் அழிவில் பெரும்பகுதி வடக்கு கிழக்கிலேயே நேர்ந்துள்ளது பற்றி உள்ளூர மகிழுகிற மனங்களே இவர்கட்குண்டு. அதே வேளை வடக்கு கிழக்கின் சேதத்தைக் குறைவாகக் காட்டி தெற்கை விருத்தி செய்வதில் இவர்களது அக்கறை குவிகிறது. இவர்கள் பச்சையாகவே சொல்வதை அரசாங்கம் சொல்லாமல் செய்கிறது. இந்த பேரலை நாட்டை ஒன்றுபடுத்தும் வாய்ப்பைத் தந்துள்ளது. தவறவிட்டால் அதுவே நாட்டை நிரந்தரமாகப் பிரிக்கும் சூழ் நிலையையும் ஏற்படுத்தும் என்பது இவர்கட்கு விளங்காது.

## பொன்னாவும் ஜின்னாவும்

எஸ். பொன்னுத்துரையுடனான நேர்காணல் ஞானம் என்கிற சஞ்சிகையில் இப்போது வருகிறது. எதிர்பார்த்தபடியே தன் மீது புகழும் தனக்கு உடன்பாடற்றோர் மீது வசையுமாக அவருடைய பாணியிலேயே கதையளக்கப்படுகிறது.

கடைசியாக வந்த இதழில் ஜின்னாஹ் எழுதிய ஒரு கவிதையில் 'சான்றோரைச் சாடித் தம் பெருமை பேசுவாரை' மலப்புழுக்கள் என்று அழைக்கப்பட்டுள்ளது. இக் கவிதை எஸ்.பொ. நேர்காணலை உடனடியாக அடுத்து அச்சிடப்பட்டுள்ளது.

இது ஆசிரியரின் முடிவா, அச்சுக் கோத்தவரின் முடிவா? இதுவும் வெறும் பரபரப்புக்காகவா?

## சட்டி சுட்டதடா கை விட்டதடா!

தமிழ்த் தேசியவாத நோக்கில் வாராவாரம் தமிழ் ஞாயிறு ஏடொன்றில் எழுதிவரும் முன்னாள் இடதுசாரிப் 'பிதாமகர்' நவெம்பர் மாதம் தனது பத்தியில் விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை "சடங்காசாரமாகக் கிழித்தெறியப்பட வேண்டும்" என்று எழுதியிருந்தார். அவர் எழுதியதற்கும் ஹெல உறுமய தலைவர்மார் பேசுவதற்கும் உண்மையில் மிகுந்த உடன்பாடு இருந்தது போலவே எனக்குத் தெரிந்தது. விடுதலைப்புலிகளுக்கு ஒரு தலைப்பட்சமாக இந்த உடன்படிக்கையைக் கிழித்தெறியும் நோக்கம் இல்லை என்று விளங்கியதாலோ என்னவோ இரண்டே வாரங்களில் தான் எழுதியதற்கு நேரெதிராக அவசரப்பட்டு எதையுமே செய்யலாகாது என்று அதே பத்தியில் எழுதி வைத்தார்.

## யாருடைய குரல்?

விடுதலைப் புலிகளை மீண்டும் போருக்குள் தள்ளி விடுகிற நோக்குடன் அவர்களுக்குத் தீவிர ஆதரவாக எழுதுவது போல வீரகேசரியில் எழுதிவரும் ஒரு போரியல் 'நிபுணர்' இலங்கையின் மேற்கில் எண்ணெயச் குதங்களை அமைக்கவும் துறைமுக வசதிகளை விருத்தி செய்யவும் சீனா உதவுவதற்குக் காரணம் என்னவென்று கிட்டடியில் விளக்கியிருந்தார். சீனா மத்தியகிழக்கிலிருந்து கொள்வனவு செய்யும் எண்ணெயைக் கொண்டு செல்லும் கடற்பாதைக்கு இடைஞ்சல்கள் ஏற்படலாம் என்பதனாலேயே முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை என்றும் கூறியிருக்கிறார்.

சீனாவைத் தனிமைப்படுத்தும் அமெரிக்க முயற்சிகள் பற்றி அவர் அறியாமலிருக்க மாட்டார். சீனாவின் நோக்கம் எந்த வகையில் இலங்கையின் இறைமைக்குப் பகையானது என்று அவர் சொல்லவில்லை. அதே வேளை இந்தியாவின் மேலாதிக்க நோக்கம் பற்றி அவரது கட்டுரையில் எந்த விதமான ஆய்வோ விமர்சனமோ இல்லாதது புதிமையானது. இந்த விமர்சகர் யாருடைய நலன்களைக் கருதி எழுதிவருகிறார் என்பது மெல்லமெல்ல வெளிச்சமாகி வருகிறது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்கு மாகாணத்தில் தொடரும் அவலங்கள்

## பாதிக்கப்பட்ட மக்களிடம் வைரம் சோதிக்கப்படுகிறது

2004 டிசம்பர் 26ம் இடம் பெற்ற கடற்கோள் பேரலையால் கிழக்கு மாகாணம் பாரிய அழிவுகளைக் கண்டது. ஏற்கனவே காலத்திற்கு காலம் வெள்ளம் புயல் வறட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களால் கிழக்கு மாகாணம் மாறி மாறிப் பாதிக்கப்பட்டே வந்துள்ளது. இவை இயற்கை அனர்த்தம் என்றால் பேரினவாத யுத்தம் கடந்த கால் நூற்றாண்டாக வடக்கைப் போன்று கிழக்கையும் பலிகொண்டு வந்துள்ளது. சுனாமி வரும் வரை கிழக்கில் அச்சம் தரும் படுகொலைகள் இடம் பெற்றும் வந்தன. அதற்கு முன் இன வன்முறைகள் அப்பப்போது இடம் பெற்று உயிர்கள் உடைமைகள் அழிந்து கொண்டன. இவை கிழக்கு மாகாணத்திற்குரிய விஷேட அம்சங்களாகவும் இருந்து வந்தன.

ஆனால் இவை அனைத்தையும் மேவி சுனாமி கடற்கோள் பேரலை பாரிய அழிவுகளை ஏற்படுத்திவிட்டது. இன மத மொழி வேறு பாடுகளுக்கு அப்பால் கிழக்கின் கரையோர மக்கள் அனைவரையும் சுனாமி தாக்கி அழித்து சேதங்களை விளைவித்தது. கிழக்கின் மூன்று மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகியனவற்றின் கரையோரங்கள் கடுமையான உயிர் உடைமை இழப்புகளைக் கண்டன. இக் கிழக்கின் கரையோரங்களில் வாழ்ந்து வந்த மக்களின் எண்ணிக்கை அதிகமானதாகும். மூவின மக்களும் கரையோரங்களை அண்மித்து சுனாமிப் பேரலையின் கொடியகரங்களுக்கு அகப்படும் கிட்டிய தூரத்திலேயே வாழ்ந்து தொழில் செய்து வந்தனர். இவர்களில் ஏகப்பெரும்பான்மையினர் மீன்பிடித் தொழிலும் அதனோடு சம்பந்தப்பட்ட சிறு தொழில்களிலும் ஈடுபட்டு வந்த சாதாரண உழைப்பாளி மக்களேயாவர். இவர்களைச் சார்ந்தே ஏனைய அரசாங்க தனியார் நிறுவனங்களிலும் வர்த்தக வியாபார முயற்சிகளிலும் செயல்பட்டு வந்தனர். விவசாயிகளின் இருப்பிடங்களும் கூட கரையோரமாக இருந்து வந்துள்ளன. ஆங்காங்கே விவசாய நிலங்களும் இருக்கின்றன.

இவ்வாறு கிழக்கு கரையோர மக்கள் சுனாமிப் பேரலையால் கடும் பாதிப்புகளை அடைந்தனர். உடனடி மீட்புப் பணியிலும் உயிர்களைப் பாதுகாப்பதிலும் மக்களுக்கு தஞ்சமளிப்பதிலும் அடிப்படை மனித உணர்வுகளே மேலோங்கி நின்றன. இன மொழி மத வாதங்களால் தத்தம் நிலைப்பாட்டில் இருந்தவர்கள் அவற்றை மறந்து ஒருவருக்கொருவர் உதவி நின்றனர். போர் முனையில் எதிரெதிரே ஆயுதங்களுடன் நின்ற விடுதலைப் புலிகளும் ராணுவம் அதிரடிப் படையினர் கூட ஒத்துழைத்து மனித உணர்வுகளுக்கு முன்னுரிமை வழங்கியதைக் காண முடிந்தது.

ஆனால் இப் பேரழிவு இடம் பெற்று முடிந்த ஒரு சில நாட்களில் கிழக்கிற்குரிய விஷேட நிலைமைகளுக்கு ஏற்ப இன மொழி மத பிரதேச வக்கிரங்களுக்கு வழிகாட்டும் செயற்பாடுகள் தலைதூக்கிக் கொண்டன. நிவாரணப் பொருட்களை விநியோகிக்கச் சென்றவர்கள் கூட தமிழ் சிங்கள முஸ்லீம் என்ற முன் முடிவுகளுடனேயே சென்ற நிலையைக் காண முடிந்தது. சில நிறுவனங்களும் அமைப்புகளும் சமமாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாரபட்ச மின்றியும் உணவும் மற்றும் நிவாரணப் பொருட்களும் வழங்கினர் என்பதை மறுக்க முடியாது. கிழக்கின் உட்பிரதேசங்களைச் சேர்ந்த சிங்கள மக்கள் பாதிக்கப்பட்ட தமிழ் முஸ்லீம் மக்களுக்கு உடனடி உதவிகள் செய்வதில் ஆர்வம் காட்டியதைப் பலரும் சுட்டிக் காட்டினர். இவை யாவும் ஒரு சில நாட்கள் மட்டுமே நீடித்தன.

அரசாங்க நிறுவனங்கள் சில அரச சார்பற்றநிறுவனங்கள் அரசியல் கட்சிகள் என்பன முன் அரங்கப் பகுதிக்கு வந்ததும் விடயங்கள் முற்றிலும் இனத்துவக் கண்ணாடிக்கு ஊடாகவே நோக்கப்பட்டன. கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மட்டுமே தமிழ் அரசாங்க அதிபர் உள்ளார். திருகோணமலை, அம்பாறை ஆகிய செயலகங்களில் பேரினவாத அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சிங்கள அரசாங்க அதிபர்களாகும். இங்கே சிங்கள தமிழ் முஸ்லீம் என்று அரசாங்க உயர் அதிகாரிகளைப் பார்ப்பது தவறு என்று யந்திர ரீதியாகச் சிலர் வாதிடமுடியும். ஆனால் இலங்கையின் பேரினவாத வளர்ச்சியையும் அது கிழக்கில் நடந்த கொண்ட திட்மிட்ட குடியேற்றம் முதல் அரசாங்க நிறுவன நடத்தைகள் வரை யாவும் இனவெறிக் கண்ணோட்டத்துடனேயே செயலாற்றி வந்தமை வரலாற்று உண்மையாகும். சாதாரண சிங்கள மக்கள்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## சொல்லும் செயலும் - 1



அண்மையில் பேராசிரியர் கா. சிவத்தம்பிக்கு 'சாகித்திய ரத்தினா' விருது கலாச்சார அமைச்சினால் வழங்கப்பட்டது. சாகித்திய விழாவிற்கு பேராசிரியர் செல்ல முடியாமல் போனமையால் அவரது வீட்டுக்கு கலாச்சார அமைச்சர் விஜித ஹேரத் நேரடியாகச் சென்று விருதினையும் ஐம்பத்தினாயிரம் ரூபா காசோலையையும் கையளித்தார். ஜே. வி. பி . அமைச்சரான விஜித ஹேரத்திடமிருந்து மேற்படி விருதினையும் காசோலையும் பேராசிரியர் சிவத்தம்பி மிகுந்த மன மகிழ்ச்சியோடு பெற்றுக் கொள்வதை இப்படத்தில் காணலாம்.

குறிப்பு: பேராசிரியர் கா. சிவத்தம்பி வார இதழ் ஒன்றில். வாரா வாரம் பீஷ்மர் என்ற பெயரில் ஐ. ம.சு. மு, அரசாங்கம் பற்றியும் பேரி னவாத ஜே. வி. பி. பற்றியும் கண்டித்து விமர்சித்து எழுதி வருபவர் என்பது குறிப்படத்தக்கது.

# நாவலப்பிட்டி நகரசபையின் இனப் பாரபட்சமான முடிவு

1983யூலை இனவன்முறையால் ஏற்பட்ட பாதிப்புகள் இழப்புகள் பற்றி ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் நடைபெற்றன. சிலருக்கு பாதிப்புகளுக்குரிய நட்ட ஈடும் வழங்கப்பட்டது. அப்போது எரிக்கப்பட்ட கடைகள் அமைந்திருந்த இடங்களை ரெப்பியா என்ற அரச அமைப்பு பொறுப்பேற்றது. அந்நிறுவனத்தினால் கட்டிடங்கள் மீளக்கட்டிக் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்ட போதும் மலையகத்தின் பல இடங்களில் அவ்வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. அந்த இடங்களில் கட்டிடங்கள் எதுவும் கட்டப்படாமல் இருக்கின்றன. அதனால் அவ்விடங்களில் அமைந்திருந்த கடைகளில் வியாபாரம் செய்தவர்களுக்கு மீள அவர்களது வியாபாரங்களை தொடர முடியவில்லை. 1983 யூலை இன்வன்முறைகள் ஏற்படுவதற்கு முன்னர் அவ்விடங்களில் கடைகளை வைத்திருந்தவர்களுக்கு (வாடகைக்கு இருந்தவர்கள்) மீளக் கடைகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. அதே வேளை அங்கு கடைகளை நடத்தாத பாதிக்கப்படாதவர்களுக்கு அவ்விடங்களில் கடைகளை கட்டிக்கொள்வதற்கு அவ்விடங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நியாயம் மறுக்கப்பட்டவர்கள் நீதி மன்றங்களில் நிவாரணம் கோரி வழக்குகளை தொடுத்திருந்தும் நிவாரணம் வழங்கப்படவில்லை. காலதாமதம் உட்பட பல சட்டநுணுக்கங்களினால் பல வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டி நகர சபை சில மாதங்களுக்கு முன்பு நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றினால் 1983 இனவன்முறைகளால் பாதிக்கப்பட்ட சிலரின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக புஸ்பராஜா என்ற வர்த்தகரின் கடை 1983 வன்முறையால் முற்றாக அழிக்கப்பட்டது. அவர் வாடகைக்கு எடுத்து நடத்திய கடைக்குப்பதிலாக அவ்விடத்திலேயே ரெப்பியா நிறுவனம் கடையை கட்டிக்கொடுக்கும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. இது வரையும் கடை கட்டிக் கொடுக்கப்படவில்லை. மாறாக அக்கடை அமைந்திருந்த இடத்தை வேறு நபர்களுக்கு (1983 இனவன்முறையால் பாதிக்கப்படாதவர்களுக்கு) கொடுப்பதற்கான தீர்மானத்தை நாவலப்பிட்டி நகரசபை நிறைவேற்றியுள்ளதாகத் தெரிகிறது. அத்தீர்மானம் மேற்படி புஸ்பராஜாவிற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதில்யை மீறுவதாக அமைகிறது.

நாவலப்பிட்டியில் வீதியொன்று அகலப்படுத்துவதால் பாதிக்கப்படவுள்ளவர்களுக்கு மேற்படி புஸ்பராஜா கடை நடத்திய இடம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தீர்மானம் நிறைவேற்றப்படும் போது நாவலப்பிட்டிய நகரசபையின் தமிழ் உறுப்பினர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்களோ தெரியாது? அத்தீர்மானத்தை இரத்துசெய்து மேற்படி நியாயம் மறுக்கப்பட்டவருக்கு அவ்விடத்தை பெற்றுக் கொடுக்க அத்தமிழ் உறுப்பினர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? இல்லாவிட்டால் தேர்தல் வரும் போது மட்டும்? தமிழ்வாக்காளர்களைத் தேடி வருவார்களா?

## சொல்லும் செயலும் - 2



ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா ஜனாதிபதிப் பதவி பெற்று பத்தாண்டுகள் பூர்த்தியாகியதை முன்னிட்டு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விழா நடைபெற்றது. இதில் இந்திய பெற்றோலிய துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர் பிரதான உரையாற்றினார். அவ்விழாவின் முதல் வரிசையில் இடமிருந்து வலமாக ஜே. வி. பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சா, தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற தலைவர் இரா. சம்மந்தன், தமிழர் கூட்டமைப்பு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் ஆகியோர் மிகுந்த மன மகிழ்ச்சியோடு அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம் .

குறிப்பு: இத் தமிழ்க் கூட்டமைப்பு பிரதிநிதிகள் இருவரும் மேற்படி விழாவிற்கு சென்றமை சந்திரிகா அம்மையாரின் கடந்தகால உதவிகளுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும் எதிர்கால நலன் கருதியும் என்றே கூறப்படுகிறது.

## மேல் கொத்மலைத்திட்டம் கைவிடப்படுமா?

அண்மையில் நாட்டின் பல பகுதிகளில் பூமி அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. நீருக்கு அடியில் இடம் பெற்ற பூகம்பத்தால் இலங்கையை சுனாமி தாக்கியது. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த எமது அறிஞர்கள் உறக்கத்திலிருந்து விடுபட்டு சற்றுச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் புவிச்சரிதவியல் பேராசிரியர் சீ.பி.திஸ்ஸநாயக்க பூகம்பம் இலங்கையில் இடம் பெறமாட்டாது என்ற முன்னைய கணிப்பு இனிமேலும் பொருந்தா தெனக் கூறுகிறார்.

சுனாமியின் போது ஏராளமான மக்கள் உயர்ந்த பகுதிகளுக்கு ஓடிப் போய் உயிர் தப்பினர். ஆனால் பூகம்பம் ஒன்றில் மக்கள் வீடுகள் கட்டிடங்களில் இருந்து வெளியேறி திறந்த இடங்களுக்குப் போக வேண்டுமென்ற ஆலோசனை கூறப்படுகிறது. பேராசிரியர் பூகம்பம் எரிமலை சம்பந்தப்பட்டதுறையில் நிபுணத்துவம் பெற்றவர். எதிர்காலத்தில் நீர்மின் திட்டங்கள் இலங்கைக்கு ஏற்புடையன அல்ல எனவும் கூறுகிறார். அப்படியாயின் மேல் கொத்மலை நீர்மின் திட்டம் கைவிடப்பட வேண்டிய திட்டமாகும்.

அரசாங்கம் இந்த நிலையில் மேல் கொத்மலைத் திட்டத்தை கைவிடுமா?

## பேரலையால் விழுத்த இயலாத சாதியம்

தமிழகத்தின் கரையோரத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களிடையே மீனவ சமுதாயத்தினரே அதிகமானோராயினும் தாழ்த்தப்பட்ட சாதியினரும் கணிசமான அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். நாகப்பட்டினத்தில் மீனவ சமூகத்தினர் தாழ்த்தப்பட்ட சாதியினருடன் தண்ணீரைப் பகிர மறுத்துள்ளனர். நிவாரண உதவி வழங்குவதிலும் பாரிய சாதி வேறுபாடு காட்டப்பட்டது. வெவ்வேறான சமையல் என்று தொடங்கி வெவ்வேறு முகாங்கள் என அகதிகள் சாதியால் பிரிக்கப் படுகின்றனர்.

இன்னொருபுறம் சென்னைக் கடற்கரையோரம் அமைந்துள்ள பார்த்த சாரதி கோவிலை அகதிகட்குத் தஞ்ச மளிக்கத் திறந்துவிடுவதற்குக் கோவில் நிருவாகம் மறுத்துள்ளது. இவ் விடயத்தில் ஒரு பள்ளிவாசலோ மாதாகோவிலோ முற்றிலும் வேறுபட்ட முறையில் நடந்திருக்கும் என்பதை யாரும் மறுக்க இயலாது.

சாதியம் பற்றிக் குறிப்பிட்டு ஒரு சாதியினரை மட்டும் இலக்கு வைத்துத் தாக்கி வந்துள்ள பெரியாரிய வாதிகளும் தலித்தியத்தின் பேரால் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சாதிகளாகப் பிரிப்பதில் வெற்றிகண்டுள்ள தலித் தியச் சில்லறை வியாபாரிகளும் பார்ப்பனியம் என்பது பிராமணர் சார்ந்த விடயம் மட்டுமல்ல என்பதை ஒருபுறம் உணர வேண்டும். மறுபுறம் சாதிச் சண்டைகளை வைத்துச் சாதியத்தை வெறுமனே சாதிகட்கிடையிலான மோதலாகப் பார்ப்பதையும் நிறுத்த வேண்டும்.

சாதிப் பிரச்சனை இந்திய நிலவுடைமை அமைப்பின் வர்க்கப் பிரச்சனையின் விகாரப்பட்ட ஒரு அம்சம். அதை வர்க்கப்போராட்ட அடிப்படையிலே நோக்குவதன் மூலமே தீர்க்க இயலும். தமிழகத்தின் தலித்திய வாதிகளும், பெரியாரிய வாதிகளும், இலங்கையில் மாக்சிச லெனினிச வாதிகள் சாதியத்திற்கெதிராக முன்னெடுத்த எழுச்சியினின்று இனியாவது கற்பார்களா?

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஊவாவில் அமைய உள்ள பல்கலைக்கழகத்தை மலையக தொழிற்சங்க தலைமைகள் எதிர்ப்பதேன்?

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் பல்கலைக்கழகமொன்றை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுமுள்ளது. பதுளை இங்குறுகமுவ தோட்டத்தில் 35 ஹெக்டேயர் காணியை சுவீகரித்து அதில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு இ.தொ.க. ம.ம.மு இ.தே.தோ.தொ. சங்கதலைமைகள் யாவும் ஒரேகருத்தில் இருந்து கொண்டு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. பல்கலைக்கழகம் என்ற பேரில் வளமான தோட்டக் காணி சுவீகரிக்கப்படுவதை எதிர்ப்பதாக அவை கூறுகின்றன. ஏற்கனவே இங்குறுகமுவ தோட்டத்தில் 14 ஹெக்டேயர் காணி கைத்தொழில் பேட்டை அமைப்பதற்கென சுவீகரிக்கப்பட்டது. ஆனால் அக்காணியில் கைத்தொழில் பேட்டை அமைக்கப் படவில்லை. அதில் சிலர் குடியிருக்கின்றனர். அவ்வாறு குடியேறியிருப்பவர்களை வெளியேற்றிவிட்டு அவ் விடத்தில் வேண்டுமென்றால் பல்கலைக்கழகத்தை அமைத்துக் கொள்ளட்டும் என்று தொழிற்சங்கத் தலைமைகள் கூறுகின்றன. பல்கலைக்கழகம் அமைக்க 14 ஹெக்டேயர் காணி போதாதென்றும் 35 ஹெக்டேயர் காணியாவது தேவை யென்றும் பல்கலைக்கழகமானிய ஆணைக்குழு தெரிவிக்கிறது.

அதனால் அத்தோட்டத்தில் வாழும் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுமாயின் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் மறுவாழ்வமைப்பதற்கும் ஏற்பாடுகளை செய்யாமல் பல் கலைக்கழகமே அமைக்கப்படக் கூடாது என்று கூறுவது மக்கள் விரோத நிலைப்பாடாகும். பல்கலைக்கழகமொன்றை அமைத்து அதனை மலையகத் தமிழ் தேசிய இனத்திற்கான பல்கலைக்கழகமாக மாற்றுவது பற்றி சிந்திப்பது அவசியம். ஏனெனில் அவ்வாறான பல்கலைக்கழகமொன்றினால் மலையக சமூகத்தின் உயர் கல்வி வளர்ச்சியையும் பண்பாட்டு அபிவிருத்தியையும் ஏறபடுத்த முடியும். தொழில் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அவ்வாறான பண்பாட்டு வளர்ச்சியையும் உயர்கல்வி வளர்ச்சியையும் மலையகத்தொழிற் சங்கத்த

**ம.அழகேசன்**

லைமைகள் எதிர்க்கின்றன. காரணம் மலையக சமூக அபிவிருத்தியும் விழிப்பும் அவர்களின் இருப்பிற்கு ஆபத்தானதாகும். மக்களை ஏமாற்றி காலம் தள்ளும் அவர்களுக்கு பல்கலைக்கழகம் அமைவது பாதிப்பாகவே அமையலாம்.

மக்களுக்கு சாதகமான பல அம்சங்களையே ஏற்படுத்தும். அதாவது சமூக அபிவிருத்திக்கான கட்டமைப்புகள் ஏற்படும். அத்துடன் சமூக விழிப்புணர்வுகள் இளந்தலைமுறையினர் மத்தியில் உருவாகும்

அதனை எதிர்க்கும் அரசியல் தொழிசங்ககத்தலைமைகள் முழு தலவாக்கெல்லை பிரதேசத்தையும் தண்ணீரில் மூழ்கடிக்கப்போகின்ற மேல்கொத்மலை திட்டத்தை ஆதரிக்கின்றனர் வரவேற்கின்றனர். அழிவுநிறைந்த அத்திட்டத்தை அபிவிருத்தித்திட்டம் என்கிறார்கள் ஆக்கப்பூர்வமான பல்கலைக்கழகம் போன்ற திட்டங்களை எதிர்க்கின்றனர். இதுவே அவர்களை மக்கள்விரோத சக்திகள் என்று அடையாளம் காணப் போதுமானதாகும்.

அவர்களின் எதிர்ப்பை முறியடித்து பதுளையில் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்திக் கொள்ள மலையக மக்கள் நலனில் அக்கறையுள்ள அனைவரும் சேர்ந்து செயற்பட வேண்டும். மலையகப் படித்தவர்கள் அப்பல்கலைக் கழகத்தை பெற்றுக்கொள்ள பாடுபட வேண்டும்.

ஏற்கனவே பேராசிரியர் சந்திரசேகரம் உட்பட பல மலையகப் புத்திஜீவிகள் மலையகத்தமிழ் தேசிய இனத்திற்கான தனியான பல்கலைக்கழகம் தேவையென வலியுறுத்தி வருகின்றனர். மலையக தேசிய இனத்துவ வளர்ச்சிக்கு அவ்வாறான பல்கலைக் கழகம் அவசியமாகும்.

ஊவா மாகாணத்தில் பதுளையில அமைக்கப்படவுள்ள பல்கலைக்கழகம் அவ்வாறானதாக மலையகத்தமிழ் தேசிய இனத்திற்குரியதாக அமைவது முற்றிலும் நியாயமானதாகும். அவ்வாறான ஒன்றை ஒரேயடியாக பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதை எதிர்க்கக் கூடாது.

குறிப்பிட்ட அத்தோட்டத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதால் அங்குவாழும் தொழிலாளர்களுக்கு பாரிய பாதிப்பு இல்லை என்று சமூக செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். பாதி க்கப்படும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட முடியும் என்று கூறுகின்றனர். அதனால் பல்கலைக்கழகத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்கள் விரோத தொழிற் சங்கத் தலைவர்களை அம்பலப்படுத்த வேண்டும்.

பதுளையில் பல்கலைக்கழகமொன்றை அமைக்க எடுக்கப்பட்டுள்ள முடிவினை ஆதரித்து அதனை மலையசமூகத்திற்காகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

# சுயதேவைக்கு கட்சித் தாவல்

மத்திய மாகாணசபையின் இ.தொ.கா உறுப்பினர் கோவிந்தராஜ் ம.ம.முன்னணியில் இணைந்து கொண்டமை பால் ம.ம.மு இன் வாக்குவங்கி பலமடையும் என்று ம.ம.மு.யில் சிலர் மகிழ்வடைகின்றனர். ஆனால் அவரைப் பற்றி ம.ம.மு முன்பு செய்த விமர்சனங்களை தற்போது நினைவு கூர்வது நல்லது.

அவர் சாதிய முரண்பாட்டை வளர்த்தார் என்றும், அடாவடித்தனங்களில் ஈடுபட்டார் என்றும் ம. ம. மு முன்பு கூறியது. அப்படியென்றால் அவர் தற்போது அவற்றை தவிர்த்துக் கொண்டுள்ளாரா அல்லது அவற்றிலிருந்து திருந்திவிட்டாரா என்ற வினா எழும்புகிறது.

இ. தொ. கா விற்குள் ஜனநாயகத்திற்காக போராடியதால்தான் அவர் ம. ம. மு இல் சேர்ந்தார் என்று கூறமுடியாது. மாறாக மத்தியமாகாண சபையில் இ. தொ. கா விற்கு கொடுக்கப்படவுள்ள அமைச்சுக்களில் ஒன்றை அவருக்கு தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பை கொண்டிருந்தார் என்றும் அது நிறைவேறாது என்றவுடன் தான் இ. தொ. கா விற்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்தார் என்றும் கூறப்படுகிறது. அவ்விமர்சனங்களை முன்வைத்துவிட்டே அவர் ம.ம.மு.யில் இணைந்துள்ளார். இவர் மேல் கொத்மலை திட்டத்தில் சில ஒப்பந்தவேலைகளை எடுப்பதில் ஆர்வம் கொண்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

இந்த கட்சிமாற்றங்கள் கட்சிமாறுபவர்களின் சுய நன்மையைக் கருத்தில் கொண்டு இடம்பெறுபவை ஆகும். இவற்றினால் மலையகத்தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. இவர் தேர்தல் காலகட்டங்களில் தோட்டங்கள் தோறும் மின்சாரத்தூண்களை கொண்டு சென்று ஓட்டுக் கேட்டார் என்பதும் தேர்தல் முடிந்தவுடன் அந்த இடங்களிலிருந்து தூண்களை திருப்பி எடுத்துசென்றார் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இவர் ம. ம. மு இல் இணைந்தமை குறித்து ம.ம.மு முக்கிய தலைவர்களில் சிலர் திருப்தி கொள்வதாக தெரியவில்லை.

கோவிந்தராஜ் போன்றவர்கள் எங்கிருந்தாலும் 'அவர்களாகவே' இருப்பார்கள். அவர்கள் அவர்களாகவே இருப்பதற்கு இ.தொ.கா, ம.ம.மு போன்ற அமைப்புக்கள் தடையாகவும் இருக்கப்போவதில்லை.

# குடிக்கும் தண்ணீரிலும் சாதிபார்க்கும் கேவலம்

வடபுலத்தின் வடமராட்சியில் அமைந்துள்ள பரந்த கிராமம் வறணியாகும். அங்கு நன் நீர் கிணறுகள் சில சில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன. அவை கூட உயர் சாதியினர் என்று தம்மை அழைத்துக் கொள்வோரின் க்ட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. அவற்றில் தாழ்த்தப்பட்ட சாதி எனப்படும் மக்கள் தண்ணீர் அள்ளி எடுக்க முடியாது, யாராவது உயர்சாதியினர் எனப்படுவோர் வந்து நீர் எடுத்துக் கொடுக்கும் வரை காத்து நின்றே தண்ணீர் பெற வேண்டும். அண்மையில் இந்த நடைமுறையை மீறி தாழ்த்தப்பட்ட சிலர் தண்ணீர் எடுத்ததால் பிரச்சினை ஏற்பட்டது. உயர் சாதி வெறிபிடித்தோருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் இளைஞர்களுக்குமிடையே முறுகல் மோதல் இடம் பெற்றது. அதன் விளைவாக அந்த நல்லநீர்க் கிணற்றில் சாதிவெறியர்கள் பாம்பை அடித்துக் கொன்று மிதக்க விட்டனர். இச் சம்பவத்தை அறிந்த போது பழைய கந்தன் கருணை நாடகத்தின் வரிகள் தான் நினைவுக்கு வந்தன. "குடிக்கும் தண்ணீரிலும் சாதிபார்ப்பார் தேவியரே கேளும், குளிக்கும் குளங்களையும் பிரித்து வைத்தார் தேவியரே கேளும்" இது இப்பொழுதும் வடபுலத்தில் காணப்படுகின்றது,

மேற்படி குடிநீர் பிரச்சினை இருதரப்பினரிடையே முறுகலாகி மோதலாகியதும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் முறையிடப்பட்டது. அது பற்றிய விசாரணையும் இடம் பெற்றது. புலிகள் இயக்கப் பொறுப்பாளர் சமத்துவமாக நடந்து கொள்வதை வலியுறுத்தினார். ஆனால் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அப்பகுதிக்குச் சென்று தாழ்த்தப்பட்ட மக்கள் - இளைஞர்களைக் கடிந்து ஏசினாராம். ஏன் வழமையை மீறி நீர் எடுத்து முறுகல் மோதலை

தொடர்ச்சி 12ம் பக்கம்

# இராதாகிருஸ்ணன் மாகாண அமைச்சராகிறார் நேர்மையாக செயற்படுவாரா?

மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சராக மீண்டும் வீ.இராதாகிருஸ்ணன் நியமிக்கப்பட விருப்பதாக தெரிய வருகிறது. இவர் இ.தொ. காங்கிரஸில் இருப்பாரா? இல்லையா? விலகுவாரா? விலகமாட்டாரா? என்றெல்லாம் மாகாணசபைத் தேர்தல் காலத்தில் மக்களிடையே கேள்விகள் எழுந்த வண்ணம் இருந்தன. இராதாகிருஸ்ணனுக்கும் காங்கிரஸின் உயர் மட்டத்திற்கும் இடையில் பல்வேறு உச்ச முரண்பாடுகள் வந்ததன் காரணமாக இவர் மலையக மக்கள் முன்னணியுடன் இணையப் போகிறார் என பரவலான செய்திகள் வெளிவந்த வண்ணமிருந்தன. என்றாலும் காங்கிரஸில் இருந்து இராதாகிருஸ்ணன் விலகி விட வில்லை. இந்தியாவின் உளவுப் பிரிவான 'றோ' அச்சுறுத்தியதாலேயே இவர் பணிந்து விட்டதாகவும் சிலர் தகவல் தெரிவித்தனர்.

இதே நேரம் இராதாகிருஸ்ணன் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் ஆசிரியர்கள் கல்வி அதிகாரிகள் ஆசிரிய ஆலோசகர்கள் என பல்வேறு தரப்பினரும் அவர் மீது அதிருப்திக் கொண்டிருந்தனர். முறையான விதத்தில் பதவியுயர்வுகள் இடமாற்றங்கள், நியமனங்கள், என்பனவற்றை, மேற் கொள்ளவில்லையென குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

தேர்தல் காலத்தில், தேர்தல் சட்டத் திட்டங்களை மீறி பாடசாலைகளில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினார். ஹபொரஸ்ட் தமிழ் வித்தியாலயத்தில் இவ்வாறான கூட்டமொன்றில் இவரது முண்னிலையிலேயே பிரதேசபை உறுப்பினர் ஒருவர் அப்பாடசாலையின் ஆசிரியர் ஒரு வரைத் தாக்கியமை யால், வலப்பனை- ஹங்குரான் கெத்த ஆசிரியர்கள் அதிபர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஓர் நாள் பாடசாலை பகிஷ்கரிப்பினை மேற்கொண்டனர். இது மட்டுமன்றி இவரது பக்கசார்பான செயற்பாடுகள் காரணமாக பல வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. பல வழக்குகளிலும் வழக்கு தாக்கல் செய்தவர்களுக்கு சார்பாகவே தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. இதே சூழ் நிலையில் இவருக்கு கீழ் பணியாற்றுகின்ற அதி காரிகள், மற்றும் காரியாலய உத்தி யோகஸ்தர்களும் அரசியல் சாதி வர்க்கம் நட்பு உறவு என பல நிலையி னின்றும் செயற்படுபவர்களாகவே உள்ளனர் குறிப்பாக மத்திய மாகாண மேலதிக கல்வி அதிகாரியின் அடா வடித்தனங்களுக்கும் அத்துமீறல்களுக்கும் அளவே இல்லை. அவர் ஆசிரியர்களை அவமரியாதை செய்வது தொடர்பாக ஜனாதிபதி வரை முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒரு உறுப்பினர் அமைச்சரானதன் பின்பு அவர் தனக்கு எதிராக இருக்கக் கூடியவருக்கும் அவரே அமைச்சர் என்பதால் பக்கசார்பின்றி செயற்பட வேண்டியது அவரது கடமை என எதிர்பார்க்கப்படுகிறது.

அதுவும் மிக மோசமான அவலங்களை சுமந்து நிற்கும் மலையக மக்கள் தமது விடிவிற்கு கல்வி மேம்பாட்டையே வேண்டி நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே மீண்டும் பதவியேற்கும் இராதாகிருஸ்ணன் பக்கசார்பின்றி நடக்க முன்வர வேண்டும். இதே நேரம் கல்வி அமைச்சர் பதவிக்கு போட்டியாக இருக்கக் கூடிய பெண்மணிக்கு பல லட்சங்கள் பறிமாறப் பட்டதாகவும் கூறுகின்றனர். இராதாகிருஸ்ணன் வாய் திறப்பாரா? மேற்படி பதவிக்கான இழுபறி காரணமாகவே இ.தொ.கா.வில் இருந்து மாகாணசபை உறுப்பினர் கோவிந்தராஜ் கொப்பு மாறி ம.ம.முன்னணிக்கு தாவினார் என்றே அறியமுடிகிறது.

## ...ழக்கு மாகண...

3ஆம் பக்க தொடர்ச்சி

இப்பேரினவாத ஆளும் வர்க்கத்தால் இனவாத வழிகளில் வழி நடாத்தப் பட்டனர். இதன் தொடர்ச்சியை இயற்கை அழிவுகளின் பின்பு ஆளும் அதிகார சக்திகள் தமிழ் முஸ்லீம் மக்களைப் பிரிக்கும் வகையிலேயே நிவாரணம் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்கின்றனர். கிழக்கில் குறிப்பாக திருகோணமலை அம்பாறை மாவட்டச் செயலகங்களில் அரசாங்க அதிபர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை சிங்களப் பேரினவாத நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர். இதனால் தமிழ் முஸ்லீம் பாதிக்கப்பட்ட மக்கள் உரிய நிவாரணங்களைப் பெறமுடியாது தத்தளிக்கின்றனர். அத்துடன் உள்ளூர் சிங்கள கிராமசேவையாளர்களும் தமிழ் முஸ்லீம் மக்களை மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே நடாத்துகின்றனர். அதேவேளை தமிழ் முஸ்லீம் கண்ணோட்டங்களும் தத்தம் கைங்கரியங்களைச் செய்கின்றன. இவ் நிவாரணங்களில் பாதிக்கப்பட்ட மனிதர்கள் சாதாரண மக்கள் என்று பார்ப்பதற்குப் பதிலாக இன மத மொழி பிரதேசம் என்று பார்ப்பதன் மூலமும் தத்தமது வாக்கு வங்கிகளைப் பாதுகாத்து விரிவுபடுத்தும் நோக்கங்களுடன் செயல்படும் போக்குகளையே அவதானிக்க முடிகின்றது. ஒட்டு மொத்தமாக சுனாமிப் பேரழிவைப் பயன்படுத்தித் தமது உள்நோக்கங்களை முன்னெடுக்கவும் நிலைப்படுத்தவுமே பல தரப்பு சக்திகளும் முயற்சிக்கின்றன. இதனை கிழக்கில் தொடர்ச்சியாக அவலங்களைச் சந்தித்து வந்த மக்களிடையே அரசாங்கமும் ஏனைய நிறுவனங்களும் அமைப்புக்களும் செய்து வருகின்றன. இது பட்ட மரத்தில் வைரம் சோதிப்பது போன்ற கீழ்த்தர செயலாகவே காணப்படுகிறது. கிழக்குமக்களுக்கு நடப்பபை மரத்தால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதை போன்றதாகவே இருந்துவருகிறது.

# ஸ்ரீபாத கல்வியற் கல்லூரிக்கு தமிழ் பீடாதிபதி அவசியம்

75 சதவீதமான தமிழ் ஆசிரிய பயிலுநர்கள் கற்கும் பத்தனை ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில் தமிழர் ஒருவர் பீடதிபதியாக நியமிக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. தற்காலிகமாக என்று நியமிக்கப்பட்ட சிங்களவர் ஒருவரே நிரந்தர பீடாதிபதிபோன்று செயற்பட்டுவருகிறார். தனிப்பட அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாத போதும் அவரின் நியமனம் பேரினவாத அடிப்டையை கொண்டதாகும். அவர் தொடர்ந்தும் பீடாதிபதியாக இருந்தால் கல்லூரிக்குள்ளும் வெளியிலும் செயற்படும் பேரினவாத சக்திகளின் நடவடிக்கைகளுக்குரிய இடமாக இக்கல்லூரி அமைந்துவிடும். இங்கு கடமை புரியும் தமிழ் விரிவுரையாளர்களில் சிலர் பீடாதிபதியாக நியமிக்கப்படுவதற்குரிய கல்வித் தகைமைகளை கொண்டிருக்கிறார்கள். இக்கல்லூரிக்கு தமிழர் ஒருவரையே பீடாதிபதியாக நியமிக்கவேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பிரதாயம் இருக்கிறது. அவற்றை கணக்கெடுக்காமல் சிங்களவர் ஒருவரை அதிபராக நியமிப்பது என்பது பேரினவாத மேலாதிக்க செயற்பாடாகும். இதனால் கல்லூரியின் வளர்ச்சி பாதிக்கப்படும். அது மலையகக் கல்விக்கு குந்தகமானதாகும்.

இது குறித்து மலையகத்தொழிற் சங்க பாராளுமன்றவாதிகள் கவனஞ்செலுத்தாது இருக்கிறார்கள். ஆனால் மக்கள் அக்கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். படித்தவர்களும் அக்கல்லூரிக்கு தமிழர் ஒருவர் பீடாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்தி வருகின்றனர்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthi

சுற்று 12 பெப்ரவரி 2005 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 77

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## சுனாமியின் பெயரால் சர்வாதிகாரமா?

கடந்த டிசம்பர் 26ல் அடித்த சுனாமியால் ஏற்பட்ட உயிர் உடைமை அழிவுகள் ஏராளமாகும். அவ்விழப்புகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே போகிறது. அச்சுனாமியால் உயிரிழக்காமல், பாதிக்கப்படாமல் வாழும் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் சமூக பொருளாதார பண்பாட்டு பாதிப்புகள் அதிகம் ஏற்பட்டுள்ளன. அதைவிட அரசியல் ரீதியாக பாரிய பாதிப்புகள் ஏற்படப்போவதை அறிய முடிகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண மீட்புப்பணிகளை செய்யப்போவதாகக் கூறிக்கொண்டு அமெரிக்க, இந்திய, கனடா, பாகிஸ்தான், பிரிட்டிஷ் படையினரும் ஜேர்மன், ஸ்பெயின் போன்ற நாட்டவர்களும் எம் நாட்டிற்குள் பிரவேசித்துள்ளனர். அவர்கள் எப்போது இங்கிருந்து போவார்கள் என்று யாருக்கும் தெரியாது. இது "எரிகிற வீட்டில் பிடுங்குவது ஆதாயம்" என்ற பழமொழியையும் "செத்த வீட்டில் புகுந்த நாய்கள்" என்ற கூற்றையும் ஞாபகப்படுத்தாமல் இல்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்கள் உட்பட 14 மாவட்டங்களில் அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வருமென பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மக்களுக்கு முறையான அறிவிப்பு செய்யப்படவில்லை. அதாவது அவசரகாலச்சட்டத்தை பிரகடனப்படுத்திய ஜனாதிபதி சந்திரிகா அதுபற்றி ஊடகங்களுக்கூடாக மக்களுக்கு அறிவிக்கவில்லை. அரசகட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களில் கூட அது அறிவிக்கப்படவில்லை. இப்பிரகடனம் 30 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். அது அங்கிகரிக்கப்படுமா இல்லையா என்பது இன்னொரு புறமிருக்க அவசரகாலச்சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கான பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்பு திட்டத்தை ஏற்படுத்துவதற்கான அடிக்கல்லை நாட்டும் வைபவத்தில் கலந்துகொண்டு பேசிய ஜனாதிபதி சந்திரிகா அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தேர்தல் நடைபெறாது என்று கூறியுள்ளார்.

சுனாமியின் பாதிப்பிலிருந்து நாட்டை கட்டிவளர்ப்பதற்காக தேர்தல் தேவை இல்லை என்று கூறியுள்ளார். பாராளுமன்ற தேர்தல்களும் மாகாணசபை தேர்தல்களும் சட்ட ஏற்பாடுகளின்படி இன்னும் ஐந்துவருடங்களுக்கு பிறகு நடைபெறலாம். ஆனால் ஜனாதிபதி தேர்தலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களும் இவ்வருடம் நடைபெற வேண்டும். பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையாலும் சர்வஜனவாக்கெடுப்பாலும் நிறைவேற்றினாலன்றி ஜனாதிபதி தேர்தலை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க முடியாது. அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்படி ஒருவர் இரண்டு பதவிகாலத்திற்கு மட்டுமே ஜனாதிபதியாக தேர்ந்தேடுக்கப்பட முடியும். இரண்டு பதவிகாலத்திற்குப் பிறகு ஒரே நபர் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது.

இவ்வாறிருக்கும்போது ஜனாதிபதி அடுத்த ஐந்துவருடங்களுக்கு தேர்தல் நடைபெறாது என்று கூறியிருப்பதன் அர்த்தம் என்ன? ஜனாதிபதியின் பதவி காலத்தை நீடிப்பதற்கான உள்நோக்கமாகவோ விருப்பமாகவோ இருக்கலாம். அவர் தற்போதைய ஜனாதிபதி அரசியலமைப்பை மாற்றி பிரதமராவதன் மூலம் ஆட்சியில் நீடித்திருக்கும் நோக்கத்தை சந்திரிகா வெளிப்படுத்தி வந்துள்ளதுடன் அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டார் என்பது புதிய விடயமல்ல.

அவருக்கு ஏற்றவகையில் பாராளுமன்றத்தில் பலமான அல்லது பெரும்பான்மை பலம் கொண்டதாக ஐ.ம.சு.மு. அரசாங்கம் இல்லை. அதனால் கடந்த சில வருடங்களாக அரசாங்கம் ஸ்திரமானதாக இல்லை. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் மத்தியில் அதிருப்தி அதிகரித்து வந்தது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வு உட்பட பல வாக்குறுதிகளை அரசாங்கம் வழங்கி இருந்தபோதும் அவற்றை நிறைவேற்றக் கூடிய நிலையில் இல்லை. சுனாமியால் அந்நிலைமை மேலும் உக்கிரமடைந்துள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசியல் ஸ்திரமின்மையை சமாளிக்க சர்வாதிகார நடவடிக்கைகளை மேற்கொள்வது வழமை. அதன் ஒரு நடவடிக்கையே சாதாரண ஜனநாயக நிலைமைகளை மறுக்கும் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தியமை ஆகும். தேர்தலை நடத்தாமல் இருக்க எண்ணுவது அடுத்தக்கட்ட நடவடிக்கைக்கான நகர்வாகும். இதில் சந்திரிகா தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தை விட நாட்டை கட்டியெழுப்புதல் என்ற பாசாங்கில் ஆளும்வர்க்கம் எவ்வித இடையூறுபின்றி ஆட்சியை நடத்துவதற்கான உறுதிப்பாட்டை தேடிக் கொள்ளும் உள்நோக்கமே அடிப்படையானது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இதனை அடிப்படையாகக் கொண்டே எதிக்கட்சிகளையும் சம்பந்தப்படுத்திக் கொண்டு நிவாரண நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்க முயற்சிக்கிறது. நிவாரண நடவடிக்கைகளில் ஹெல உறுமய தலைவர்களையும் ஈடுபடுத்தியுள்ளது. ஐ.தே.கட்சியின் சில தலைவர்களை ஈடுபடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டும் வருகின்றன.

தொழிற்சங்கங்களையும் மௌனமாக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. ஆளும் முன்னணியில் முக்கிய கட்சியான சுதந்திரக் கட்சியின் பெரிய தொழிற்சங்கமான சுதந்திர ஊழியர் சங்கம் (நிதாஸ் சேவக சங்கமய) சுனாமியால் பாதிக்கப்பட்ட நாட்டை கட்டியெழுப்புவதே பிரதான கடமையாதலால் இன்னும் ஒருவருடத்திற்கு எவ்வித வேலைநிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட போவதில்லை என அறிவித்துள்ளது. இச்சங்கம் சுதந்திரக்கட்சி அரசாங்கத்தை நடத்தும்போது தொழிலாளர்- வேலைநிறுத்தப் போராட்டங்களை நடத்துவதே இல்லை. சுதந்திரக்கட்சி எதிர்க்கட்சியில் இருக்கும்போதே வேலைநிறுத்தப் போராட்டங்களை நடத்தும். எனினும் தொழிலாளர் போராட்டங்களுக்கு எதிராக பலமான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் நோக்கத்திலேயே அச்சங்கம் அம்முடிவை வெளியிட்டுள்ளது. அதற்கு ஊடகங்கள் கூடிய பிரசாரங்களை கொடுத்து வருகின்றன. இதெல்லாம் அரசாங்கத்தின் சர்வாதிகாரப் போக்கிற்கு உதவும் நடவடிக்கைகளாகும்.

மக்களும் மக்கள் நலனில் அக்கறையுள்ள எவரும் ஜனநாயக உரிமைகளை எக்காரணம் கொண்டும் விட்டுக் கொடுக்க முடியாது. போர் நடந்தகாலத்தில் போரின் பெயரால் மக்கள் விரோத ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது சுனாமியின் பேரால் அந்நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுனாமியாலும். யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரணம் அளிக்கவும் பாதிக்கப்பட்ட நாட்டை கட்டியெழுப்பவும் ஜனநாயக கட்டமைப்புகளும் வேலைத்திட்டங்களும் அவசியமாகும். பேரினவாத ஆளும் வர்க்க இருப்புக்கும் நீடிப்பிற்கும் சுனாமியின் பெயரால் ஜனநாயக விரோத சர்வாதிகாரத்திற்கு செல்வதை மக்கள் அனுமதிக்க முடியாது.

-ஆசிரியர் குழு-

# சுனாமிக் கடற்கோளின் பேரழிவுகளும் அரசியல் ராணுவ நகர்வுகளும்

2004 டிசம்பர் 26ம் திகதி காலையில் எழுந்த சுனாமி கடல் பேரலையின் அதிவேக வீச்சுக்கு வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு கரையோர மக்கள் பல்லாயிரக் கணக்கில் பலியாகிப் போயினர். இப்பேரலை நடாத்திய ஊழித்தாண்டவத்தின் அதிர்ச்சியில் இருந்தும் துயரம் சோகத்திலிருந்தும் மக்கள் இன்னும் மீளவே இல்லை. இந்தனோஷியாவின் சுமாத்திரா தீவில் ஏற்பட்ட பூமி வெடிப்பு அதிர் வினால் உருவாகிய சுனாமிப் பேரலை தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளையே அதிகமாகத் தாக்கியது. இந்தனோசியாவிற்கு அடுத்ததாக இலங்கையே வரலாறு காணாத உயிர் அழிவுகளையும் உடமை இழப்புகளையும் கண்டு கொண்டது.

இன மத மொழி பிரதேச வேறுபாடின்றி வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு கரையோர மக்கள் அனர்த்தங்களுக்கு ஆளாகினர். இவர்களில் ஏகப் பெரும் பான்மைபோர் மீனவர்களும் சிறு தொழில் புரியும் மக்களுமாவர். வாழ்க்கையில் நலிவுற்று வாழ்வுக்காக கடலோடும் காற்றோடும் அன்றாடம் போராடி உழைப்பாளிகளாக வாழ்ந்து வந்த மக்களை இவ் இயற்கை பேரழிவு பலியெடுத்த நிகழ்வு சோகத்திலும் சோகமானதாகும்.

இச் சுனாமிப் பேரழிவு இடம் பெற்ற பதினாங்கு நாடுகளில் இலங்கை உட்பட எந்தவொரு நாட்டு மக்களுக்கும் சுனாமி அனர்த்த முன் அனுபவம் இருந்ததில்லை. புயல் வெள்ளம் வரட்சி மண் சரிவுகள் ஏற்கனவே இலங்கை மக்கள் அனுபவித்தவைகளே. ஆனால் சுனாமி வரலாற்றில் முதல் பேரழிவு நிகழ்வேயாகும்.

சுனாமி பற்றிய முழுத்தகவல்களையும் அதன் அழிவு அம்சங்களையும் விஞ்ஞான தொழில் நுட்பரீதியிலும் அனுபவ ரீதியிலும் அறிந்து செயலாற்றி வந்த நாடு ஐக்கிய அமெரிக்கா. அன்று சுமாத்திரா தீவில் பூமி வெடிப்பு அதிர்வு ஏற்பட்ட பதினைந்து நிமிடங்களில் அது அமெரிக்க அவதானிப்பு நிலையத்தில் பதிவாகியிருக்கிறது. 9.0 ரிட்சர் அளவு அதிர்வினால் ஏற்பட்ட சுனாமி கடற் பேரலை விளைவிக்கக் கூடிய அழிவுகள் அமெரிக்காவிற்கு தெரியாத ஒன்றல்ல. அச்சுனாமி தெற்கு தென் கிழக்கு ஆசிய நாடுகளை நோக்கிச் சென்று கொண்டிருப்பதும் அமெரிக்காவிற்கு நன்கு தெரிந்திருந்தது. தனது டிகாகோ கார்சிய கடற் படைத் தளத்திற்கு முன் கூட்டியே தகவல் அனுப்பிய அமெரிக்கா இரண்டு மணிநேர அவகாசம் இருந்தும் சுனாமி தாக்கிய எந்த வொரு நாட்டிற்கும் தகவல் அனுப்பவில்லை. இது ஏன்? என்பது அமெரிக்க ஆளும் வர்க்கத்தை விரல் சுட்டிக் கேட்க வேண்டிய கேள்வியாக இருந்து வருகின்றது. ஆனால் சுனாமிப் பேரழிவைத் தொடர்ந்து இந்த னோசியாவிலும் இலங்கையிலும் அமெரிக்கா தனது காய்களை நகர்த்தி வரும் நடைமுறைகளை உற்று அவதானிப் போருக்கு சுனாமி பற்றி அமெரிக்க ஆளும் வர்க்கம் மௌனம் காத்துக் கொண்டமையின் உள்நோக்கம் இலகுவில் புரியக் கூடியதாகும்.

சுனாமிப் பேரழிவினால் சுமார் நாற்பதினாயிரம் மக்களுக்கு மேல் உயிர் இழந்தும் காணாமல் போயிமுள்ளனர். இத்தொகை மேலும் அதிகரிக்கும் சூழலே தொடர்கிறது. இருபது வருட கொடிய பேரினவாத யுத்தத்தில் இழக்கப்பட்ட இன்னுயிர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோரை இரு மணி நேரத்திற்குள் சுனாமிப் பேரழிவு காவு கொண்டுவிட்ட கொடுமையை கரையோர மக்கள் அனுபவித்துக் கொண்டனர்.

தத்தம் உறவுகளை இழந்து குடும்பத்தவர்களை காணாது தவிக்கும் மக்களின் சோக உணர்வுகளுக்கு தமிழ் சிங்கள முஸ்லீம் என்ற பேதம் காணப்படவில்லை. அடிப்படையான மனித உணர்வுகளே மேலோங்கியுள் என. கண்முன்னே சில நிமிடங்களில் சுனாமிப் பேரலைக்கு தம்மவர்களைப் பலி கொடுத்து விட்டு வீடு வாசல்கள் தொழில் உபகரணங்கள் யாவும் அழிவுற்றுப் போனமையைக் கண்ட மக்களுக்கு ஆறுதல் கூறும் வார்த்தைகளே இல்லை. அரசாங்கம் வெளி நாடுகளுக்கு இரந்து அழைப்பு விடுத்தது. மனிதபிமான உதவிகள் வந்தன. உள் நாட்டில் பாதிக்கப்படாத மக்கள் தம்மாலான உதவிகள் புரிந்தனர். ஆனால் இவற்றையெல்லாம் முறைப்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடையச் செய்வதில் அரசாங்கயந்திரம் செயல்படவில்லை என்ற பெரும் குற்றச் சாட்டுக்கள் மக்கள் மத்தியில் இருந்து எழுந்துள்ளன.

சுனாமிப் பேரலை இடம் பெற்று ஒரு வாரம் மட்டும் தான் ஆளும் வர்க்க அரசியல் சக்திகள் மௌனம் காத்து வந்தன. அதன் பின் தத்தமது வர்க்க நிலைப்பாடுகளையும் பேரினவாத

**-வெகுஜனன்-**

செயற்பாடுகளையும் ஏகாதிபத்திய அரவணைப்புகளையும் கச்சிதமாக செயல்படுத்த ஆரம்பித்தன. அதிக அழிவுகளைக் கண்ட வடக்கு கிழக்கைப் புறக்கணிக்கவும் யுத்தத்தால் நலிவுற்றுப்போன அப் பிரதேசங்ளை இச்சந்தர்ப்பத்துடன் முற்றாகவே தலையெடுக்க விடாது தடுக்கும் வஞ் சகமும் வக்கிரமும் கொண்ட செயற்பாடுகளை அரசாங்கம் கவனமாக முன்னெடுத்துக் கொண்டது. சுனாமிப் பேரழிவுச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி அரசாங்கம் உள்ளார்ந்த ரீதியில் தனது அரசியல் ராணுவ

> அமெரிக்காவின் இலங்கை மீதான கால்பதிப்பு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கைத் தீவை மிதக்கும் ராணுவக்கப்பலாக மாற்றும் ராணுவ அரசியல் மூலோபாயத்தின் ஆரம்பம் என்றே கூறுதல் வேண்டும். இதனால் அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டி வலுவடையப் போகின்றது. அதேவேளை தமிழ் மக்க ளின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் அற்ப சலுகைகளுடன் நசுக்கப்படும். அல்லது அமெரிக்காவினால் தனது இருப்பின் நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்படும் அபாயநிலையே தோன்றியு ள்ளது.

நகர்வுகளை முன்தள்ளிக் கொண்டது. ஜனாதிபதி பிரதமர் ஜே.வி.பி ஆகிய ஆளும் தரப்பு குழுக்களிடையே ஒரு மித்த கருத்து காணப்படவில்லை. இவர்களுக்கிடையிலான போட்டியும் ஒரு வரை மற்றவர் தடக்கி வீழ்த்தும் செயல்களையே காணமுடிகின்றது. சகல தையும் ஜனாதிபதியே தன் அதிகாரத்தின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்ற நிலையே காணப்படுகின்றது. இதனால் மேற் கூறிய முத்தரப்பினரிடையே அரசியல் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்க இருந்த பல்வேறு அரசியல் அதிகாரத்திற்கான செயற்பாடுகளை சுனாமிப் பேரலை தடுத்து பின்னுக்குத் தள்ளி விட்டுள்ளது. இதனால் ஐக்கிய தேசியக் கட்சி செய்வதறியாது புதிய வியூகங்களை வகுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. ஆனால் பொருளதார அரசியல் ரீதியில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி நின்ற ஜனாதிபதிக்கும் ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்திற்கும் சுனாமிப்பேரழிவு வரப்பிரசாதமாகவே அமைந்து கொண்டது. வெளிநாட்டு உதவிகள் பல வழிகளிலும் கிடைக்கும் வாய்ப்பும் ஏற்கனவே இருந்து வந்த கடன்களில் பல ரத்து செய்யப்படவும் கூடிய சூழலும் தோன்றின. உதவிகள் பல கிடைத்த போதிலும் அவை பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் மக்களுக்கும் கிடைக்கின்றதா? என்பதில் இன்னும் தெளிவான பதில் இல்லை. அழிவுகளைச் சந்தித்த மக்களின் மீள் வாழ்வுக்கான பல முனைச் செயற்பாடுகளுக்குரிய திட்டமோ தனி அமைப்போ இதுவரை பாரபட்சமற்ற வழிகளில் ஏற்படுத்தப்படவில்லை.

இச் சுனாமிப் பேரலை ஏற்படுத்திய அழிவுகளுடன் சேர்த்து விடுதலைப் புலிகளை அழித்து விட வேண்டும் என்பதில் அரசியல் ராணுவ திட்டங்கள் உள்ளுரவே செயற்பட ஆரம்பித்திருப்பதை சம்பவங்கள் உணர்த்தி வருகின்றன. குறிப்பாக அமெரிக்கா இந்தியா உட்பட அந்நிய ராணுவமும் தளபாடங்களும் கப்பல்கள் விமானங்கள் வந்துள்ளமை ஏதோ இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்கள் மீதான மனிதாபிமான அக்கறையினால் அல்ல என்பது புரிந்து கொள்ளப்படல் வேண்டும்.

சுனாமிப் பேரலை அழிவைச் சாட்டாக வைத்து அமெரிக்க ராணுவம் வரவழைக்கப்பட்டமை தற்செயலான தொன்றல்ல. அமெரிக்க ராணுவத்தை வரவழைப்பதில் ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சர் முமரம் காட்டியதுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றிருக்கிறது. தமிழர் கூட்டமைப்பினரும் புலிகள் இயக்கமும் கூட அமெரிக்க ராணுவ வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை. இதன் எதிர்கால விளைவுகளை எல்லோரும் காணவே செய்வார்கள்.

சுனாமிப் பேரலையின் அனர்த்தங்களுடன் இலங்கையின் அரசியல் ராணுவ நகர்வுகள் புதிய திருப்பு முனையைப் பெற்றுள்ளன. இப்படி ஒரு நிலை ஏற்படும் என இந்தியா முற்றிலும் எதிர்பார்க்க வில்லை. ஆனால் அமெரிக்கா வின் நகர்வுகள் மிக வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றன. மனி தாபிமான ரீதியில் மீட்புப் பணிக்கா கவே அமெரிக்க ராணுவம் வந்துள்ள தாக நம்புவோரும் மக்களை நம்பும்படி கூறி வருவோரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நயவஞ்சகத் திட்டங்களை அறியாத அரசியல் அப்பாவிகள் என்று இலகுவில் கூறிவிட முடியாது.

அமெரிக்காவின் இலங்கை மீதான கால் பதிப்பு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கைத் தீவை மிதக்கும் ராணுவக் கப்பலாக மாற்றும் ராணுவ அரசியல் மூலோபாயத்தின் ஆரம்பம் என்றே கூறுதல் வேண்டும். இதனால் அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டி வலுவடையப் போகின்றது. அதேவேளை தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் அற்பசலுகைகளுடன் நசுக்கப்படும். அல்லது அமெரிக்காவினால் தனது இருப்பின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அபாயநிலையே தோன்றியுள்ளது.

எனவே மாக்சிச லெனினிச வாதிகளும் நேர்மையான இடதுசாரிகளும் ஜனநாயக சக்திகளும் ஏற்கனவே முன்னெச்சரிக்கை செய்து வந்த விடயங்கள் இன்று சுனாமிப் பேரழிவின் பின்னால் நடைமுறைக்கு வந்துள்ளமையை மக்கள் காண்கிறார்கள். இவ் அபாயத்தை முன்னுணர்ந்து செயற் பட வேண்டிய தேவை சகலதரப்பு மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் பாகுபாடற்ற புனரமைப்பு, புனர்வாழ்வு விரைந்து செய்யப்படல் வேண்டும். சுயநிர்ணய உரிமை அடிப்படையி லான சுயாட்சித் தீர்வு வடக்கு கிழக்கிற்கு வழங்கப்பட வேண்டும். அந்நிய ராணுவங்கள் அனைத்தும் வெளி யேற்றப்பட வேண்டும். இதற்கான பரந்துபட்ட மக்கள் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்.

# தேசியத்தை வலுப்படுத்துவது பற்றி

-இமயவரம்பன்-

வடக்கு கிழக்குக்கு வெளியேயுள்ள தமிழர்களிற் சில பகுதியினர் போராட்டத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு தராததால் விரக்தியுற்ற சிலர் அப்பிரதேசத்தை விட்டு வெளியேறியவர்களைத் துரோகிகள் எனுமளவுக்குப் போயுள்ளனர். புலம் பெயர்ந்தோரிடையேயும், குறிப்பாக ஐரோப்பா, அவுஸ்ரேலியா, வடஅமெரிக் காவுக்குப் போனோரிடையில், இவ் வாறான அணுகுமுறையைக் கவனிக்கலாம். தமிழர் விடுதலை இயக்கங்கள் சனநாயக வெகுசனப் போராட்ட மரபின்வழி வந்தவையல்ல. அதன் விளைவாக, ஆணை அதிகாரம் என்பது கலந்துரையாடலையும் விவாதத்தையும் மேவிவிட்டுள்ளது. இதன் ஒட்டுமொத்த விளைவு ஏதென்றால் நட்பாக இல்லாவிட்டாலும் நடுநிலையாகவேனும் இருந்திருக்கக்கூடிய பகுதியினரிட மிருந்து தனிமைப்படவும் அவர்களுடன் பகைக்கவும் நேரிட்டது. இப்பகுதியினரை விடுதலைப்புலிகளுக்கு மட்டுமில்லாமல் தேசிய இனப் பிரச்சினைக்கு நிலைக்ககூடிய தீர் வையும் வெறுப்பவர்கள் தமக்கு வசதியாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்தின் நன்மைக்காக மட்டுமல்லாமல் அயல்நாடுக ளில் வாழும் ஒடுக்கப்பட்ட தமிழ்ச் சமூகங்களது நலனுக்காகவும் இந் நிலைமை திருத்தப்பட வேண்டும். தமிழ்நாட்டில் வாழும் இடம்பெயர்ந்த தமிழரிற் பெரும் பகுதியினர் ஏற்கத்தகாத நிலைமைகளில் அகதிமுகாங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். சிறிய தொரு பகுதியினர் குடியுரிமையோ அகதி என்ற தகுதியோ இல்லாதபோதும் நடைமுறையில் தமிழ் நாட்டையே தமது தாயகமாக்கிக் கொண்டுள்ளனர். இந்தியாவின் ராணுவக்குறுக்கீட்டுக்குப் பின்பு, முக்கியமாக ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்பாக அரசியல் நிகழ்வுகள், ஊடகமட்டத்திலும் நிறுவனமட்டத்திலும் விடுதலைப்புலிகட்குப் பாதகமான நிலைப்பாட்டையும் தமிழ்த் தேசிய இனத்தின் கதிபற்றிய அசட்டையையும் ஏற்படுத்தியுள்ளன. அகதிகளின் நிர்க்கதியான நிலைமையாலும் இந்திய பொறுக்கியெடுக்கப்பட்ட முகவர்கள் மூலம் அவர்கட்கான உதவிகள் வழங்கப்படுவதாலும் அகதிகளுக்கு அரசியலில் குரல் மறுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசிய இயக்கங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்குடன் இந்திய நிறுவனத்தால் தொடக்கத்தில் ஊக்குவிக்கப்பட்ட குற்றச்செயற்காரர்கள் சிலரது நடவடிக்கைகளின் விளைவாக, விடுதலை இயக்கங்கள் பற்றிய அக்கறை பாதிக்கப்பட்டது. எவ்வாறெனினும், தமிழ்த்தேசிய இனத்தின் போராட்டத்துக்குக் கணிசமான வெகுசன ஆதரவு உள்ளது. தமிழ் நாட்டினதோ வேறெந்த மாநிலத்தினதோ தேர்தல் அரசியல் இலங்கையின் அரசியல் நிகழ்வுகளால் தீர்மானிக்கப்படாத போதும். அந்த ஆதரவு பேணப்பட வேண்டும். அந்த நிலைமையை வேறு விதமாகக் கற்பனை செய்வது மடமையாகும். செய்யத்தக்கது ஏதெனில் ஆளும் வர்க்கங்கள் எவ்வாறு இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தமது மேலாதிக்க நோக்கங்கட்காகப் பாவிக்கின்றன என்பதை வெளிப்படுத்திப் பாராளுமன்ற இடதுசாரிகள் முதல் ஃபாஸிஸ பாரதிய ஜனதா கட்சி வரை, தமிழ்நாட்டின் பிரதேசக் கட்சிகள் உட்பட்ட தலைமைகளின் உண்மையான இயல்பை இந்திய மக்கள் உணரச்செய்வதாகும்.

**ஏகாதிபத்தியமும் பிராந்திய மேலாதிக்கமும் விடுதலைப் போராட்டத்தை தத்தமது தேவைகளுக்காகவே பயன்படுத்தி வந்துள்ளன**

பெரும்பாலான தமிழ்த் தேசியவாதிகள் மறந்துபோன விடயமொன்றுண்டு. பாலஸ்தீன, தென்னாபிரிக்க, வடஅயர்லாந்து விடுதலை இயக்கங்கள் வழங்கிய ஆதரவும் அனுதாபமும் அவர் கட்கு நினைவிலில்லை. இன்றுவரை, உலகெங்கிலுமுள்ள மாக்ஸிய லெனினிய விடுதலை இயக்கங்கள் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவுள்ளதுடன் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை ஏற்கிறார்கள். இத்தகைய ஆதரவுக்கு அண்மைக் காலங்களில் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் பதில், உலகெல்லாமுள்ள மக்களின் பொது எதிரி போரில் மும்முரமாக இறங்கியுள்ளதோடு சியோனிஸ இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் போரை ஊக்குவிக்கிற வேளையில், இவற்றுக்கான எதிர்ப்பு போதிய அளவினதாக இல்லை என்பதாகும்.

அந்நிய ஆக்கிரமிப்புக்கும் ஒடுக்குமுறைக்குமெதிரான நியாயமான போராட்டங்களை ஆதரிப்பதன் மூலம் தமிழ் வெகுசனங்கள் விடுதலைக்காகப் போராடுகிற மக்களுடன் ஐக்கியங் காண வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் போது தமிழ் மக்களின் போராட்டம் பிற போராட்டங்களினின்று தனிமைப்பட நேரும். பாலஸ்தீனத்திலும் ஈராக்கிலும் நடக்கும் போராட்டங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தின் ஒரு உச்ச நிலையை அடையாளப்படுத்துகின்றன. ஏகாதிபத்தியவாதி கட்கெதிராகத் துணிந்து நின்கின்ற கியூபா, வெனசுவேலா ஆகிய நாடுகளுடன் ஐக்கியத்தை உருவாக்கும் தேவை உள்ளது.

ஏகாதிபத்தியத்தினதோ பிரதேச மேலாதிக்கச் சக்திகளினதோ வெறுப்பைச் சம்பாதிப்பது தமிழ்மக்களது போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் என்பது சிலரது பயம், உண்மையில், தங்களுடைய உடனடித் தேவைக்காகவென்றால் ஒழிய, எந்த விடுதலை இயக்கத்தையும் தேயச்செய்து நிராயுதபாணியாக்குவதையே ஏகாதிபத்தியமும் மேலாதிக்கமும் செய்கின்றன. தாம் ஆதரிக்கிற போராட்டங்களையும் தமது காரியம் கை கூடிய பிறகு தாம் ஆதரித்தவர்களை அப்படியே கை கழுவுகின்றன. இலங்கையுள் ஏகாதிபத்திய உலகமயமாக்கலை வசதிப்படுத்த இலங்கையின் தேசிய இன ஒடுக்கலை ஒரு இன ஒழிப்புப் போராக்குவதில் அமெரிக்கா முக்கிய பங்குவதித்ததை யாரும் மறக்கலா காது. போர் நிறுத்தப் பிரகடனத்திற்கும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்பமிடப்பட்டதற்கும் பின்னரும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் இந்திய மேலாதிக்கமும் இலங்கை அரசாங்கத்தின் ராணுவ வலிமையைக் கட்டி யெழுப்புவதற்கு நேரடியாகவும் மறை முகமாகவும் பங்களிக்கின்றன என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அமைதிப் பரிசாக 'அபிவிருத்திக்கான உதவி' வழங்குவதில் யப்பானுடைய நோக்கங்களும் கவனிப்புக்குட்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு. எந்த உண்மையான விடுதலைப்போராட்டச் சக்திக்கும் ஏகா திபத்தியம் மேலாதிக்கம் உலகமயமாதல் ஆதிக்கம் என்பவற்றை எதிர்ப்பதை விட வேறு தெரிவு இல்லை. எனினும், நெறி பிறழாத நிலைப்பாட்டுக்கும் தேவையற்ற சின மூட்டலுக்குமிடையே வேறுபாடுண்டு. அதேவேளை தந்திரோபாயமான மௌனம் என்பது ஆக்கிரமிப்பாளருக்கு அங்கீகாரம் வழங்கும் ஒரு சைகையாக விளங்கிக் கொள்ளப்படலாம். எனவே, தமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான சர்வதேசச் சக்திகள் யார் என்பது பற்றியும் அவர்கள் ஏகாதிபத்திய சக்திகளிடையிலும் மேலாதிக்க சக்தி களிடையிலும் இல்லை எனவும் மாறாக அவற்றுக்கு எதிரானவர் களிடையிலேயே உள்ளனர் எனவும் வெகுசனங்கள் தெளிவாக இருக்க வேண்டும். ஏகாதிபத்தியம் பற்றியும் மேலாதிக்கம் பற்றியுமான சகல மாயைகளும் எதிர்த்து அழிக்கப்பட வேண்டும். என். ஜி. ஓ க்கள் உட்பட்ட அவற்றின் முகவர்கள் விடுதலைப் போராட்டத்தை ஆட்டிவைப்பது முற்றாக எதிர்க்கப்பட வேண்டும்.

**ஒவ்வொரு உண்மையான தேசிய விடுதலை இயக்கமும் தன்னகத்தே ஏகாதிபத்திய எதிர்ப்பையே கொண்டுள்ளது. ஆனால் சமரசம் செய்த விடுதலை இயக்கங்கள் போராடிப் பெற்றவைகளையும் இழந்தே வந்துள்ளன.**

### போராட்டத்தை வலுப்படுத்துவது

தேசியத்தை வலுப்படுத்துவது தன்னளவிலேயே ஒரு குறிக்கோளல்ல. மாறாக, அது, தமிழ்த் தேசிய இனம் தேசிய இன ஒடுக்கலுக்கெதிராக நடத்தும் போராட்டத்தை வலுப்படுத்துகிற ஒரு வழி மட்டுமே. அகப் புற முரண்பாடுகள் பற்றிய ஒரு சரியான ஆய்வு, நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதைச் சரிவர அடையாளங்காண வழி செ்வதுடன் குறுகிய கால நீண்கால இலக்குக்களையும் போராட்டப் பாதையில் மேற் கொள்ள உகந்த தந்திரோபாய மூலோபாய நிலைப்பாடுகளையும் அடையாளங் காட்டும்.

தேசிய இனப்பிரச்சனை போராக இழிந்ததற்குப் பேரினவாத ஆளும் வர்க்கத்துக்கும் ஏகாதிபத்திய நலன் கட்குமிடையிலான ஒத்துழைப்புமே காரணம். எனவே விடுதலைப் போராட்டத்தால் ஏகாதிபத்திய எதிர்ப்பினின்று தன்னை விலக்கிக் கொள்ள இயலாது. ஆதலாற் போராட்டம் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பு ஏகாதிபத்தியத்திற்கும் மேலாதிக்கத்தும் எதிர்ப்பு என்ற இரு முனைகளில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அமைதிப் பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றமின்மை பேரினவாத ஆளும் வர்க்கத்தினதும் அதன் ஆதரவுச் சக்திகளினதும் நோக்கங்களைக் கேள்விக்குட்படுத்தியுள்ள தோடு தமிழ் மக்கள் மீது மீண்டும் போர் திணிக்கப்படும் அபாயத்தின் மீதும் கவனத்தை வேண்டி நிற்கிறது. போர் மூளாத போதிலும், கடந்த அரை நூற்றாண்டு கால விடுதலைப் போராட்டங்களின் அனுபவம், தமிழ்த் தேசிய இனத்தின் போராட்டம் நீண்டகாலத்துக்குத் தொடரக்கூடும் என்றே கூறுகிறது.

போராடுவது என்றால் அமைதிக்கான நடவடிக்கைகளைக் கைவிடுவதும் போருக்கு ஆயத்தமாவதும் என்பதாகாது. யதார்த்தமான சூழல் அரசியல் உட்படச் பல முனைகளிலும் அமைதிக்கான நடவடிக்கைகளிலும் போராட்டத்தைத் தொடர்கிற வேளை பல வேறு சாத்தியப்பாடுகட்கும் ஆயத்தமாக இருப்பதை வேண்டி நிற்கிறது.

ஒடுக்கு முறையாளர்களது இலக்கு தமிழ்மக்களைப் பிளவுபடுத்திப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதாகும். எனவே விடுதலைப் போராட்டத்தின் இலக்கு ஒடுக்குமுறையாளர்களையும் அவர்களது அயல் ஆதரவாளர்களையும் தனிமைப்படுத்துவதாகும். இதற்கு ஒவ்வொரு மட்டத்திலும் பெரும்பான்மையினரான ஒடுக்கப்பட்ட மக்களை இணைக்கக் கூடிய பிரச்சினைகளை இனங்கண்டு சிறுதொகையானோருக்கு எதிராகப் பலரை ஒன்றுபடுத்தும் அணுகுமுறை தேவை. ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் என்ற வகையிலும் பிற தேசிய இனங்களுடைய விடுதலைப் போராட்டங்களுடன் ஐக்கியப்படுதுவதன் மூலம், தமிழ்த் தேசிய இனத்தின் போராட்ட ஐக்கியம் ஏகாதிபத்திய, மேலாதிக்க ஒடுக்கு முறைக்கும் சுரண்டலுக்குமெதிரான உலக மக்களின் போராட்டத்துடன் ஒன்றுமையை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு உண்மையான தேசிய விடுதலை இயக்கமும் தன்னகத்தே ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கொண்டிருந்துள்ளது என்பதையும் ஏகாதிபத்தியத்துடனான ஒவ்வொரு சமரசமும் கடுமையாகப் போராடி வென்ற ஒவ்வொரு விடுதலையையும் இழந்துள்ளது என்பதையும் நாம் மறக்கலாகாது.

**ஒரு விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்தியத்துடன் தனது நெறிகளைச் சமரசத்துக்குட்படுத்தும் போது தனது மக்களைக் கைவிடுகிறது. எனவே சுயநிர்ணய உரிமை என்ற நெறியை எப்போதும் இறுகப்பற்றியிருப்பது முக்கியமானது.**

ஒரு விடுதலைப் போராட்டம் தனது நெறிகளைச் சமரசத்துக்குட்படுத்தும் போது தனது மக்களைக் கைவிடுகிறது. எனவே சுயநிர்ணய உரிமை என்ற நெறியை எப்போதும் இறுகப் பற்றியிருப்பது முக்கியமானது. மேலும் இந்த உரிமை அதன் உண்மையான நோக்கில் எல்லாத் தேசிய இனங்கட்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். ஏனெனில் வெவ்வேறு தேசிய இனங்கள் சுயவிருப்புடன் பரஸ்பர நம்பிக்கையின் பேரில் ஒருங்கினையும் ஒரே வழியைச் சுயநிர்ணயக்கோட்பாடு வழங்குகிறது. விடுதலைப் போராட்டம் ஒரு உயர்நிலை அல்லது முன்னோடிப்படை மூலம் குறுகிய காலத்தில் வெற்றிகளைப் பெற்றாலும் போராட்ட த்தின் நீடிப்பான தன்மை காரணமாக அது மக்கள் போராட்டத்தின் ஒரு பகுதியாவதுடன் மட்டுமன்றிப் போராட்டத்தின் இயக்கு சக்தியாயும் முடிவில் அதன் எசமானர்களாகவும் அமையுமளவு சனநாயகமானதாக இருக்க வேண்டும். இங்கு தான் வெகுச னப்பாதை மக்கள் யுத்தம் எனும் கரு த்தாக்கங்கள் முக்கியமாகின்றன. ஒவ்வொரு நிலவரத்தினதும் தேவைகளை உணர்ந்து அதற்கேற்ப பாவிக்கப்படும் போது, அவை, மக்களின் உடனடியான ஒடுக்கு முறையாளர்கட்கும் அவர்களது அந்நிய எசமானர்கட்கும் எதிராக மக்களுக்கு ஒரு இரட்டிப்பு வெற்றி யொன்றைப் பெற்றுத்தருகின்றன.

விடுதலைப் போராட்டத்தின் வலிமையும் வெற்றியும் மக்கள் எவ்வளவு தூரம் உற்சாகப்படுத்தப்பட்டு செயலூக்கம் கொண்டுள்ளனர் என்பதிலேயே தங்கியுள்ளன. இதற்குச் சுயநிர்ணயம், சனநாயகம், சமூக நீதியின் அடிப்படையிலான ஒற்றுமை ஆகிய கோட்பாடு களை இறுக்கப் பற்றி நிற்பது அவசியம்.

முற்றும்

## அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றி தோழர் மாஓசேதுங்

அமெரிக்க ஏகாதிபத்தியம் எங்கும் தனிக்காட்டு ராஜா போல் வலம் வந்து தன்னை மென்மேலும் தனிமைப்படுத்தியுள்ளது. அடிமைப்படுத்தப்பட விரும்பாத எவரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைகளிலுள்ள அணுக்குண்டுகளுக்கோ, ஜலவாயுக் குண்டுகளுக்கோ அஞ்சமாட்டார்கள். அமெரிக்க ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான உலக மக்களின் கோபஅலைகள் தடுக்கப்பட முடியாதவை. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிருடிகளுக்கும் எதிரான உலக மக்களின் போராட்டம் மேலும் மகத்தான வெற்றிகளைப் பெறுவது நிச்சயம். * 1958 *

அமெரிக்க ஏகபோக முதலாளித்துவக் கும்பல்கள் தமது ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கைகளை முன்னடத்துவதில் அழுங்குப் பிடியாய் நின்றால், உலக மக்கள் அனைவரும் அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கும் நாள் நிச்சயம் வரும். அமெரிக்காவின் சகபாடிகளுக்கும் இதேகதி தான் காத்திருக்கின்றது. 1964

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும் (17)

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

இலங்கையில் உயர் கல்வி சமூக, பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு முறையாகத் திட்டமிடப்பட்டதல்ல. இன்னன்ன துறைகட்கு இத்தனைபேர் தேவை என்ற கணிப்பு எந்தத் திட்டமிடலிலும் இருந்ததாக நான் எண்ணவில்லை. கல்விக்கும் உயர்பதவிக்கும் சமூதாயத்தில் உயர் நிலைக்குமுள்ள உறவின் அடிப்படையிலேயே உயர் கல்விக்கான கோரிக்கை அமைந்திருந்தது.

இலங்கைக்கு வருடாந்தம் எத்தனை மருத்துவர்கள் தேவை என்ற கணிப்பு இலங்கையின் மருத்துவக் கல்வித் துறையின் விருத்தியையும் மருத்துவ வசதிகளை முழு நாட்டுக்கும் விரிவு படுத்தும் திட்டத்தையும் ஒருங் கிணைக்க வேண்டும். இலங்கையின் பொருளாதாரவிருத்தி திட்டம் விவசாயம் கால் நடை மருத்துவம் பொறியியல் போன்ற துறைகளில் ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை பேர் தேவை என்ற கணிப்பின் பேரில் உயர் கல்விக்கு வழிகாட்டியிருக்க வேண்டும். இலங்கையின் உயர்கல்வித் துறை பிரித்தானியரது ஆட்சியின் கீழ் நிருவாக இயந்திரத்தை நடத்தத் தேவையான கனவான்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் தொடங்கியது. சமூக மேல்நிலையாக்கத்துக்குத் துடித்துக் கொண்டிருந்த நடுத்தரவர்க்கத்தினரை குறிப்பாகப் ஆங்கில பாடசாலைக் கல்வி வசதிகள் உள்ள பகுதிகள் வாழ்ந்த நகர் சார்ந்த வர்க்கத்தினர் உயர் கல்வியைத் தமது சமூக மேம்பாட்டுக்கான பாதையாகவே கண்டனர். இது இயல்பானதுங் கூட. ஒரு மாணவர் பொறியியலையோ விஞ்ஞானத்தையோ மருத்துவத்தையோ நாடுவதற்கு அவருக்கு அத் துறை சார்ந்த ஈடுபாட்டை விடவும் அதிகமாகத் தனது ஆற்றலுக்கு அமைய எந்தத் துறையில் புகுந்தால் உயர் பதவிக்கு வரலாம் அல்லது ஒரு உத்தியோகத்தையாவது உறுதிப் படுத்திக் கொள்ளலாம் என்பது வலிய தூண்டுதலாயிற்று. குறிப்பாக கலைப்பட்டதாரிகளின் உயர் பதவி வாய்ப்புக்கள் குறையத் தொடங்கிய பின்பு, வசதியும் செல்வாக்குமுள்ள குடும்பத்துப் பிள்ளைளகள் போக மற்றவர்கள் கலைத்துறையைத் தெரிந்ததற்கான காரணம் விஞ்ஞானக் கல்விக்கான வாய்ப்புக்கள் இல்லாமாற் போனமையே என்ற நிலை 1960களின் நடுப்பகுதிகளில் வெளிவெளியாகவே தெரிந்தது. குறிப்பிட்ட பாடங்களில் ஈடுபாடு காரணமாகக் கலைத்துறையை நாடியவர்கள் இருந்தாலும், அவர்களின் தொகை 1960களில் வேகமாகக் சரிந்தது. இவ்வாறு வேலை வாய்ப்பின்மை கலைப் பீடத்துட்புகுந்த மாணவர்களது தரத்திற் சரிவுக்கான சூழ்நிலையை உருவாக்கியது.

## கீழே இறங்கும் பட்டங்கள்

கலைப்பீடத்தில் சில துறைகளில் சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொண்டவர் கட்கு அரச நிருவாகத்திலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்புக்கள் இருந்தன. தேசிய பொருளாதாரம் விரிவடைந்ததையொட்டி அரச நிருவாகத்திலும் தனியார் துறையிலும் கிட்டிய வேலை வாய்ப்புக்கள் கலைப்பட்டதாரிகட்கு எட்டிய போதும் 1950களின் எதிப்பார்ப்புக்கள் அடுத்த தசாப்தத்தில் மங்கி விட்டன. கொலனிய ஆட்சியில் எட்டாம் வகுப்பு பின்பு பத்தாம் வகுப்புப் படித்து ஏற்கக் கூடிய பதவிகள் பட்டம் பெற்றவர்கட்கே கிட்டும் என்கிற நிலை ஏற்படப் பதினைந்து ஆண்டுகள் கூட எடுக்கவில்லை. அதன் பின்பு பட்டம் பெற்றாலும் வேலை நிச்சயமில்லை என்ற நிலைமை உருவானது. இதற்கான காரணங்களுள் உயர் கல்வி என்பது தேசியப் பொருளாதார வேலை வாய்ப்புக் கொள்கை கட்கு ஏற்றபடி திட்டமிடப் படாமை எனலாம். இலங்கைப் பல்கலைக்கழகம் 1960 வரை ஓரளவுக்குச் சுயாதீனமான முறையில் பல்கலைக்கழக அனுமதியைக் கையாண்டது. உயர்கல்விக்கான தேவை அதிகமான போது பல்கலைக்கழக அனுமதியைக் கூட்டும் முடிவு அரசாங்கத்துடன் கலந்தாலோசித்தே எடுக்கப்பட்டது. எனினும் பல்கலைக்கழகம் மாணவர் வரவைக் கூட்டிய வேகத்தை விட அதிகளவில் உயர் கல்விக்கான தகுதி பெற்ற மாணவர் தொகை கூடத் தொடங்கியது. இது போக வேறு விதமான அரசியல் நெருக்குவாரங்களும் கலந்து கொள்ளத் தொடங்கின.

பிரிவேன எனப்படும் பௌத்த உயர் கல்வி நிறுவனங்கள் இலங்கையில் இருந்தன. இவற்றில் இரண்டு சிங்கள பௌத்த அரசியல் நெருக்குவாரங்களால் பல்கலைக் கழகங்களாகத் தரமுயர்த்தப்பட்டன. பண்டாரநாயக்க கொண்டு வந்த இந்த மாற்றம் கலைப்பீடத்திற்கு அனுமதியின் அளவை விரிவு படுத்த ஓரளவு வசதி செய்த போதும் புதிதாக உருவான வித்யோதய வித்தியாலங்கார பல்கலைக்கழகங்களின் பழைய ஆசிரியர்கள் பலர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களாவதற்கு கல்வித் தகுதி உள்ளவர்களாக இருக்கவில்லை. பல புத்த பிக்குமாரும் அங்கு ஆசிரியர்களாக இருந்தனர். இதனால் இந்தப் பல்கலைக்கழப் பட்டதாரிகள் இலங்கைப் பல்கலைக்கழகப்பட்டதாரிகளுடன் வேலைக்கும் போட்டியிடுவது கொஞ்சம் சிரமமாகவே இருந்தது. வேலை வாய்ப்புக்களில் அரசியல் வாதிகளின் குறுக்கீடு கணிசமான வர்கட்கு உதவியது உண்மை.

எவ்வாறாயினும் இலங்கைப்பல்கலைக்கழகப்பட்டம் பெறுவதற்கான கோரிக்கை கூடிக் கொண்டே போனது. பல்கலைக் கழகத்தைப் பேராதனைக்கு மாற்றியதையொட்டி மாணவர் தொகையைக் கொஞ்சம் கூட்ட முடிந்தது. எனினும் 1960ம் ஆண்டு நடந்த பல்கலைக்கழகத் தேர்வில் சனாதிபதி வில்லியம் கோபல்லாவின் மகன் மொண்டி கோபல்லாவ தேர்வுக்கு ஏற்றளவு புள்ளிகள் பெறாததால் அவரை அனுமதிக்கும் விதமாகக் கலைப்பீடத்துக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களது தொகை இருமடங் காக்கப்பட்டது. மேலதிகமாக அனுமதிக்கப்பட்ட நூற்றுச் சொச்ச மாணவர்கள் பேராதனைய்யில் வதிவிடமற்ற மாணவர்கள் என்ற அடிப்படையில் சேர்க்கப்பட்டனர். இதனோடு பேராதனையில் அமைந்த பல்கலைக்கழக வளாகம் அதைக் கேம்பிறிஜ் பல்கலைக்கழகம் போல சான்றோருக்கான ஒரு தனியுலகமாக நிறுவும் ஆவலின் அடிப்படையில் அமைத்த கல்வி மானும் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது துணை வேந்தருமான ஐவர் ஜெனிங்ஸின் கனவுலகப் பல்கலைக்கழக வளாகம் தரைக்கு இறங்கலாயிற்று. ஜெனிங்ஸின் மேட்டுக்குடிப் பார்வையில் அமைந்த இலங்கைப் பல்கலைக்கழகம் சில நல்ல பண்புகளையும் மரபுகளையும் உள்ளடக்கியிருந்தது. அது ஒரு கன வான்களின் நாகரிக உலகமாகத் தன் சூழலுக்கு வெளியே நடப்பன பற்றிக் கவலையின்றி வசதியான வீடுகளும் மாணவர் விடுதிகளும் மனதுக்கினிய இயற்கைக் சூழலுடன் இருந்தது. அதில் ஏற்பட்ட மாற்றங்களை அடையாளப் படுத்துவதானால் மாணவர்களுக்குச் அறைக்குள் முகங்கழுவும் தொட்டியுடன் கூடிய பெரிய தனி அறைகளும் மூன்று வேளைக்கும் சுவையான உணவும் என்று தொடங்கிய பல்கலைக்கழக வளாகத்தில் 30 வருடங்கட்குப் பின்பு அறைக்கு மூன்று பேர் வெளியிலிருந்து மட்டரகமான உணவு என்ற விதமாக வசதிகள் மாறியதையும் மாணவர்களிற் காற்பங்கினராவது விடுதி வதியில்லாமல் இருக்கிற இன்றைய நிலையையும் குறிப்பிடலாம்.

கலைப்பீட அனுமதிகள் கூட்டப்பட்ட பின்பு மாணவர் அனுமதியை மேலும் அதிகரிக்குமாறு அழுத்தங்கள் எழுந்தன. எனவே கொழும்பு பல்கலைகழக வளாகத்துக்கு அருகாக இருந்த முன்னாள் குதிரைப் பந்தயத்திடலில் இருந்த பார்வையாளர் கட்கான கட்டிடங்களில் வகுப்புக்கள் நடத்தப்பட்டன. பின்பு தற்காலிகக் கட்டிடங்கள் நிறுவப்பட்டு அவற்றிற் சில நிரந்தரமாயின. பொறியியற் பீடம் 1964ல் பேராதனைக்கு மாற்றப்பட்ட பின்பு அதன் தகரக்கூரைக் கட்டிடங்களும் பயன்பட்டன.

எவ்வாறாயினும் கலைப்பட்டதாரிகளின் தொகையின் அதிகரிப்பு வேலைவாய்ப்பையும் கலைப்பட்டதாரிகளுக்கு இருந்த சமூக அந்தஸ்தையும் பெருமளவுக்கும் பாதித்தன. மறுபுறம் தாய்மொழிக்கல்வி அறிமுகப்படுத்தபட்டாலும் உயர் கல்விக்கான வாசிப்புக்குப் போதிய நூல்கள் சிங்களத்திலோ தமிழிலோ போதியளவில் வெளியிடப்படவில்லை. இதன் காரணமாக மாணவர்கள் விரிவுரையாளர்கள் வழங்குகிற குறிப்புக்களை அதிகளவுக்கு நம்பியிருக்கிற நிலை ஏற்பட்டது.

> இலங்கையின் உயர் கல்வித்துறை பிரித்தானியரது ஆட்சியின் கீழ் நிர்வாக யந்திரத்திற்கு தேவையான கனவான்களை உற்பத்தி செய்வதற்கே உருவாக்கப்பட்டது. இவ் உயர் கல்வியானது இலங்கையின் சமூக பொருளாதார வளர்ச்சியைச் கருத்திற் கொண்டு முறையாகத் திட்டமிடப்பட்டதல்ல.

காலப் போக்கில் சுயாதீனமாக் வாசித்துத் தமது அறிவை வளர்க்கக் கூடிய மாணவர்களது விகிதம் வேகமாகக் குறையத் தொடங்கியது. 1970 அளவில் நூலகம் புத்தகங்களையோ சஞ்சிகைகளையோ எடுத்து வாசிப்பதாற்கான இடமாக இல்லாமல் வகுப்பறையில் எழுதிய குறிப்புக்களை வாசிக்கிற இடமாக மாறிற்று.

தகவல்களைக் கேள்விக்குட்படுத்தும் பயிற்சியும் எதையும் விவாதத்துக்கு உட்படுத்தும் பழக்கமும் மெல்ல மெல்ல நலியத் தொடங்கின. இவ்வாறு கலைப்பட்டதாரிகளது தரம் மேலும் தாழத் தொடங்கியது.

எவ்வாறாயினும் மாணவர் சமூகத்திலே இருந்த ஒரு வலிய சனநாயக மரபு 1970 வரையிலேனும் திறந்த விவாதங்களையும் பல்வகைப்பட்ட சமூக பொழுதுபோக்கு அறிவுசார்ந்த அக்கறையுடைய செயற்பாடுகளையும் இயலுமாக்கியது. பேராதனையின் இருந்த விளையாட்டு உடற்பயிற்சி வசதிகள் போன்றவையும் மாணவர் தொகைக்கு ஈடு கொடுக்கப் போதாமல் இருந்தன. எவ்வாறாயினும் பேராதனையில் 1965 ம் ஆண்டு நடந்த கடுமையான மாணவர்- பொலிஸ் மோதல் போக அடிப்படையில் ஒரு ஆரோக்கியமான சூழல் 1970 வரை இருந்து வந்தது.

அதே வேளை மாணவர்களையும் அரசியல் அதிகாரத் தொடர்புகளையும் தமது சுயலாபத்துக்காகப் பயன்படுத்துகிற விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் இல்லாமல் இல்லை. காலப் போக்கில் இவர்கள் வெளிவெளியாகவே செயற்படத் தொடங்கினர். பல்கலைக்கழக மரபு வலிதாக இருந்ததால் இப்படிப் பட்டவர்கள் ஒரு சிறுபான்மையினராகவே இருந்தனர். எனினும்

**பேராசிரியர் சி.சிவசேகரம்**

1965 க்குப் பின்பு மாணவர்கள் நடுவே தமது எதிர்காலம் பற்றிய நம்பிக்கை வேகமாக தளரத் தொடங்கியது. இந்த விரக்தி மாணவர்களது அரசியலில் புதிய பரிமாணங்களைப் புகுத்தியது. பல்கலைக் கழகத்தில் கலைப் பட்டதாரிகளின் தரத்தின் சரிவை ஆங்கில மூலக் கல்வியினின்று தாய் மொழிக் கல்விக்கு மாற்றியதுடன் நேரடியாகத் தொடர்புபடுத்துகிறவர்கள் உள்ளனர். தாய்மொழியில் போதிய நூல்கள் இல்லாமை ஒரு பெரிய குறைபாடு எனினும் வாசிப்புப் பழக்கத்தில் ஏற்பட்ட சரிவும் கல்வியின் மூலம் பெறக் கூடியன பற்றிய எதிர்பார்ப்புக்களின் சரிவுமே கல்வியின் தரத்தைமோசமாகப் பாதித்தன. அது போகத் தாய்மொழிக் கல்வி பற்றிய அக்கறை 1960களின் பிற்பகுதியிலேயே சரியத் தொடங்கிவிட்டதன் விளைவாகவும் பாடநூல் பொது வாசிப்பு நூலாக்க முயற்சிகளும் குறைவாகவே இருந்துவந்துள்ளன. கலைப்பட்டப்படிப்பைப் பாதித்த பிரச்னை விஞ்ஞானத்தையும் பாதிக்க அதிகங் காலம் எடுக்கவில்லை. உண்மையில் விஞ்ஞான வசதியுள்ள பாடசாலைகளின் போதாமையும் பல்கலைக்கழகங்கள் மேலும் அதிக விஞ்ஞானப் பட்டதாரிகளையும் உருவாக்காத காரணத்தாலேயே விஞ்ஞானப்பட்டதாரிகளது வேலையின்மை கலைப்பட்டதாரிகளது பிரச்சனை அளவுக்கு மோசமாக வில்லை.

# ஆழிப்பேரலையின் ஆட்கொள்ளலும் இலங்கையும்

அரசியல் சூழல் ,பொருளாதாரச் சூழல், பௌத்த ஆன்மிகச்சூழல், இராணுவச்சூழல் என்பன யுத்தத்தின் விளம்பில் இருந்த போது ஆழிப் பேரலையால் ஒரு சில நிமிடங்களில் பல்லாயிரக்கணக்கான பொது மக்களும் சொத்துக்களும் அழிக்கப் பட்டு விட்டது. இந்த துன்ப அதிர்ச்சியில் இருந்து மக்கள் முழுமையாக விடுபடவில்லை. ஆனால் வடக்கு கிழக்கில் யுத்தத்தில் கிடைத்ததுயரங்கள், இந்த அனர்த்தத்தையும் எதிர்கொள்ள அனுபவ அறிவை கொடுத்துள்ளது. ஆனால் தென்பகுதியில் அத்த கைய நிலை இல்லை. தென்னிலங்கை ஆளும் வர்க்க அரசியல் வாதிகளும் இனவாதப் பத்திரிகைகளும் ஒரே இலங்கை எனக் குரல் கூறினாலும் செயலளவில் வேறுபாட்டைக் காண்பிப்பதைத் காணமுடிகின்றது. அவர்களிடம் தங்கள் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பை பற்றி எண்ணும் சிந்தனையை விட விடுதலைப் புலிகளுக்கு இழப்புக்கள் இல்லையே என்ற ஆதங்கமே மேலூன்றிக் காணப்படுகின்றது. இதனால் போலும் ஐக்கிய அமெரிக்க நாட்டுப் படைகளை அழைத்து தன்னுடன் வைத்து உள்ளது. மேலும் ஐ.நா செயலரை பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களுக்கு சுயமாகச் செல்வதை கட்டுப்படுத்தியதன் மூலம் சம உரிமையை தமிழருக்கு அளிக்க முடியாது என்பதை உலக அரங்கிற்கே உணர்

**DR.C.S.ஜமுனானந்தா**

த்தி உள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள தமிழருக்கு பொருளாதார உதவி கிடைக்காது விடினும் கவலையில்லை. ஆனால் ஆழிப் பேரலையால் சிதைவடைந்து போயிருக்கும் இலங்கை போர்த் திறனை மீளவும் உயிர்ப்பூட்டி, அப்பாவித் தமிழரை கடந்த காலங்கள் போல் மீண்டும் அழிக்காது இருக்க தமிழ்ர் பிரதேசங்களை பார்வையிடுதலை புறக்கணித்த ஐ.நா. பொதுச் செயலாளர் உறுதிப்படுத்தல் அவசியம்.

அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை, கடலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உருவாகிய கடற்கொந்தழிப்பால் ஏற்பட்டது. கடலில் எரிமலை வெடித்தாலும், விண்ணில் இருந்து பாரிய கற்கள் கடலில் விழுந்தாலும், கடலில் பாரிய அணுக்குண்டு வெடித்தாலும் இத்தகைய ஆழிப்பேரலை உருவாகும்.

ஓசோன் ஓட்டை மூலம் எவ்வாறு கதிர்வீச்சுக்கள் பூமியைத் தாக்குகின்றனவோ அதே போன்று புவிக் கோளத்தின் படைகளுக்கு இடையே இருக்கும் துவாரத்தின் ஊடாக வெளியேறும் விசைகள் புவிநடுக்கத்தை ஏற்படுத்துகின்றன. இது எவ்வாறு உருவாகின்றது என நோக்கும் போது பூமியின் வெவ்வேறு மட்டங்களில் காணப்படும் விசைகள் ஒரு சில இடங்களில் சம நிலைப்படுத்தப்பட முடியாது போகின்றது. இதற்கு ஆழ்கடலில் காணப்படும் ஆழிகள், ஆழ்கடல் அணுக்குண்டுச் சோதனைகள், செய்மதிகளை விண்ணில் ஏவுதல், மீஉயர் விமானங்களில் பறத்தல் என்பன காரணமாக அமையலாம். மேலும் பிறகோள்களின் ஈர்ப்பு விசைகளில் ஏற்படும் மாற்றமும் காரணமாகலாம்.

எனவே இலங்கையை சூழவுள்ள சமுத்திரத்தில் காணப்படும்

தொடர்ச்சி 9ம் பக்கம்.....

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# வல்லூறுகள் வட்டமிடுகின்றன

சுனாமி அழிவினை அடுத்து அரசாங்கம் செயலற்று இருந்த சில நாட்கள் அரசாங்கத்தினது சமூக அக்கறையின்மையும் அரச அதிகாரிகளது வழமையான அசட்டையான போக்கையும் நமக்கு நினைவூட்டின. வெளி உதவி கிடைக்கப் போவதாகத் தெரிந்த பின்பு அரசியல் பிரமுகர்களதும் அதிகாரிகளதும் நிபுணர்களதும் அக்கறையில் புதிய போக்கைக்காண முடிந்தது. அவர்கள் ஒரு புறமிருக்க ஜோசியர்களும் அவதாரங்களும் மத அடிப்படைவாதிகளும் தங்களுக்கு முன் கூட்டியே தெரியும் என்று நடந்து முடிந்தவை பற்றி ஆருடங் கூறித் தமது தீர்க்க தரிசனத்தைப் பிரகடனப்படுத்திக் கொண்டார்கள்.

ஏற்கெனவே மீள்கட்டமைப்பு வேலை களை ஒப்பந்த அடிப்படையில் மேற் கொள்ளக் கொந்தராத்துக் கொம்பனிகள் பல உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றைத்தத்தெடுத்துக் கொள்வதற்கு அரசாங்க மட்டத்திலும் வெளி நாட்டு முகவர்கள் நடுவிலும் பெரிய புள்ளிகள் தம்மை ஆயத்தப்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

இது ஒரு புறமிருக்க நாட்டின் விஞ்ஞான-தொழில்நுட்ப நிபுணர்கள் எனப்படுகின்றவர்கள் நடுவேயிருந்து தங்களை முக்கியப்படுத்துகிற கும்பல்கள் எழுந்துள்ளன. சுனாமிக்கு எதிரான எச்சரிக்கை முறை கோடி டொலர் செலவில் நிறுவப்படுமாயின் சுனாமிப் பாதுகாப்பு, நிலநடுக்கப் பாதுகாப்பு இப்படி உருவாகப் பல வேறு நிறுவனங்களில் தமக்குப் பதவிகள், வெளி நாட்டுப் பயணங்கள், ஆய்வுத்திட்டங்கள் என்று ஆளுக்காள் கனவுலகில் மிதக்கிறார்கள்.

பேரினவாதம் இன்று படித்த நடுத்தர வர்க்கத்தினரிடம் மிகுதியாகக் காணப்படுகிறது. சிஹல உறுமய போன்ற அமைப்புக்களுக்கு இந்த வர்க்கத் தினரிடம் மிகுதியாக ஆதரவு இருப்பது கவனிக்க உகந்தது. பல கோடிக்கணக்கான டொலர்கள் வெளி உதவியில் தமிழ்ப் பகுதிகட்குப் பெரும் பகுதி போனால் அவர்களது பிரதேசங்கள் முன்னேறக் கூடும் என்பதை இவர்களாற் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. எனவே வெளி உதவி மூலம் முழு நாட்டை யுங் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை அவர்கள் முன்மொழிகின்றார்கள். பாதிக்கப்பட்ட தமிழ்ப்பகுதிகட்கு நிவாரணநிதியைக் குறைந்தபட்ச அளவில் வைத்துக் கொள்வதற்கு நாட்டின் பாதுகாப்புச் சூழலையும் பயங்கரவாதிகள் ஒத்துழைக்க மறுப்பதையும் காரணங்காட்டுவதற்கான சூழல் அரசாங்கத்தாலும் போரினவாத ஊடகங்களாலும் ஏற்கெனவே உருவாக்கப்பட்டு வருகிறது.

விடுதலைப் புலிகளின் படைபலம் நலிந்துள்ளதைப் பயன்படுத்தித் தம்மை மேலும் வலுப்படுத்தவும் விடுதலைப் புலிகள் தமது ஆயுத வலிமையை, குறிப்பாகச், கடல் வலிமையை, வலுப்படுத்தாமல் கவனிப்பதற்கு இலங்கையின் பாதுகாப்புத்துறை இந்தியாவின் ஒத்துழைப்பை நாடுகிறது. அமெரிக்கப்படைகள் இலங்கையிற் தரையிறங்கியதைக் காரணமாக்கி

> சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி அந்நியத் தலையீடும் ஆதிக்கமும் ஏற்படுவதையும் கல்விமான்களும் தரகர்களும் கொள்ளையடிக்கிற வணிகக் கும்பல்களும் என். ஜி. ஓக்களும் மக்களை ஏய்த்துப் பிழைப்பதைப் பற்றியும் மக்கள் விழிப்பூட்டப்பட வேண்டும்.

இந்தியாவும் தனது இராணுவக் குறுக்கீட்டுக்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறது. இந்த மண்ணில் அமெரிக்க இந்திய இராணுவப் போட்டிக்கு இடமளிப்பது நிலவும் அமைதிச் சூழலைக் குலைப்பதுடன் நாட்டில் வேறு புதிய மோதல்கட்கும் வழி வகுக்கலாம்.

எல்லா வெளி அரசாங்க உதவியிலும் பெரும்பகுதி உதவிவழங்கும் நாட்டுக்கே திரும்பிப் போகுமாறு அந் தந்த நாட்டு அரசாங்கங்கள் கவனித்துக் கொள்ளுகின்றன. உதவி என்பது கடனாக அல்லது நன்கொடையாக வழங்கப்படுகின்றது. இரண்டுமே உதவிபெறும் நாட்டின் மீது பல நிபந்தனைகளை முன்வைத்தே வழங்கப்படுகின்றன. குறிப்பாக நன்கொடையாக வழங்கப்படுகின்ற பணத்தில் உதவிபெறும் நாடு தான் விரும்பியபடி செலவு செய்யக் கூடிய அளவு மிகவும் சிறியது. எதை எங்கிருந்து கொள்வனவு செய்ய வேண்டும் என்பதும் வெளி நிபுணர்களை வரவழைப்பதற்கு எவ்வளவு செலவாக வேண்டும் என்பதும் பணிகட்கு உதவ யார் யாரை அனுப்புவது என்பதும் உதவி பெறும் நாட்டின் கைகளில் இல்லை.

அறக்கொடை நிறுவனங்கள் அனுப்புகிற தொகைகளிலும் அரசாங்கங்கள் அனுப்புகிறவற்றில் ஒரு பகுதியிலும் கைவைக்கவென்றே என். ஜி. ஓ அமைப்புக்கள் காத்திருக்கின்றன. கடந்த இருபதாண்டுகளாக இந்த நாட்டின் வெகுசன அமைப்புக்களைச் சீர்குலைப்பதற்கென்றும் முதலாளிய அரசியலுக்கு எதிரான மாற்று அரசியலைச் குழப்புவதற்கென்றும் உருவாக்கப்பட்ட புல்லுருவிச் கூட்டமொன்று சமூகப்பணிகள் பலவற்றையும் ஊக்குவித்துள்ளது. வெளி உதவியிலேயே தங்கியிருக்கும் ஏதிலிகளாக மக்களை வைத்திருக்க விரும்புகிற பல வேறு என். ஜி. ஓக்கள் வெளியிருந்து வருகிற நிதியைத் தம்வசமாக்குகிற திட்டங்களுடன் காத்திருப்பது போகப் புதிய என். ஜி. ஓக்களும் முளைக்கத் தொடங்குவது தவிர்க்க இயலாததது. என். ஜி. ஓக்களின் தொகை இன்று மலையகத்திலேயே அதிகமாக உள்ளது. விரைவில் கிழக்கும் தெற்கும் மலையகத்தை முந்தும் நிலைமை சுனாமியால் உருவாகியுள்ளது.

அரசாங்கமும் அரசியல் கட்சிகளும் இந்த வாய்ப்பு மக்களை இணைப்பதற்குப் பயன்படும் என்று சொல்லிக் கொண்டே மக்களைப் பிளவுபடுத்துகிற காரியங்களிலேயே ஈடுபடுகின்றன. குறிப்பாகப் பெருந்தொகையான பணம் வரும் என்ற எதிர்பார்ப்பும் அந்தப் பணத்தை எப்படிப்பங்கிடுவது என்பதில் புதிய அரசியற் பிணக்குக்களுக்கும் இனவாத உணர்வுகளின் எழுச்சிக்கும் வழிவகுக்கம். அதற்கான அறிகுறிகள் இப்போதே தென்படுகின்றன. இவை இன்னொருபுறமிருக்க இந்த நிகழ்வு பற்றி முன் கூட்டியே தெரியும் என்று சொல்கின்றவர்கள் பலர் கிளம்பியுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் சுனாமி அலை வருவதை அறிந்து தமது கப்பல்களைக் கடலுக்குக் கொண்டு போய்க் காப்பாற்றியதாக ஒரு கதை வந்தது. அது உண்மையானால், அவர்கள் ஏன் வேறு யாரையும் எச்சரிக்கவில்லை என்று கேள்வி எழுகிறது. நிலநடுக்கத்தை அறிந்த அமெரிக்க அதிகாரிக்கட்கு அடுத்தபடியாக இவர்களையல்லவா குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டும்.

அண்மையில் சாயிபாபா பக்தர் ஒருவர் 'பகவான்' இது பற்றி எப்போதோ அறிந்திருந்தார் என்று என்னிடஞ் சொன்னார். அப்படியானால் அவர் அதை ஏன் உரிய இடத்தில் உள்ளவர்களிடஞ் சொல்லவில்லை என்று கேட்டேன். அவரிடம் பதில் இல்லை. தெரிந்திருந்தே பத்தாயிரக்கணக்கானவர்களைச் சாக அனுமதித்திருக்கிறதலால் இந்த மாதிரிப் பகவான்களைக் கழுமரமேற்றினால் தகும் என்றேன். இனி வேறு யாரிடமும் தன்னுடைய பகவானின் ஞானப்பார்வை பற்றிப் பேசமாட்டாரென எதிர் பார்க்கிறேன்.

இந்தியாவிலும் இங்கும் இந்தமாதிரியான தீர்க்கதரிசிகட்குப் பஞ்சமில்லை. இந்து, பௌத்தச் சோதிடர்களும் அனர்த்தம் நேரும் என்று அறிந்ததாகப் பாசங்கு செய்கிறார்கள். கம்பூச்சியாவின் முன்னாள் அரசர் சிஹானுக் கம்பூச்சியாவில் இப்படி ஒரு அனர்த்தம் நேரலாம் என்று சோதிட மூலம் அறிந்து சமயச் சடங்குகளை நடத்துவித்ததால் தனது நாடுதப்பியதாகச் சொன்னது செய்தியாக வெளியாகியிருந்து. அவர் நிலநடுக்கத்தைக் கம்பூச்சியாவிற்கு மேற்காக நகர்த்தியிருப்பாரானால் நமக்கு அவர் பெரிய நட்டஈடு தர வேண்டாமா?

இவர்கள் போகத் தீவிர கிறிஸ்துவ, முஸ்லிம் மதவாதிகள் சிலர் இந்தப் பேரலையைக் கடவுளின் தண்டனை என்றும், எல்லாமே முன் கூட்டியே புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது என்றும் சொல்லி வருகின்றார்கள். இவர்கள் செய்ய முயல்வதெல்லாம் இயற்கையின் சீற்றத்திலிருந்து மக்களைக் காப்பாற்றவோ பாதிக்கபட்ட வர்களுக்கு மறுவாழ்வு வழங்குவதற்கோ மாறாக அவர்களைக் குற்ற உணர்வுக்கு உட்படுத்துவது தான். நிவாரண உதவி மத அடிப்படையில் வழங்கப்படும் ஆபத்து இன்று எல்லா மதங்களிலும் நடக்கும் விதமாகச் சூழ்நிலை மாறி வருகிறது. இது சமூக

**-மோகன்-**

மட்டத்திலும் அரசாங்க நிருவாக மட்டத்திலும் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும்.

சாதி, இன, மத வேறுபாடுகளை நிவாரணப் பணிகளில் புகுத்துகிறவர்கட்கு அரசாங்கமோ பொதுமக்களோ ஒத்துழைப்பு வழங்கக் கூடாது.

எல்லாவற்றிலும் முக்கியமாக எல்லா உதவிகளும் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன என்பதும் எவ்வாறு பயன்படுகின்றன என்பதும் எல்லாருடைய பார்வைக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

# விஷமப்பிரசாரகர்களும் நெருக்கடியான சூழலும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடனும் யாழ்ப்பாணத்துடனும் மட்டுமில்லாமல் மனித உரிமைகளுடன் கூட ஒருவித ஒட்டும் உறவுமற்ற ஒரு சிறு குழு கடந்த பதினைந்து ஆண்டுகளாக அறிக்கைகளை உற்பத்தி செய்து பிழைத்து வருகின்றது. அறிக்கைகளில் நிறையத் தகவல்கள் இருக்கும். ஆனால் அவற்றைக் கூர்ந்து கவனித்தால் அவை அரசாங்கத்தையும் அரச படைகளையும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான எவரையுமே நியாயப்படுத்துகிற நோக்கிலேயே பெறப்பட்டவையும் புனையப்பட்டவையும் தான். அவர்களது அறிக்கைகள் ஆங்கிலத்தில் மட்டுமே வருகின்றன. அவை பச்சை இன வாத ஏடான ஐலன்டில் ஒழுங்காகப் பிரசுரமாகின்றன. பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், ஆசிரியர்கள், மனித உரிமை ஆகிய பேர்கள் அறிக்கைகட்கு ஒரு கனதியை ஏற்படுத்தப் பயன்பட்டாலும் அறிக்கைகளின் பின்னாலிருந்து இயக்குவன வெறுமனே விடுதலைப்புலி ஏதிர்ப்புக்கும் அப்பால் தமிழ் மக்களது விடுதலைக்கு எதிரான பலவேறு சக்திகளுமே. சிலகாலமாக மேற்படி மனித உரிமைக் கழகத்தைப் பற்றிப் பலரும் அறிவார்கள். குறிப்பாகத் தமிழ் மக்களிடையே அதன் சூத்திரதாரிகள் பற்றி மயக்கமேதும் இல்லை. என்றாலும் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்கு எதிராகத் தலையங்கம் தீட்ட ஐலன்ட், ஹிந்து போன்ற ஏடுகட்கு அவை மிகவும் உதவுகின்றன.

தமிழர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்ற பேரில் இன்னொரு அமைப்பு லண்டனிலிருந்து இலங்கையை நோக்கி ஒலிபரப்புவதற்கென்று ஒரு மணி நேர நிகழ்ச்சியை நடத்தியது. அதை இலங்கை வானொலி மீள் ஒலிபரப்புச் செய்தது. அந்த ஒழுங்கீனம் பற்றிய கேள்விகள் எழுந்த பின்பு மீள் ஒலிபரப்பு நிறுத்தப்பட்டது. தமிழர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் சொந்தங்களைத் தேடுவதை நிறுத்திவிட்டது போலத் தெரிகிறது. இப்போது சில காலமாக நாளாந்தம் ஒரு மணிநேரப் பிரசார நிகழ்ச்சி ஒன்றைப் பணங்கொடுத்துப் பொழுது போக்கு நிகழ்ச்சி ஏன்ற பேரில் அரசாங்கத்துடன் ஒட்டி நிற்கிற ஒரு கட்சி நடத்துகிறது. இது பற்றித் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஒலிபரப்புத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரிடம் எதிர்ப்புத் தெரிவித்த போது அவரிடம் நீங்களும் வேண்டுமானல் கட்டணஞ் செலுத்தி அப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்தலாம் என்று பதில் கொடுக்கப்பட்டதை இலங்கை வானொலி பெருமையுடன் கூறிக் கொண்டது.

இப்பொழுது ஏசியன் ற்றிப்யூன் என்ற பத்திரிகை பற்றிச் சிங்களப் பேரின வாத ஊடகங்கள் கண்டுபிடித்துள்ளன. ஏசியன் ற்றிப்யூன் என்பது ஆசியர்களுக்கான ஏடல்ல. அதுவும் விடுதலைப் புலிகளை [illegible]ப்பதற்கா கத் தமிழ் மக்களு[illegible] நலன்கட்கு எதிராக எ[illegible] சொல்லக் கூடிய ஒரு ஏடு[illegible] அதன் எசமானர்கள் முன்[illegible] வானொலி நிகழ்ச்சியின் எசமா[illegible]கள்தாம் இப்பத்திரிகையின் [illegible]டுரைகள் இன்றர்நெற் மூலமே அதிகளவில் விநியோகிக்கப்படுகின்றன.

மக்களால் நிராகரிக்கப்பட்டு அரசாங்கச் சார்பான நீதிமன்றத் தீர்ப்புக்களின் துணையுடன் பேர்ப்பலகைகட்குச் சொந்தங் கொண்டாடுகிற முன்னாள் தலைவர்களும் முன்னர் அரசாங்கத்தால் பயங்கரவாதிகளாகவும் பாரிய குற்றச்செயல்கட்குப் பொறுப்பானவர்கள் என்று கடுமையாக விமர்சிக்கப்பட்டுப் பின்பு பாவங் கழுவப்பட்டுப் போனவர்களும் சிங்களப் பேரினவாதிகளாற் கொண்டாடப்படுகின்றனர்.

சுனாமி அனர்த்தம் பற்றி முற்குறிப்பிட்ட பலரும் அறிக்கைகளை விடுத்துள்ளனர். அவர்களுடைய கவலை எதுவும் மக்களைப் பற்றியதல்ல. மாறாக, விடுதலைப் புலிகளிடம் நிவாரணப் பொறுப்புக்கள் போய்ச் சேரக் கூடாது என்பது தான் அவர்களது ஆதங்கம். அவர்கள் கேட்காமலே அரசாங்கம் தமிழ்மக்களுக்குப் போதிய நிவாரணம் போகாமல் கவனித்துக் கொள்கிறதோடு. உருப்படியாக யாரும் ஏதுவுமே செய்யாமல் குறுக்கிட்டுச் குழப்ப முயலுகிறது.

தமிழ் மக்களுக்காக முதலைக்கண்ணீர் வடிக்கிற இந்தப் பேர்ப் பலகைக் கூட்டம் இன்றைய அவலச் சூழலிலாவது மக்களுடைய கண்ணீரைத் துடைக்கத் தம்மாலான எதையாவது செய்யக் கூடாதா? மாறாகத் தமது விடுதலைப்புலி எதிர்ப்பிலும் அரசாங்கத்தின் செயலின்மையை நியாயப்படுத்துவதிலுமே குறியாக உள்ளனர். இத்தகையோர் அழுது புலம்புவது யாருக்காக? தமிழ் மக்களுக்காகவா? அல்லது தமது சுயதேவைகட்கா கவா?

**-மாறன்-**

# சுனாமிக்குப் பின் சேது சமுத்திரத் திட்டம் கைவிடப்படுமா?

இந்தியாவிலும் இலங்கையிலும் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்ட சுனாமி எனப் பெயருடைய கடற்கோள் அனர்த்தத்தைத் தொடர்ந்து சேதுசமுத்திரக் காலவாய்த்திட்டம் மறுபரிசீலனைக்குட்படுத்த வேண்டு மென்ற கோரிக்கையை பூமியின் அமைப்பியல் நிபுணர்கள் முன்வைத்துள்ளனர்.

திருவானந்தபுரத்தில் அமைந்துள்ள புவி விஞ்ஞான ஆய்வு மையத்தின் பிரபலம் வாய்ந்த புவி அமைப்பியல் விஞ்ஞானி சீ.பீ.இராசேந்திரன் "இத் திட்டத்தினால் சுற்றாடல் பாதிப்பு ஏற்படாது என உத்தரவாதம் செய்ய முடியாதென நான் நம்புகிறேன். புவி விஞ்ஞான அடிப்படையில் இத்திட்டத்திற்குட்பட்ட பகுதியில் அதிவேக மாக உருவாகும் வண்டல், கடல் சுழிகளின் அதிவேகம், சூறாவளிக் காற்று என்பன எவ்வாறு அமையு மென்பதை உறுதிபடக்கூற முடியாது" என்கிறார்.

இந்தத்திட்டத்திற்கு இந்திய அரசு இரண்டாயிரம் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின் போது தமிழ் நாட்டு கடற் கரைக்கும் இலங்கைக்குமிடையேயுள்ள ஆழம் குறைந்த கடற்படுக்கையை ஆழமாக்கி கப்பற்போக்குவரத்திற்கு, உகந்த ஆழத்தை ஏற்படுத்துவதனால் அரேபியக் கடல் தொடக்கம் வங்காள விரிகுடாவுக்குமிடையே பாரிய கப்பல்கள் செல்லக்கூடியதாக உருவாக்கப்படும்.

இது சுயெஸ் கால்வாய் போன்ற திட்டமல்ல என்பது கவனிக்கத்தக்கது. சுயேஸ் கால்வாய் இரண்டு கண்டங்களின் நிலப்பரப்பை அகழ்ந்து ஏற்படுத்தப்பட்டது. ஆனால் சேது சமுத்திரத்திட்டம் கடலின் கீழ் 150 கி.மீ .நீளமும் 300 மீட்டர் அகலமும் 12 மீட்டர் ஆழமுமுடைய அகழ்வு மேற்கொள்ளப்படும். அதன் மூலம் எட்டுக் கோடி எண்பது இலட்சம் (8கோடி 80 இலட்சம்) கனமீட்டர் மணல் மற்றும் பொருள்கள் அப்புறப்படுத்தப்படும். அவ்வாறு அப்புறப்படுத்தப்படும் பொருள் எங்கே கொட்டப்படும். அதன் விளைவால் ஏற்படப்போகும் சுற்றாடல் பாதிப்பு ஆய்வுக்குரியது. இந்த அகழ்வின் போது வெடி வைத்து பாறைகள் உடைக்கப்படும். இவ்வாறு கடலை செயற்கையாக நிலைகுலையவைப்பதன் மூலம் கடற் தாவரங்கள், மீன் இனங்கள் பாரிய அழிவை எதிர் நோக்குகின்றன. இதன் மூலம் இந்திய மீனவர்களும் இலங்கை மீனவர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாவர்.

ஆழ்கடலுக்கு முன்னால் ஆழமில்லாக் கடலின் படுக்கையாய உள்ள கண்டத்தைச் சேர்ந்த தரை அப்புறப்படுத்தப்படுமானால் சுனாமி போன்ற கடற் கொந்தளிப்பின் போது யாழ் குடாநாட்டுக்கு என்ன கதியேற் படும்? அதேபோல தமிழ் நாட்டின் மேற்கு கரைக்கு என்ன நடக்கும்?

சேது சமுத்திரத் திட்டத்தின் அமுலாக்கலின் பின் சுனாமி ஏற்படும் பட்சத்தில் யாழ் குடா நாடும் இந்தியாவின் தென் முனையும் முழுமையான அழிவுக்குட்படும்.

சேது சமுத்திரத்திட்டம் பற்றி கூடிய அக்கறையையும் ஆய்வையும் மேற்கொள்ள வேண்டிய தேவை சுனாமி அனர்த்தத்தின் பின் வடபகுதி தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. தொப்புள்கொடி உறவு-தாய் சேய் உறவு பற்றி பேசிப் பேசிக் காலங்கடத்தாமல் தமிழ் தலைமைகள் எதிர்காலச் சந்ததி பற்றிய திட்டத்திற்கு இலங்கை அரசின் எதிர்ப்பை ஏற்படுத்த சகலரும் முன்வர வேண்டும்.

கூட்டிக்கழித்தால் சேது சமுத்திரத் திட்டத்தால் பிராந்திய ஆதிக்கம் செலுத்தும் இந்தியக் கடல் வணிகர்கள் சிலருக்கு நன்மை ஏற்படக் கூடும். இந்திய மக்களுக்கல்ல. இலங்கையைப் பொறுத்தமட்டில் மீனவர்களும் கடல் வளங்களை பயன்படுத்துவோரும் பாரிய பாதிப்புக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை உரு வாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# அடுத்த வருடம் இறுதி வரை அமெரிக்கப் படைகளுக்கு என்ன வேலை?

சுனாமி பேரலை அனர்த்தத்தை சாட்டாக வைத்து மீட்புப் பணிக்கென அமெரிக்கப் படைகள் இலங்கை மண்ணிலே முதல் தடவையாகக் கால் பதித்துக் கொண்டன. சுனாமிப் பேரழிவு இடம் பெற்று மூன்று நாட்கள் அமெரிக்க புஷ் நிர்வாகம் அனுதாபமோ அக்கறையோ காட்டவில்லை. ஆனால் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலுடன் இருமணி நேர நீண்ட தொலை பேசி உரையாடலை நடத்திய பின்பே வெள்ளை மாளிகை இலங்கையின் சுனாமி அழிவுக்கு ஆரவாரம் அனுதாபம் தெரிவித்து செயலில் இறங்கியது. அமைச்சர் கதிர்காமர் அமெரிக்க படைகளுக்கு விடுத்த அழைப்பின் பின்பே புஷ் நிர்வாகம் சுனாமி அழிவுக்கு கண்ணீர் விட ஆரம்பித்தது. வாஷிட்டனில் அமைந்துள் இலங்கைத் தூதரகத்தில் ஜனாதிபதி புஷ்சும் அவரது தந்தை ஜோர்ச் புஷ்சும் கிளிங்டனும் துக்கம் விசாரித்து அனுதாபப் புத்தகத்தில் கையொப்பம் இட்ட நிகழ்ச்சி நடாத்தினர். எல்லாம் காரணத்தோடு தான் இடம் பெற்றன.

இதன் பின்பே 2005 ஜனவரி 3ம் திகதி அமெரிக்க ராணுவ விமானம் இலங்கையின் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது. மீட்புப் பணிக்கென 300 அமெரிக்க மரையன் இராணுவத்தினர் இலங்கை மண்ணில் முதல் தடவையாக கால் பதித்தனர். வெற்றி என்ற விரல் அடையாளத்தையும், வந்து விட்டோம் என்ற பெருவிரம் பெருமித அடையாளத்தையும் காட்டிய படி விமானத்திலிருந்து இறங்கிய படையினர் ராணுவ தளபாடங்களுடன் கட்டுநாயக்காவிலேயே தமக்குரிய தங்குமிடத் தளத்தை அமைத்துக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து "யு. எஸ். எஸ்.டுலுத்" என்ற போர்க் கப்பல் மூன்று சி. எச்-46 ரக கடல் ஹெலி கொப்டர்களுடனும் பாரிய தரையிறங்கு கலத்துடனும் அமெரிக்க ராணுவத்தினர் வந்தனர். அத்துடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ந 130 ரக பாரிய சரக்கு விமானங்கள் இரண்டும் கடல் ரோந்து, வானூர்தி ஒன்றும்



பாரிய தாக்குதல் வானூர்தி (பிளாய்க் ஹொல்க்) கள் ஆறும் தரித்து நிற்கின்றன.

மேலும் முன்னூறு அமெரிக்க ராணுவத்தினர் என்ற தொகை விரைவாகவே நாளாந்தம் கூடிக் கொண்டது. இப்பொழுது மொத்தம் 1657 பேர் இங்கு நிலை கொண்டுள்ளதாக அறிய முடிகின்றது. இதில் கட்டுநாயக்கா பகுதியில் 317 படையினர், கொழும்பில் 221 பேர், காலியில் 404 பேர் யாழ்ப்பாணத்தில் 39 பேர், மிகுதியானோர் காலியில் நங்கூரமிட்டுள்ள போர்க்கப்பலும் உள்ளனர். மேற்படி விபரம் பத்திரி கைகளில் வெளிவந்தவைகளேயாகும். ஆனால் அதற்கு அப்பால் எத்தனை ராணுவத்தினர் வந்துள்ளனர் அல்லது வரவுள்ளனர் என்ற விபரங்களை அரசாங்கமோ அல்லது புஷ் நிர்வாகமோ உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கவில்லை.

இவ் அமெரிக்க ராணுவத்தினர் மீட்புப் பணி என்ற பெயரில் பல்வேறு ராணுவ நோக்கங்களைக் கொண்ட செயற்பாட்டையே முன்னெடுத்து வருகின்றனர் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. சிறுவர்களுக்கு இனிப்பு வழங்குவது முதல் மக்களை மயக்க வைக்கும் உள்ளர்ந்த செயற்பாடுகளை திட்டமிட்டே அமெரிக்கப்படையினர் செய்து வருகின்றனர். யாழ்ப்பாணம் மந்திகை அரசினர் மருத்துவ மனையில் ராணுவ வைத்தியர்கள் சேவை என்ற பெயரில் தமது பணிகளைப் புரிந்து வருகின்றனர். அவர்களைப் புதினம் பார்த்து உயரம் என்ன? பெருப்பம் என்ன நிறம் தான் என்ன? வைத்திய சேவையும் பழகும் விதமும் தான் என்ன? என நம்மவர்கள் அப்பாவித்தனமாகப் பேசியதையும் அங்கு கேட்க முடிந்தது. பாதிக்கப்பட்ட ஒருவரது காலக்கு சிகிச்சை அளித்த அமெரிக்க ராணுவ வைத்தியர் அவரது ஒரு விரலை வெட்டி அகற்றிக் கொண்டாராம். இதைக் கேள்வியுற்ற ஒருவர் "இன்று விரலை வெட்டுவார்கள் நாளை கழுத்தை

**அ. பூபதி**

யும் வெட்டுவார்கள். பெறுத்திருந்து பாருங்கோ ஈராக்கில் அவர்கள் செய்வதைப் பத்திரிகையில் பார்ப்பதில்லையோ என்று கூறினாராம்.

இதே அமெரிக்க ராணுவத்தினர் தற்போது வடமராச்சியில் அரசாங்கப்படைகள் தளமமைத்துள்ள நாகர் கோவில் பகுதியில் நிலை கொண்டு அழிவுற்ற கடற்படை தளத்தை புனரமைப்புச் செய்வதாகவும் மக்கள் தெரிவித்தனர். இது காங்கேசன்துறை துறை முகப் பகுதிக்குடம் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் நம்பப்படுகிறது.

இவ்வாறு மீட்புப் பணி, புனரமைப்பு என்ற பெயரில் அமெரிக்க ராணுவம் இலங்கையின் பிரதான இடங்களில் தன்னை நிலை நிறுத்தி தமது நீண்ட நாள் உள் நோக்கங்களை ராணுவ ரீதியில் நிறைவேற்றி வருகின்றது. இதன் எதிர்கால அபாயம் பயங்கரமானதாகும். ஒரு புறம் இலங்கையின் சுதந்திரம ஏகாதிபத்தியம், இறமை பறி போகிறது. மறுபுறம் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டம் நசுக்கப்படப் போகிறது. இவற்றை தூர நோக்கில் உணராது அமெரிக்க ராணுவம் மீட்பும் பணியில் ஈடுபடுவதாக நம்புவதும் மக்களை நம்ப வைப்பதும் அரசியல் விவேகமற்ற அடிமைத்தனப் போக்கேயாகும். அதனாலேயே அடுத்த வருட பிற்புகுதியில் தான் அமெரிக்க ராணுவம் நாட்டை விட்டுச் செல்லும் என்ற முடிவினை ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறது. இந்த இரண்டு வருடத்தில் அவர்களுக்கு இங்கு என்ன வேலை இருக்கப் போகிறது. அமெரிக்க அடி வருடி அமைச்சர் கதிர்காமர் உரிய பதில் கூறுவாரா?

# சுனாமியோடு போகப் போகிறவை

உலகவங்கி கடனைச் செலுத்துவதற்கான காலக் கெடுவை ஒத்திப் போட்டுள்ளதற்கு மேலாகப் புதிய கடன் வசதிகளையும் வழங்க முன்வந்துள்ளது. உலகவங்கி கருணை காட்டும் போது ஏழை நாடுகள் கவனமாக இருக்க வேண்டும். இவ்வளவு காலமும் பொது மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சிப் பின்போடப்பட்டு வந்த கல்வி, சுகாதாரச் சேவைச் சீர்திருத்தங்கள் (அதாவது தனியார் மயமாக்கல்) இன்னும் புகையிரச் சேவை போன்று எஞ்சியுள்ள சேவைகளின் தனியார்மயமாக்கல் சமூக சேவைகள் போன்றவற்றைப் படிப்படியாக இல்லாதொழித்தல் என்பன இனிமேல் மும்முரமாகலாம். இவ்விடயங்களில் அரசாங்கம் உலகவங்கிக்கு விட்டுக் கொடுக்கத் தயாராகவே இருந்து வந்துள்ளது. இனி அதற்கு வாய்ப்பான ஒரு சூழ்நிலை சுனாமியால் உருவாகியுள்ளது.

பணமில்லாவிட்டால் படிப்பும் மருத்துவ சிகிச்சையும் இல்லை என்ற நிலை எதிர்பார்த்ததை விட விரைவாக உருவாகலாம். வெளி உதவியைக் கண்டு மயங்கி நிற்கிறவர்கள் வெளி உதவியின் விலை பற்றி அறிய முதல் நிலைமைகள் மோசமாகி விடலாம்.

# ஓய்வூதியம் பெறுவோர் படும் இன்னல்கள்

ஸ்ரீலங்கா அரசாங்கம் ஓய்வுதியரின், வாழ்க்கைத் திறனை மேம்படுத்தவும், உயர்வாழ்க்கைச் செலவை சமாளிக்கும் வகையிலும், அவர்களின் ஓய்வூதிய முரண்பாட்டை திருத்தும் நடவடிக்கையாக, ஓய்வூதிய திணைக்கள அத்தியட்சகர் நிதி அமைச்சு பொதுநிர்வாக அமைச்சுக்களின் அனுகூலத்துடன் இலக்கம் :-06/2004 கொண்ட சுற்றுநிருபத்தை 25.2.2004ம் தேதி வெளியிட்டுள்ளது.

இச் சுற்றுநிருபத்தின் சாராம்சம் 31. 12.1996ம் ஆண்டிற்கு முன் ஓய்வு பெற்றவர்களின் ஊதியம், 31.12.1996ல் ஓய்வு பெற்றவர்களின் ஊதியத்துடன் சமசீர் செய்யும் கடப்பாடாகும். இதன் பிரகாரம் ஊழியர் ஓய்வுதியம் பெறும் தேதியில் பெற்ற சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு, அதற்கு சமசீரான புதிய ஊதிய வரம்பில் நிறுத்துவதாகும்.

இவ்வூதிய அமைப்பை எதிர்பார்த்து மகிழ்ச்சி கொண்ட ஓய்வூதியர்களுக்கு தலையில் பொல்லால் அடித்தது போல், ஓய்வூதியத் திணைக்களம் ஓர் உள்வீட்டு செயற்பாட்டு நிரல் (schedule)

தயாரித்து, பிரதேச செயலர்களுக்கு வழங்கியுள்ளது. இதன் பிரகாரம்

1. 25 வருடங்கள் பூர்த்திசெய்தோர் முழு ஓய்வூதியமும்.
2. 20 வருடங்கள் பூர்த்திசெய்தோர் 2-3 ஓய்வூதியமும்.
3. 15 வருடங்கள் பூர்த்திசெய்தோர் 1-3 ஓய்வூதியர்களாகவும்

கணிக்கப்பட்டு, அவர்களுடைய தரத்திற்கேற்ப விகிதாசார அடிப்படையில் புதிய ஓய்வூதியத் தொகை நிர்ணயிக்கப்படும்.

2.ஊதியமற்ற விடுமுறைக்குள்ளானவர்கள் பெற்ற முழு சம்பளத்தில் மாதம் 0.2 வீதம் கழிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் புதிய ஓய்வூதியம் கணிக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில், ஓய்வூதியருக்கு நடைமுறையில் உள்ள ஓய்வூதியத்திற்கு மேல் உயரலாம், குறையலாம்.

3. சிலருக்கு புதிய கணிப்பீட்டின் பிர காரம் ஓய்வூதியம் குறையலாம். ஆனால் அவர்களுக்கு, நடைமுறையில் உள்ள ஓய்வூதியம் வழங்கப்படும்.

இந்த நடைமுறை ஓய்வூதிய நடைடிமுறைச்சிக்கல் திருத்தமா? வாழ்க்கைச் செலவை எதிர்கொள்ளும் மேம்பாடா? மேற்கூறிய சுற்றுநிருபத்தை, திணைக்களத்தின் ஓர் அட்டவணையால் கட்டுப்படுத்த அதிகாரம் உண்டா? சுற்று நிருபத்தில் உள்ள உரிமைகளை அங்கம், அங்கமாக வெட்டி, சிதறடித்துள்ளது. இவர்களின் அட்ட வணை (schedule). இந்த நடவடிக்கை முழுப்பூசனிக்காயை சோற்றில் புதைத்தது போல் ஓய்வூதியர் களை ஏமாற்றும் ஓர் மோசடி வித்தை. இலங்கை அரசு மக்க ளையே ஏமாற்றி விட்ட விகட கவிதை.

ஊதியமற்ற விடுமுறை (No-pay leave) பல்வேறு கோணங்களில் உருவாகிறது. ஆனால் ஓர் ஊழியர் சேவையில் இருந்து ஓய்வுதியம் பெறும்போது அவருடைய ஊதியமற்ற விடுமுறை சேவைக்கால மொத்ததொகையில் இருந்து கழிக்கப்பட்டு, எஞ்சிய (credit) சேவைக்காலத்தை மையமாக வைத்து, அதன் அடிப்படை விகிதாசாரத்தில் ஓய்வூதியம் கணிக்கப்படுகிறது. அத்துடன் இந்த விடுமுறையின் தாக்கமோ அல்லது நாமமோ அஸ்தமனமாகிறது. ஆனால் மீண்டும் அதை அகழ்ந்து, புத்துயிர் ஊட்டி, ஓய்வூதிய மறுசீரமைப்பு செய்யும் போது உட்பு குத்துவது ஓர் அராஜகமாகும். இப்படியான செயல், ஒருவரின் ஒரு செய லுக்கு இரு தண்டனை வழங்கியதாகும். இப்படியான துஷ்பிரயோகத்தை நீதி மன்றமே மறுதலித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஓய்வூதியம் மேம்படுத்தும் போது நடைமுறையில் உள்ள ஊதியம் குறைவதற்கு எச்சந்தர்ப்பத்திலும் இடம் இல்லை. அப்படியானால் இச் செயல் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் செயற்பாடல்ல, இது பின்னோக்கிய செயற்பாடே, அப்படியானல் எமது அரசு நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்கிறோம் என்று பறை சாற்றுவதெல்லாம் பொய். அவர்கள் நாட்டை பின்னோக்கிய பாதையில் இட்டுச் செல்கின் றார்கள் என்ற உண்மை புலப்படு கிறது. 55-60 வயது வரை அரசாங்க சேவையில் தமது உழைப்பைக் கொட்டித் கொண்டவர்கள் அதன் பின் தமது ஒய்வூதியத்தை நியாயமாகவும் நிறைவாகவும் பெற முடியாத அவல நிலையிலேயே லட்சக் கணக்கான ஓய்வூதியம் பெறும் முதியோர் இருந்து வருகின்றனர். எல்லாத் துறைகளிலும் அநீதி நடைபெறும் போது உங்களுக்கு மட்டும் எவ்வாறு எம்மால் நீதி வழங்க முடியும் என்றே அரசு கேட்கிறதோ!

ஓய்வூதியர் . சின்னப்பா

## ஆழிப்பேரலையின்.........

7ம் பக்க தொடர்ச்சி

ஆழிகளை செய்மதி மூலம் ஆராய்ந்து நிலநடுக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஆழிகளை பொறியியல் தடுப்பு முறைகள் மூலம் மேலதிகவிசைகள் நிலத்தைத் தாக்குவதை தவிர்க்க வேண்டும். மேலும் நில நடுக்கம் ஏற்படும் நிகழ்தலை குறைக்க கடலை ஆழப்படுத்தல், ஆழ்கடல் அணுகுண்டுச் சோதனைகள், ஏவுகணைச் சோதனைகளை கட்டுப்படுத்தல் வேண்டும்.

இலங்கைக் கடற்பரப்பில் ஒரு மீன் பிடிப்படகு சற்றுத்திசை மாறிப் போனால் கூட துல்லியமாக கண்டு பிடித்து தாக்கி அழிக்கும் சக்தி படைத்த இலங்கை கடற்படை, விமானப்படை கூட்டு இந்த ஆழிப் பேரலை வரும் போதும் வந்து தாக்கிய பின்பும் மௌனமாக இருந்து விட்டன. எனவே ஆழிப்பேரலை எச்சரிக்கைக் கருவி அமைத்தல் அவசியம் என்ற நிலை ஏற்பட்டு உள்ளது. அத்தகைய கருவி செயற்பட்டு இருக்குமானல் இத்த கைய விபரீதம் நிகழ்ந்து இருக்காது. ஆனால் ஆழிப்பேரலை எச்சரிக்கைக் கருவி முற்றுமுழுதான மாற்றீடு அல்ல. ஆழிப்பேரலை தாக்கின கடற்கரைப்பகுதியில் நிலத்திற்கு கீழ் உயர் அமுக்கத்தில் நீர் சென்றதால் நில வெடிப்புகள் ஏற்பட்டன. மேலும் நிலத்தை அகழும் போது சில இடங்களில் நிலச்சரிவு ஏற்படலாம். எனவே கடற்கரையோரங்களிற்கு அனாவசியமாக செல்வதை தவிர்க்க வேண்டும்.

இலங்கையில் பிரயோக கடல்சார் விஞ்ஞானத்தொழில் நுட்பம் வளர்ச்சி அடையவில்லை. உலகில் மிகப் பெரிய கடல் வளத்தை கொண்டுள்ள வளர்முக நாடு, அதன் உச்ச பயன் பெறுவதற்கு கடல்சார் விஞ்ஞான தொழில் நுட்பம் விருத்தியடைய வேண்டும். அதற்கு பல் கலைக்கழகங்களிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் பாடவிதானங்கள் புகுத்தப்படல் வேண்டும்.

தமிழர் வரலாற்றில், "கல்தோன்றி மண்தோன்றாக்காலத்திற்கு முன் தொன்றிய மூத்தகுடி" என்ற வழக்கிற் உலகில் முதல் இருந்த கண்டம் பாரிய கடல் கோளால் அழிந்து எஞ்சிய தமிழ் தேசம் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் உள்ளது. இவ்வண்மைய கடல் கோள் தமிழர் தாயகத்தினை வரலாற்று ரீரியில் நினைவுபடுத்தியது என்றல் மிகையாகாது.

அதேபோல் சிங்களவர் துட்டகைமுனுவின் வார்த்தைகளை மீள நினைக்கத்தவறவில்லை ஒரு பக்கம் கடல் மறுபக்கம் தமிழர். இவற்றை எல்லாம் எதிர்கொண்டு ஐக்கியத்தை வளர்க்க வேண்டும் என்பதே அனைவரதும் அபிலாசையாகும்.

இயற்கை ஒரு போதும் இனமொழி மத, பிரதேச பால், நிற பேசும் பாராட்டுவதில்லை. ஆனால் இயற்கையின் உற்விப்பான மணிதர்கள் மிகக் கீழ் நிலை நின்று பேதங்களும் பிரிவினைகளும் அகங்காரங்களும் அற்பத்தனங்களும் புரிந்து கொள்ள இன்றனர். வெற்றுக்கு அப்பால் மனித நேயம் வளர்ப்பதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் முன் வரல் வேண்டும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# சர்வதேச நாணய நிதியம்

ஐ.நா வைப் போலவே சர்வதேச நாணய நிதியமும்- உலக வங்கியும் இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவில் உருவாக்கப்பட்டன. இந்த இரண்டு வங்கிகளும் 1944 யூலையில் நியூ ஹாம் சயரில் உள்ள பிருட்டன் வூட்ஸ் (BRETTON WOODS) என்ற இடத்தில் உருவாக்கம் பெற்றன.

இந்த மகாநாட்டில் பிருட்டனைச் சேர்ந்த பிரபல்யம் பெற்ற பொருளாதார நிபுணர் ஜோன் மைனார்ட் கெயின்ஸ் அந்நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்தார். கெயின்ஸ் உலக நாணயமாக புதிய சுயேச்சையான நாணயம் இருக்கவேண்டு மெனக் கோரினார். அது நிராகரிக்கப்பட்டு அமெரிக்க டொலர் உலக நாணயமாக்கப்பட்டது.

ஐ.நா சபையில் ஒரு நாட்டுக்கு ஒரு வாக்கு என்ற நடைமுறையுள்ளது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்திலும் உலக வங்கியிலும் "ஒரு டொலருக்கு ஒரு வாக்கு" என்ற முறையேயுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திலும் உலக வங்கி யிலும் செயற்படு மூலதனத்திற்கு வழங்கப்படும் மூலதனத்தின் தொகையைப் பொறுத்தது. 2002ம் ஆண்டில அமெரிக்காவுக்கு 17.16 வீத வாக்கு இருந்தது. இந்த வாக் குப் பலமானது சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைத் தீர்மானங்களை அமெரிக்கா வீட்டோ அதிகாரத்துடன் எடுப்பதற்கு உத்தரவாதம் வழங்குகிறது. வேறு எந்த நாட்டிற்கும் 6.5 வீத வாக்குகளுக்கு மேல் இல்லை. உலகில் மொத்தத்தில் அமெரிக்க பொருளாதாரம் சுருங்கிய போதும் 1944ம் ஆண்டு அமெரிக்காவுக்கு இருந்த வாக்கு பலமும் -வீட்டோ அதிகாரமும் இன்று அதே அளவில் உள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குனராக ஒரு ஐரோப்பியரே இருந்து வருகிறார். உலக வங்கியின் தலைவராக ஒரு அமெரிக்கரே இருந்து வருகிறார். அமெரிக்கரே அப்பதவியை வகிக்க வேண்டு மென்பது ஒரு எழுதப்படாத விதி. 1955ல் இருந்து ஜேம்ஸ் வூல்பென்சன் உலக வங்கியின் தலைவராக இருந்து வருகிறார். இந்த இரண்டு வங்கிகளினதும் தலைமைக் காரியாலயங்களை அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனில் நிறுவியதும் ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல. சர்வதேச நாணய நிதியம் கோட்பாட்டளவில குறுகிய கால ஸ்திரத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளைச் செய்யும். உலக வங்கி நீண்ட காலத்திட்டங்களுக்கு நிதி வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும். அண்மைக் காலங்களில் இரண்டு வங்கிகளின் செயற்பாடும் இத்தகைய வேறுபட்ட நடவடிக்கைகளைக் கொண்டுள்ளனவா என்பது சந்தேகத்திற்குரியது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையால் 1984ல் டொமினிக்கன் குடியரசில் பெரிய கிளர்ச்சி இடம் பெற்றது. நிதியத்தின் நிபந்த னைகள் தொடர்பாக ஒரு வருட காலம் இழுபறிப்பட்டு அந்த நாடால் நிபந்தனையை நிறைவேற்ற முடியவில்லை. நிதியம் அந்த நாட்டிற்கு எதிராக பொருளாதார தடையை ஏற்படுத்தியது. 1984 ஏப்பிரல் 9ம் திகதி டொமினிக்கன் குடியரசு பணிந்து போயிற்று. உணவு மருந்து என்பனவற்றின் விலைகள் தாராள மயமாக்கப்பட்டது. இரவோடிரவாக மருந்துப் பொருள்களில் விலை 200வீதம் அதிகரித்தது. பால், அரிசி, சமையல், எண்ணெய் என்பனவற்றின் விலை இரண்டு மடங்காயிற்று.

நான்கு நாட்களின் பின் தலைநகர் சான்ரோ டொமிங்கோவில் கலவரம் வெடித்தது. அது முப்பது நகரங்களுக்கும் பரவின. ஏப்பிரல் 25ம் திகதி இரவுடன் இறந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆகவும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 500க்கு மேலானது.

இலங்கையிலும் 1953ல் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையில் விலைகள் அதிகரித்ததும் அதைத் தொடர்ந்து இடம் பெற்ற ஹர்த்தாலும் அதில் ஏற்பட்ட மரணங்கள் அழிவுகள் இலங்கை மக்களுக்கு ஞாபகம் இருக்கும். அந்த ஹர்த்தாலின் விளைவால் பிரதமர் டட்லி கடலில் தரித்து நின்ற கப்பலில் தனது அமைச்சரவைக் கூட்டத்தை நடாத்தியதும். 1956ல் யூ .என்.பி யின் படுதோல்விக்கும் அது வழிகோலியதும் வரலாறு.

# துறைமுகக் கடலின் கீழ் அமைப்பு வரைபடம் ஏன்?

மீட்புப் பணிக்கென வருகை தந்துள்ள இந்தியக் கடற்படையினர் வந்ததும் வராததுமாக கொழும்பு-திருகோணமலைத் துறைமுகங்களை அண்டியுள்ள கடலின் அடி அமைப்பைப் படம் பிடித்து வரைபடம் எடுத்துள்ளனர். அதன் பிரதிகளையும் வெளி உறவு அமைச்சர் கதிர்காமரிடமும் வழங்கியுள்ளனர்.

சுனாமியின் சாட்டில் வந்த இவர்களுக்கு இந்த வரைபட வேலை மேற் கொள்ளுமாறு ஒருவரும் கேட்க வில்லை. அப்படியானால் இந்த கடல் அடிஅமைப்புப் படங்களை என்ன தேவைக்கு இந்தியா பயன்படுத்தப் போகிறது என்ற கேள்வி எழுகின்றது. இராணுவத் தேவைக்கா அல்லது சேது சமுத்திரத்திட்டத்தின் ஒரு பகுதி ஆய்வுக்கா? இந்தியா இவ்வாறு செய்யும் போது இங்கு வந்துள்ள அமெரிக்கப்படைகள் வேறுமனே இருக்குமா? இது வரை எத்தனை வரை படங்கள் வரைந்து முடித்தார்களோ யார் அறிவார்.

# உலகம் வெப்பமாவதும் சூழல் பாதிப்பும்

சுற்றாடல் சம்பந்தமான அகராதியில் பிரச்சினைக்குரிய சொற்பதமாக உலகம் வெப்படைதல் விளங்குகிறது. இந்த வெப்பமடைதல் என்பது மனித சமுதாயத்தை பதற்றமடையச் செய்கிறது. காபனீர் ஒக்சைட் ($CO_2$) வாயு மண்டலத் தில் அதிக மாக உள்வாங்கப்படுவதால் இந்த வெப்பமாதல் இடம் பெறுகிறது.

தினமும் இது இடம் பெறுகிறது. நிலக்கரியை எரித்து தொழிற்சாலைகளை இயங்கவைக்கும் போதும் உலகம் வெப்பமடைகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நுரைச்சோலை அனல் மின் திட்டமும் ஒப்பு நோக்கப் படல் வேண்டும்.

1988ல் ஐ.நா.சபை காலநிலை மாற்றம் தொடர்பாக அவதானித்து ஆலோசனை வழங்க ஒரு நிபுணர்குழுவை நியமித்தது. காபனீர் ஒக்சைட் பூமியின் வாயுமண்டலத்தில் அதிகரிப்பதால் பயங்கரவிளைவு ஏற்படும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இதன் அடிப்படையில் சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக அனேக சர்வதே மகாநாடுகள் இடம் பெற்றுள்ளன.

உலகம் வெப்பமடைவதால் காலநிலை மாற்றமடைவதை எப்படி அணுகுவதென ஒரு உடன்படிக்கை 1992ல் கைச்சாத்திடப்பட்டது. இதில் அமெரிக்கா உட்பட 160 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. அதன் நோக்கம் மனிதர்களால் சுற்றாடலைப் பாதிக்கும் செயல்களைத் தடுப்பதாகும். எவ்வாறாயினும் வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, யப்பான் போன்ற நாடுகளே கூடுதலான காபனீர் ரொக்சைட்டை தொழிற் சாலைகள் மூலம் வெளியிட்டு உலகம் வெப்பமடைதலை அதிகரிக்கச் செய்து வருகின்றன.

மரங்கள் காபனீர்ரொக்சயிட்டை உள்வாங்குகின்றன. அந்த மரங்களை வெட்டினால் அதிக காபனீர்ரொக்சையிட் வளி மண்டலத்தை அடைகின்றன. அந்த மரங்களை தீயிட்டுக் கொழுத்தினால் காபனீர்ரொக்சைட் வெளியிடப்படுகிறது.

அமெரிக்கா அதன் உற்பத்தித் துறைக்கு 85 வீதமான நிலத்தடி எரிபொருளை பயன்படுத்துகின்றது. இது உலகை அதிகம் வெப்பமடையச் செய்கிறது.

உலகில் 90 வீதமான மக்களுக்கு உலகம் வெப்பமடைவதன் விளைவு பற்றிய விளக்கமில்லை. காடுகளை புதிதாக வளர்ப்பதன் மூலம் ஓரளவு வெப்ப அதிகரிப்பைக் குறைக்கலாம். கடலடியில் உள்ள சிறிய தாவரம் ஒன்று காபனீர்ரொக்சைட்டை பெருமளவில் உறிஞ்சுகிறது.

கடலின் நீர்மட்டம் வருடமொன்றிற்கு 25 செ.மீட்டர் உயர்வடைகின்றது. உலகம் வெப்பமடைவதால் பனிப்படலங்கள் உருகி மேலதிக நீராக கடலை வந்தடைகிறது. எதிர்காலத்தில் கடல் நீர்மட்டம் தற்போதுள்ளது போல அல்லாமல் 30 செ.மீட்டர் உயர்வடையும் சாத்தியமுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. கடல் மட்டம் அதிகரிப்பதால் சிறிய தீவுகள் அழிந்து போய்விடும். அத்தீவுகளில் வாழ்பவர்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டிய நிலையேற்படும்.

எனவே உலகம் வெப்பமடைவதற்கும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சுரண்டல் பேராசைகளுக்கும் இடையிலான தொடர்பு பற்றி மக்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். இதனாலேயே ஏகாதிபத்திய எதிர்ப்பின் அவசியத்தை நியாய சிந்தை உள்ளவர்களும் மனிதகுல நேசிப்பாளர்களும் வற்புறுத்தி வருகிறார்கள்.

# பாலஸ்தீன விடுதலைப் போராட்டப் பயணத்தில்

## யாசீர் அரபாத் தோற்றுவித்த ஐக்கிய முன்னணித் தலைமை

பாலஸ்தீன விடுதலை இயக்கம் என்ற ஐக்கிய முன்னணியை உருவாக்கியமையும் அதனை கூட்டுத் தலைமையாகவே கொண்டு நடத்தியமையும் மறைந்த பாலஸ்தீன தலைவர் யாசீர் அரபாத்தின் விஷேடமான அம்சங்களில் மிகவும் அடிப்படையானதாகும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் என்ற ஐக்கிய முன்னணியில் பாலஸ்தீன தேசிய விடுதலை இயக்கம் (ஃபதா), பாலஸ்தீன விடுதலைக்கான வெகுஜன முன்னணி (PFLP), பாலஸ்தீன விடுதலைக்கான ஜனநாயக முன்னணி, பாலஸ்தீன விடுதலைக்கான அரபு முன்னணி, பாலஸ்தீன வெகுஜனப் போராட்ட முன்னணி ஆகியவற்றுடன் இன்னும் 6 அமைப்புகளும் சேர்ந்தே 1964ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அம்முன்னணியில் மிகவும் பிரபல்யமானதும் சக்திவாய்ந்தது மான ஃபதா அமைப்பின் தலைவராக யாசீர் அரபாத் இருந்தார். 1969ஆம் ஆண்டு அவர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் (பா.வி.இ) தலைவரானார்.

இவ்வமைப்பில் ஜனநாயக அமைப்புகளும் சமயம் சார்ந்த அமைப்புகளும் தீவிரவாத தேசிய அமைப்புகளும் இடதுசாரி அமைப்புகளும் கம்யூனிஸ்ட் அமைப்புகளும் இணைதிருந்தன. அவற்றை இணைப்பதில் யாசீர் அரபாத்தின் உழைப்பு மிகவும் முக்கியமானதாக விளங்கியது. அவருடைய அமைப்பான ஃபதா தனியாக இயங்கக்கூடிய வல்லமையைக் கொண்டிருந்தபோதும் அனைத்து பாலஸ்தீன மக்களின் அபிலாஷைகளையும் பிரதான நோக்கமாகக் கொண்ட பா.வி.இ. அமைக்கப்பட்டது. ஃபதா இயக்கத்தை ஏகத்தலைமையாக நிலை நிறுத்த முயற்சிக்காமல் பல கருத்துக்களை கொண்டிருந்த பல அமைப்புகளை ஐக்கியப்படுத்தியே பா.வி.இ அமைக்கப்பட்டது.

1968 இல் அவ்வமைப்பினால் உருவாக்கப்பட்ட பாலஸ்தீன தேசிய பட்டயத்தின் ஏற்பாடுகளின்படி பாலஸ்தீன விடுதலை இயக்கமே பாலஸ்தீன மக்களின் உத்தியோகபூர்வமான தலைமை அரசியல் சக்தியாக பிரகடனம் செய்யப்பட்டது. இதன் மூலம் அதில் அங்கம் வகிக்கும் தனித்தனி அமைப்புகள் தனித்தனியாக இயங்குவதற்கான சுதந்திரம் பறிக்கப்படாமலே எல்லா அமைப்புகளும் பொது இணக்கப்பாட்டுடன் இயங்குவதற்கான வழியேற்பட்டது. இயக்க முரண்பாடுகளும் அவற்றுக்கிடையேயான சகோதரத் தாக்குதல்களும் குறையத்தொடங்கின. பா.வி.இ ஜனநாயக அடிப்படையிலான ஸ்தாபன வடிவமைப்பைக் ஏற்படுத்திக்கொண்டது. நிறைவேற்றுக்குழு, மத்திய குழு, ஆலோசனை சபை, பாலஸ்தீன தேசிய சபை போன்ற படிமுறையான ஸ்தாபன முறைகளை கொண்டதாகும். இவற்றின் மூலம் அம்முன்னணியில் அங்கம் வகித்த அமைப்புகளிடையே சமத்துவம் ஜனநாயகம் பொது இணக்கம் என்பன கடைப்பிடிக்கப்பட்டது. இஸ்ரேலிய ஸீயோனிசத்தையும் அதற்கு ஆதரவான ஏகாதிபத்திய நாடுகளையும் பிரதான எதிரிகளாகக் கொண்டு செயற்பட்டது.

**~இ.தம்பையா~**

பாலஸ்தீனம் என்பது இஸ்லாமியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்தபோதும் கிறிஸ்தவர்களும் யூதர்களும் கூட உள்ளடங்கியதே ஆகும். பா.வி.இ என்பது யூத எதிர்ப்பு, கிறிஸ்தவ எதிர்ப்பு இயக்கமாக முன்னெடுக்கப்பட வில்லை. (சில சந்தர்ப்பங்களில் யூதமக்கள் பா.வி.இ. குண்டுவெடிப்புகளுக்கு இலக்காகியுள்ளனர் என்பதை மறுக்க முடியாது)

1974 ஆம் ஆண்டு பா.வி.இயக்கத்தை பாலஸ்தீன மக்களின் பிரதிநிதியாக ஐ.நா.சபை அங்கீகரித்தது. அரபு நாடுகளின் றாப்பேட் மாநாட்டில் பாலஸ்தீன மக்களின் நெறிமுறையான பிரதிநிதியாக பா.வி.இ பிரகடனம் செய்யப்பட்டது.

1970ஆம் ஆண்டு முதல் லெபனானில் இயங்கி வந்த பா.வி.இ தலைமையகம் 1982 லெபனானை இஸ்ரேலியப் படைகள் ஆக்கிரமித்த பின்பு அங்கிருந்து தியூனிசியாவிற்கு மாற்றப்பட்டது.

1987 இல் பாலஸ்தீன விடுதலை இராணுவம் மேற்குகரைப் பகுதிகளில் உக்கிரமான தாக்குதல்களை மேற்கொண்டு அதன் நிலைகளை பலப்படுத்திக் கொண்டது. இதனையடுத்து உலகநாடுகளின் கவனம் மீண்டும் பாஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் பக்கம் திரும்பியது.

சோவியத்யூனியனின் வீழ்ச்சியுடன் ஏற்பட்ட சர்வதேச அசமத்துவ நிலையால் அரபாத்தின் தலைமை சில விட்டுக் கொடுப்புகளை செய்யத்தொடங்கியது. 1988 ஆம் ஆண்டு ஐ.நா.சபையில் உரையாற்றிய அரபாத் பா.வி.இ.ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்ததுடன் பாலஸ்தீனம், இஸ்ரேல் அதன் அயல்நாடுகள் உட்பட மத்தியகிழக்கு முரண்பாட்டிற்குட்பட்ட சகல தரப்பினரினதும் அமைதிக்கும் பாதுகாப்பிற்குமான உரிமைகளை ஆதரிப்பதாகக் கூறினார். அத்துடன் ஐ.நா. சபையின் தீர்மானம் 242 இன்படி அங்கீகரிக்கப்பட்ட இஸ்ரேலை யதார்த்தமானதென ஏற்றுக் கொண்டு பாலஸ்தீன சுதந்திர அரசை பிரகடனப்படுத்தினார். (இஸ்ரேலை ஏற்றுக் கொண்டமை பாலஸ்தீன தேசிய பட்டய ஏற்பாடுகளுக்கு முரண்பாடானதாகும்) இப்பேச்சு பா.வி.இ அங்கத்துவ அமைப்புகளிடையே கருத்து முரண்பாட்டை ஏற்படுத்தியது.

பாலஸ்தீன -இஸ்ரேல் பேச்சுவார்த்தையினால் 1993 இல் ஏற்பட்ட ஒஸ்லோ உடன்படிக்கையினாலும் மேலும் கருத்து முரண்பாடுகள் வலுத்தன. இந்த உடன்படிக்கையின்படி மேற்குக்கரை காசாப்பகுதி ஜெருஸலேம் ஆகியவற்றையே பால ஸ்தீனப்பிரதேசமாக பா.வி.இ வரையறுத்துக்கொண்டது. அவ்வுடன்படிக் கையின்படி மேற்குக்கரை காசாப் பகுதிகளில் நிர்வாகத்தை செய்வதற்கு பாலஸ்தீன தேசிய அதிகார சபை 12மே மாதம் 1994 அன்று நிறுவப்பட்டது. அத்துடன் 24 வருட இடைவேளைக்குப்பின்னர் காசப்பகுதிக்கு அரபாத் சென்றார். 1994 டிசம்பர் 10 ஆம் திகதி யாசீர் அரபாத்திற்கும் அப்போதைய இஸ்ரேலிய பிரதமர் யிட்ஷாக் ராபினுக்கும் சமாதானத்திற்கான நோபல்பரிசுகள் வழங்கப்பட்டன. அரபாத் 1996இல் பாலஸ்தீன தேசிய அதிகாரசபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இதன்பிறகு 1996இல் இஸ்ரேல் அரசைக் கலைக்க வேண்டுமென்றிருந்த பாலஸ்தீன தேசிய பட்டய ஏற்பாடுகள் உத்தியோகப் பூர்வமாக இரத்து செய்யப்பட்டன. இவ்வாறு இரத்து செய்ததனால் பாலஸ்தீனவிடுதலைக்கான வெகுஜன இயக்கம் பாலஸ்தீன விடுதலைக்கான ஜனநாயக முன்னணி என்பன பா.வி. இயக்கத்தின் நிறைவேற்றுக்குழுவிலிருந்து வெளியேறின. இது பாலஸ்தீன வி,இ. என்ற ஐக்கிய முன்னணிக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் ஹமாஸ் இயக்கம் (இஸ்லாமிய மத அடிப்படைவாதத்தைக் கொண்ட இயக்கம்) அதனது தாக்குதல்களை விரிவுபடுத்திக்கொண்டது . இவ்வியக்கம் சி.ஐ.ஏ யினால் போஷிக்கப்பட்ட ஒரு இயக்கமாகும். சமாதான நடவடிக்கைகளுடன் யாசீர் அரபாத் செய்த சமரசங்கள் விமர்சனத்திற்குட்பட்டவையே.

12ஆம் பக்கம் ➡

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ரெஜியின் எச்சங்களிலிருந்து இடதுசாரி எதிர்ப்பை வடிவமைக்கும் மதுசூதனன்

ரெஜி சிறிவர்த்தன ஆங்கிலப் மொழிப்புலமையைக் கொண்டிருந்த ஒரு அறிவுஜீவி. அவர் எழுத்துத் துறையில் வித்தியாசமான போக்குகளை பதிவு செய்துள்ளார். தமிழ் மக்களின் சுயநிர்ணயஉரிமைப் போராட்டத்தை ஆதரித்து தமிழ்மக்களின் மீதான இலங்கை பேரினவாத முதலாளித்துவ அரசின் ஒடுக்குமுறைகளைக் கண்டித்து கொழும்பில் வாழ்ந்து வந்த ஒரு உதிரிச் சிங்கள அறிவுஜீவி.

அவர் லங்கா சமசமாஜக்கட்சியுடன் இருந்த காலமே அவரை ட்ரொஸ்கியவாதியாகக் காட்டிய காலகட்டமாகும். அவருக்கு இடதுசாரிகளுடன் இருந்த அரசியல் பிணைப்பை இரண்டாம் உலக யுத்தக்காலத்திற்கு பிறகு அறுத்துக்கொண்டதாக அவரே ஒப்புக்கொண்டுள்ளார். இளமையிலேயே அவருக்கு மாக்சியத்தின் ஒரு டோஸ் ஊட்டப்பட்டிருந்ததன் காரணமாக அவருக்கு சிங்கள தேசியவாதத்தின் காய்ச்சல் தொற்றவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார். இது தான் அவருடைய வரையறை. அவரது இடதுசாரி அரசியல் தொடர்பு. இத்தகைய வரையறைகளூடு என்பதை விளங்கிக்கொள்ள முடியும். இவரைப் பற்றி தெ.மதுசூதனன் என்பவர் ஜனவரி 16ம்,23ம் திகதிய ஞாயிறு தினக்குரல் இதழ்களில் இரண்டு தொடர் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

ரெஜியை மையமாக வைத்துக் கொண்டு இடதுசாரிகளை பொத்தாம் பொதுவாக (பொதுப் புத்திமட்டத்திற்கு மேலாகவும் கீழாகவும்) தாக்குத் தாக்கென்று தாக்கியுள்ளார். இவர் தமிழ்த் தேசிய வாதத்தையும் பின்நவீனத்துவத்தையும் வலிந்துப் புண்ணாகக் கொண்டு வாந்தி எடுக்கும் ஒரு மாக்சிய ஒவ்வாமை(அலேர்ஜி) நோயாளியாவார். இவர் தமிழகத்தில் சிறிது காலம் இணையத்தளமொன்றில் வேலை செய்தபோது அடக்கி வைத்திருந்த மாக்சிய விரோதங்களையெல்லாம் (அங்கு இடதுசாரி கட்சித் தோழர்களுடன் மாக்சிய விரோதமற்றவர் போன்று மிகவும் பவ்வியமாக நடந்து கொண்டவர். அது அவரின் இருப்பிற்கான தந்திரோபாயமாக இருந்தது) தற்போது கொழும்பிலிருந்து கொண்டு கொட்டிக் தீர்க்கிறார். சுனாமி அடித்து நாடும் மக்களும் மீளமுடியாத இழப்புகளுக்குள்ளாகியிருக்கும் போது அது பற்றியோ அந்நிய ஆக்கிரமிப்பு படைகளின் வருகை பற்றியோ வாய்திறக்காமல் ரெஜி சிறிவர்த்தனாவின் மிச்சசொச்சங்களின் மீது நின்று கொண்டு இடதுசாரி விரோதத்தை உரத்து வாசிக்கப் பார்க்கிறார் மதுசூதனன். இலங்கையின் இடதுசாரி இயக்கம் இன்று பலமாக இல்லை. இதற்கு அவ்வியக்கத்தின் அகக் காரணிகளும் புறக்காரணிகளும் இருக்கின்றன. தத்துவார்த்த ரீதியாக ட்ரொஸ்கிய வழிகாட்டியாக கொண்டு செயற்படும் அமைப்புகள் அரசியல் குழப்பம் நிறைந்தவையாகவே இருந்துவருகின்றன. திரிபுவாத கருத்தியல்களையும் நடைமுறைகளையும் ஏற்றுக்கொண்டு கம்யூனிஸ்ட்டுகள் என்று இயங்கும் அமைப்பும் சுயமிழந்த இயலாமை அரசியலையே செய்துவருகிறது. இந்த இடதுசாரி அமைப்புகளின் தவறான அம்சங்கள் இருக்கின்றன. இவற்றின் பாதிப்புகள் அரசியல் இலக்கிய நடவடிக்கைகளிலும் வெளிப்பட்டு வருகின்றன. எனினும் இவற்றுக்கப்பால் நேர்மையான கம்யூனிஸ்டுகளும் இடதுசாரிகளும் செயற்பட்டு வருகிறார்கள் என்பது மறைக்கப்படக் கூடியதல்ல.

ஆனால் மதுசூதனன் குறிப்பிடும் ஜேசுராசாவின் அலை சஞ்சிகை இடதுசாரி இயக்கத்தின் சரியான பிரிவுகள் பற்றியெல்லாம் கவலைப்படாமல் பொத்தாம் பொதுவாக முற்போக்கு மக்கள் இலக்கியத்தையும் இலக்கியவாதிகளையும் தாக்கியே வெளிவந்தது. இன்னும் ஜேசுராசா அதனையே செய்து வருகிறார். அலை சஞ்சிகையில் ரெஜி பற்றிக் குறிப்பிட்டதால் மட்டுமே ரெஜி இடதுசாரி இயக்கம் பற்றி அறிவுபூர்வமான கருத்துக்களை வைத்திருந்தார் என்று விளங்க வேண்டியதில்லை. இடதுசாரி இயக்கங்கள் சிலவற்றில் தேசிய இனப்பிரச்சினை பற்றிய சரியான கண்ணோட்டம் இருக்கவில்லை என்பதால் தான் இடதுசாரி இயக்கங்களிடமிருந்து ரெஜி தூரத்தில் இருந்ததில்லை. அவருக்கு வசதியாக இருந்த பொதுவான பொறுப்பிற்குட்படாத அவருடைய உதிரிப் புத்திஜீவித்தனம் காரணமாகவே அவர் இடதுசாரி இயக்கங்களிடமிருந்து தூரத்திற்கு விலகிச் சென்றார்.

தேசிய இனப்பிரச்சினை பற்றி இடதுசாரி இயக்கத்தில் காணப்பட்ட தவறுகளுக்கு எதிராக ரெஜி, குமாரி ஜெயவர்த்தன போன்றவர்கள் செய்த போராட்டம் தான் என்ன? இடதுசாரி இயக்கங்களுக்கு எதிரான கருத்தியல் தளத்தை உருவாக்கியதைத் தவிர இவர்கள் வேறு எதனையும் செய்ய வில்லை. இது முதலாளித்துவ வாதிகளுக்கும் பேரினவாதிகளுக்கும் வசதியான தாகவே அமைந்தது.

ரெஜி ஒரு தாராளவாதியாகவே (லிபரல்வாதி) விடயங்களை அணுகியுள்ளார். அதனடிப்படையில் அவர் வாழ்ந்திருக்காலாம். அவர் நீலன் திருச்செல்வத்தின் வழிகாட்டலில் இயங்கிய இனத்துவ ஆய்வு

**-எம்.அஜித்-**

நிலையத்திற்கே கூடிய பங்களிப்புகளை செய்துள்ளார். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தில் நீலன் திருச்செல்வம் எந்த இடத்தில் இருந்தார் என்பது மதுசூதனனுக்கு தெரியாததா? ரெஜி சிறிவர்த்தன பற்றி "மறுவாசிப்பொன்றை" செய்து தமிழ்மக்களுக்கு அவர் பற்றி புதிய அறிமுகத்தை செய்வதாக கூறிக்கொண்டு இடதுசாரி இயக்க எதிர்ப்பிரசாரத்தை மதுசூதனன் மீண்டும் தொடங்கி உள்ளதையே அவரது கட்டுரை காட்டுகிறது.

ரெஜியை இடதுசாரிகள் அல்லது கம்யூனிஸ்டுகளை விட மேலாகக் காட்டுவதற்கான மதுசூதனனின் முயற்சி அவர் தன்னை சுற்றி போர்த்திருக்கும் போர்வைக்கு அப்பால் அவரின் சுயரூபத்தை வெளிக் காட்டியுள்ளது. அவர் ரெஜியை "மனிதாயவாதியாக" காட்டி மாக்சிய லெனினிஸத்திற்கு அப்பால் வெறும் "மனிதாயவாதத்தை" முன்நிலைப்படுத்தப் பார்க்கிறார். உண்மையான மாக்சிய லெனினிஸவாதிகளுக்கு அவர்களை கடந்த மனிதாயவாதிகள் என்று யாரும் இல்லை. அது வெறும் கற்பனையும் மாக்சியத்திற்கு எதிரான போக்குமாகும். ரெஜியை மாக்சியம் கடந்த மனிதாயவாதியாக காட்ட முற்பட்ட மதுசூதனன் சிங்கள மேலாதிக்கத்தை மையமாகக் கொண்டிருந்த மனிதாயவாதியாக நடிகர் காமினி பொன்சேகாவையும் போற்றுகிறார். ஆனால் காமினியின் "சருங்கலய", "நொமியன மினிசு" போன்ற திரைப் படங்கள் அவரின் உள்ளார்ந்த சிங்கள மேலாதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளன. இவரை உன்னதமானவராக காணும் மதுசூதனன் இடதுசாரிகளை பரம எதிரிகளாக கொள்கிறார் என்றால் அவரின் அறிவுக் கண்களில் அடிப்படைக் கோளாறு இருப்பதையே எடுத்துக்காட்டுகிறது. அவர் ரெஜி சிறிவர்த்தனாவையும் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை. தன்னுடைய இடதுசாரி விரோதத்தை பிறர்துணையின்றி வெளியிடும் துணிவையும் கொண்டிருக்கவில்லை. சிங்கள தேசியவாதம் பௌத்த தேசியவாதம் போன்றவற்றுக்கு எதிராக சரியான திசையில் இடதுசாரி இயக்கத்தை அணுகுவதற்கு தமிழ்த் தேசியவாதிகள் செய்த முயற்சிகள்தான் என்ன? இடதுசாரி இயக்கத்தை பலவீனப்படுத்தும் கருத்துக்களை பரப்பியதை விட இடதுசாரிகளைத் தாக்கி இடதுசாரிகளுக்கு எதிரான (லிபரல்) தாராள வாதிகளை போற்றியதைத் தவிர வேறு எதையும் அவர்கள் செய்யவில்லை. இலங்கையின் சில பௌத்த பிக்குகளின் இன,மத மேலாதிக்க போக்கை கண்டித்து எழுதுவராக நினைத்துக் கொண்டு கிறிஸ்தவ மதத்தை விட சில இயங்கியல் அம்சங்களை கொண்டிருந்த பௌத்த மதத்தையே ரெஜி சாடியுள்ளார். இது சைவ, இந்து தமிழர்களை மகிழ்வித்திருந்தாலும் இலங்கையின் பெரும்பான்மை மக்களான பௌத்தர்களை சரியான திசையில் பயணிக்க வழிகாட்டி இருக்க முடியாது. கிறிஸ்தவ மதத்தின் தோற்றத்தைவிட பௌத்த மதத்தின் தோற்றத்தை குறைத்து மதிப்பிடும் ரெஜியின் நிலைப்பாட்டுக்கு மதுசூதனன் சப்பை கட்டுகிறார். இது சிங்கள பௌத்த பேரினவாதத்தையும் சிங்களம் பேசும் பௌத்தத்தை அனுஷ்டிக்கும் சாதாரண மக்களையும் பிரித்துப்பார்க்க தவறும் தமிழ் மேட்டுக்குடி குறுந்தேசிய வாத நிலைப்பாடாகும். இது இனங்களிடையேயான ஐக்கியத்திற்கான அவாவல்ல.

மேட்டுக்குடித் தமிழர்களிடம் காணப்படும் இடதுசாரிகளைத் தீண்டத்தகாதவர்களாகக் கொள்ளும் பழைமைவாத அடிப்படைகளை சிந்தனையிலும் செயலிலும் இருந்து அகற்றாது தமிழ்த் தேசியவாதத்தை முன்னெடுக்கும் தொடர்ச்சியிலேயே மதுசூதனன் போன்றவர்கள் கருத்து ரைக்கின்றனர். ரெஜி சிறிவர்த்தனா பற்றி எழுதிக் கொண்டதன் மூலம் மதுசூதனனின் சுயரூபம் வெளிச்சத்திற்கு வந்துள்ளமை நல்லதோர் விடயமாகும். ரெஜி சிறிவர்த்தனா போன்ற ஆங்கிலப் புலமை மிக்க ஆனால் கருத்துக் குழப்ப முள்ள எத்தனை உதிரிஅறிவுஜீவிகள் இருந்தும் நாட்டுக்கோ மக்களுக்கோ எந்த வித பயனும் கிடைக்காது. அது போல் புதிய தலைமுறையினரிடையே குழப்பக் கருத்துக்களைப் பரப்ப முற்படும் மதிசூதனன் போன்ற அரைகுறைப் அறிவுஜீவிகளாகக் காட்டிக் கொள்ள முற்படுவோரால் தமிழர் பழைமை வாதத்தை பாதுகாத்து நியாப்படுத்த மட்டுமே முடியும்.

# சுனாமிப் பேரலைக்கு அன்புத் தலாட்டு

சும்மா கிடந்த கடல்
சுரணை கொண்டெழுந்தது
அலைக் கரங்களை அகல விரித்து
அமைதியாய்க் கிடந்த ஊர்களையெல்லாம்
உருட்டி எடுத்து உருக்குலைத்தது!
இந்தோனேசியா, தாய்லாந்து, இலங்கை, இந்தியா,
அந்தமான், நிக்கோ பார், மாலை தீவுகள்
எல்லாம் பாதியும் முழுதுமாய், கிராமங்களாய்,
நகரங்களாய்,
குறையுயிராய், கல்லாய், மனிதராய், காடாய்,
கரைகளாய்,
வீடாய், மரங்களாய், வாகனங்களாய்,
விலங்குகளாய்,
சொல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் ஒன்றென்று உணர்த்தி
அகப்பட்ட தெல்லாம் சிதைத்து அழித்து,
ஆழிப் பேரலை எழுந்து வந்து
ஊழித் தாண்டவம் நடத்திப் போயிற்று!
யார் செத்தார்? யார் பிழைத்தார்?
யார் அகப்பட்டார்? யார் மீண்டார்?
பாலகர்கள், குழந்தைகள், பிள்ளைகள், சிறுவர்கள்,
பெண்கள், ஆண்கள், முதியோர், நோயாளிகள்,
ஏழைகள், பணக்காரர், படித்தவர், பாமரர்,...
இஸ்லாமியன், பௌத்தன், சைவன், கிறிஸ்தவன்...
நல்லவன்,கெட்டவன், அரசியல்வாதி, ஏவலாளன்
பேதங்கள் எதுவும் பேரலைக்குத் தெரிந்திலை
ஆனால்... ஆனால்...
ஒரு சிலருக்கு மட்டும்
எல்லாம் தெரிந்திருந்தது!
இப்படி ஆகு மென்று
முன்பே தெரிந்திருந்தது, ஆயினும்
சொல்ல வழியின்றி சோம்பிக் கிடந்ததாய்
மெல்ல விழுங்கியே மூக்கால் அழுதனர்!
கொள்ளைச் சிரிப்புடன்
கூடார தளவாடங்களுடன்
உதவிக் கரம் நீட்டி
உலகமாய் அவரே வந்தனர்!
கனரக வாகனம், கனரக விமானம்,
கனரகக் கப்பல், கனரக மாந்தர்,
கொள்ளைச் சிரிப்புடன்
கூடாரா தளவாடங்களுடன்
உதவிக் கரம் நீட்டி
உலகமாய் அவரே வந்தனர்!
அம்மா, தம்பி, உறவுகள் எல்லாம்
ஆஹா என்றே வரவேற்க
அவர்கள் மட்டும் கொடுப்புக்குள் சிரித்து
கைலாகு கொடுத்தனர்!
ஊருக்குள் நுழையும் உத்தர வாதமாய்!
ஆர் ஆரோ ஆர் இவரோ!
ஆராரோ ஆரிவரோ!
பிள்ளையைக் கிள்ளி விட்டவரும் அவரே
தொட்டில் தாலாட்டுத் தருபவரும் அவரே!
ஆராரோ ஆரிவரோ!

மாலை வரோதயன்

# சுந்தர ராமசாமியின் சுயரூபம்

சங்கராச்சாரி கைது தொடர்பாக தீரா நதி டிசெம்பர் 2004 இதழில் எழுதும் போது "ஒவ்வொரு எழுத்தாளனும் தனது கருத்தை ஆத்மார்த்தமாகச் சொல்வதற்கான வெளி யை நாம் உருவாக்க வேண்டும். இன்று சமூக மாற்றத்தை விரும்புகிறவர்களும் விரும்புவது போல் காட்டிக்கொள்கிறவர்களுக்கும் கிடைக்கும் வெளி சமூக மாற்றத்தை விரும்பாதவர்களுக்குக்கிடைப்பதில்லை" என்றும் அவர்கள் முன்வைக்கும் கருத்துக்களை எதிர்கொள்ளாமல் முத்திரை குத்தி ஊடகத்துறையினர் அவர்களை ஒதுக்கி வைக்கிறார்கள் என்ற தோரணையிலும் சுந்தர ராமசாமி எழுதியுள்ளார்.

சமூக மாற்றத்தை விரும்பாதவர்கட்குக் களமில்லை என்று உண்மையிலேயே சுந்தர ராமசாமி நினைக்கிறாரா? இன்று ஆன்மீகம், மரபு, பண்பாடு என்ற பேர்களில் எழுதுகிற விஷயங்களில் மாற்றம் வேண்டுமென்ற தொனியா உள்ளது? அவர்களுக்குக்கிட்டாத வெளியா மாற்றத்தை வேண்டுகிறவர்கட்குக் கிட்டுகிறது?

சமூக மாற்றம் பற்றிய எந்தப் பார்வையுமே அற்ற எழுத்துக்கள் தான் பெரிய சஞ்சிகைகளிலும் நாளேடுகளிலும் ஆதிக்கஞ் செலுத்துகின்றன. இவர் வேண்டுகிற சமூக மாற்றமே வேண்டாமென்று வற்புறுத்துகிறவர்களின் எழுத்துக்களுக்குச் களம் வேண்டும் என்பது தானோ?

சோ.ராமசாமி என்கிற படுபிற்போக்கு வாதி சமூக அக்கறை என்ற பேரில் சமூக மாற்றத்தை எதிர்த்து எழுது வதற்கு இல்லாத ஊடக முக் கியத்துவமா? சுந்தர ராமசாமி விரும்புவது என்ன என்பது இப்போது கொஞ்சம் வெளிவெளியாகத் தெரியவருகிறது. மௌனமான பெரும்பான்மை பற்றி மேற்கில் அதிகம் பேசியவர்கள் வலதுசாரிகளாகவே இருந்துள்ளனர். சமூக அக்கறையுள்ள குரல்களை அடக்குகிற முயற்சி அது. மௌனம் கலைத்து எழுப்ப விரும்புகிற குரல்கள் மாற்றத்துக்கு எதிரான குரல்களாகவே இருந்துள்ளன.

அதுபோக ஊடகங்கள் இப்போது உலாவருகிற சுந்தர ராமசாமி சமூக மாற்றத்தை விரும்புபவரா? விரும்புவது போல காட்டிக் கொள்கிறவரா? அல்லது விரும்பாதவரா? அவரது பக்தர் குழாம் பதில் சொல்லட்டும்.

திருமுகன்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று11 பெப்ரவரி 2004 பக்கம்12 விலை 12/- சுழற்சி 77

## முதல் மாத நினைவஞ்சலி

சுனாமி கடற்கோள் பேரழிவால் உயிர்களைத் துறந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் எமது ஒரு மாத நினைவஞ்சலியைத் தெரிவித்து உறவுகளை இழந்து தவித்து நிர்க்கதியாகி நிற்கும் மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். துக்கத்தைக் பலமாக மாற்றி பறிக்கப்பட்ட இயல்பு வாழ்வை மீளக் கட்டியெழுப்பி முன்செல்ல சகலரும் மனத்திடம் கொள்ள வேண்டும் என வேண்டுகின்றோம்.

*ஆசிரியர் குழு*

## ஜே. வி. பி யும் பேரினவாதிகளும்
## நூறு சுனாமி வந்தாலும் திருந்தவே மாட்டார்கள்

சுனாமிப் பேரழிவு வந்து ஒரு மாதம் கடந்து விட்டது. பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையின் கரையோராங்களைச் சேர்ந்த மக்கள். அதுவும் அன்றாட உழைப்பாளிகள். அதற்கும் மேலாக மனிதர்கள். இம் மனிதர்களில் சுனாமி எவ்வித வேறுபாட்டையும் காணவில்லை. ஆனால் சுடுகாட்டில் நின்று அரசியல் ஆதிக்க வெறிபிடித்தாடும் பேரினவாதிகளுக்கு பாதிக்கப்பட்ட மக்களை மனிதர்களாகத் தெரியவில்லை. சிங்களவர் தமிழர் முஸ்லீம்கள் வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என்றே இந்த இழிந்த பேரினவாதிகள் பேதம் காட்டி நிற்கின்றனர். இதனால் சுனாமிப் பேரழிவால் பெரும் பாதிப்பைப் பெற்ற வடக்கு கிழக்கும் தமிழ் முஸ்லீம் மக்களும் புறக்கணிக்கப்படுகின்றனர்.

இதில் ஜே. வி. பி முன்னணிப் பாத்திரம் வகித்து நிற்கிறது. வடக்கு கிழக்கையும் மக்களையும் புலிகளும் புலிப் பிரதேசமும் என்றே ஜே. வி. பி. வரையறுத்து அங்கு நிவாரணம் புனர்வாழ்வு புனரமைப்பு செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. வெளி நாடுகளில் இருந்தும் உள்ளுரிலும் கிடைத்த நிதி, பொருட்களை விநியோகிக்கவும் மீளக் கட்டியெழுப்பவும் புலிகள் இயக்கத்தை உள்ளடக்கிய பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஜே. வி. பி பெரும் தடையாக இருந்து வருகின்றது. ஜனாதிபதி, கதிர்காமர், பிரதமர் போன்றவர்கள் சர்வதேச உதவிகளுக்காக வேனும் ஒரு அமைப்பு ஒன்றைத் தங்களது வசதி விருப்பபடி உருவாக்குவதற்கும் அதில் புலிகளையும் இனைப்பதற்கும் அரைகுறை மனத்துடன் முன் வந்தாலும் ஜே. வி. பி அதற்கு எதிராகப் போர்க் கொடி தூக்கி நிற்கிறது.

எந்த விதமான பொதுக் கட்டமைப்பும் தேவையில்லை. அரசாங்க நிறுவனங்கள் ஊடாக ஏதாவது அற்ப சொற்பங்களை பிச்சை போடுவது போன்று வீசியெறிந்தால் போதும் என்ற பேரினவாத அகங்காரத்துடனேயே ஜே. வி. பி நின்று வருகின்றது. தனது வாக்கு வங்கிப் பிரதேசங்களில் மீட்புப் பணி, நிவாரண விநியோகம், புனர்வாழ்வு, புனரமைக்கு எனத் தமது விஷேட அணிகளை உருவாக்கி செயல்பட்டு வருகிறது. அத்தகைய நடைமுறைக்கு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும் அரசாங்க ஊடகங்களில் தம்மை விளம்பரப்படுத்த இடமளிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டும் ஜே. வி. பி புலிகள் இயக்கம் வடக்கு கிழக்கில் தமது சொந்தப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதை மோசமான பேரினவாதப் பிரசாரத்தின் மூலம் எதிர்த்து நிற்கிறது.

ஜே. வி. பி யின் இப் பேரினவாத நிலைப்பாட்டிற்கு பௌத்தமதப் பேரினவாதிகளும் பேரினவாத ஊடகங்களும் பக்கத் துணையாக நின்றும் வருகின்றன. சுனாமிப்பேரழிவின் போது மேலெழும்பி வந்த மனித நேய உணர்வுகள் அரசியல் தளத்திலும் உட்புகுந்து நிலைத்து விடுமோ என்ற அச்சத்தில் புலிகள் எதிர்ப்பு என்ற பெயரில் தமிழர் விரோத பேரினவாதத் தீ அணைந்து விடக் கூடாதவாறு ஜே. வி. பி எண்ணெய் வார்த்து நிற்கிறது. இத்தகைய ஜே. வி. பி சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பவனவற்றின் பேரினவாதிகளும் ஏனைய மதம், சமூகம் சார் பேரினவாதச் செயற்பாட்டளர்களும் ஒரு போதும் சரியான இடத்திற்கு வரவே மாட்டார்கள். ஒரு சுனாமி மட்டு மல்ல நூறு சுனாமிகள் வந்தாலும் இவர்கள் திருந்தவே மாட்டார்கள். திருந்துவார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது. காரணம் இப் பேரினவாதத்தின் பின்னால் கெட்டியாக இருப்பது சுரண்டல் சூறையாடல் அரசியல் ஆதிக்கம் ஒடுக்கு முறை என்பனவற்றைக் கொண்ட சொத்துசுகம் மிக்க உயர் வர்க்க நிலைப்பாடேயாகும்.

## அமெரிக்க உதவியின் இலச்சணம்

அமெரிக்கப் படைகள் நிவாரண வேலைகட்காக இங்கே தரையிறங்கியது எதிர்கால நோக்கங்கட்காக நோட்டம் பார்க்கிறதற்கு என்பது ஒரு விடயம். தொடர்ந்து நிற்பதும் நிற்காததும் இங்குள்ள மக்கள் எவ்வளவு தூரம் பணிந்து போவார்கள் என்பதிலேயே தங்கியிருக்கும். எனவே எழும்புகிற எதிர்ப்புக் குரல் ஒவ்வொன்றும் பயனுள்ளது. எப்போது திரும்பிப் போவது என்று நாள் குறிக்க முடியாது என்று பேசிய அமெரிக்கத்தரப்பு தேவைக்கு அப்பாலோ தம்மை இலங்கை வேண்டுகிற வரைக்கும் அப்பாலோ படைகள் தங்கியிருக்க மாட்டா என்ற தொனியை மாற்றியதற்கு அமெரிக்க எதிர்ப்புக் குரல்கட்கு ஒரு பங்குண்டு. அது போக இந்தியக் குறுக்கீட்டுடன் போட்டியிடுவது இப்போதைக்கு வசதியில்லை என்பதும் இன்னொரு கணிப்பு. எப்படியும் அமெரிக்கா தருவதாக வாக்களித்த உதவியில் பெரும் பகுதி அமெரிக்கப் படைகளது பணிகட்கான ஊதியக் கணக்கிற் கழிபட்டுப் போகும் என்பது நாம் மறக்கக் கூடாதது. ஒரு அமெரிக்க இராணுவச் சிப்பாய்க்கு நாளாந்த சம்பளமும் சாப்பாட்டுச் செலவுமாக நாளுக்கு 100-200 டொலர் வரை கணக்குக் காட்டினால் நாட்செலவே லட்சக்கணக்கில் வரும். இதற்கு மேலாக உபகரணங்கட்குக் கணக்குக் காட்டப்படும். எனவே அமெரிக்கா வழங்கப் போவதாக உறுதியளித்த உதவியில் பெரும் பகுதி ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டதாக நாம் விரைவில் அறிவோம்.

மிகுதியில் பெரும் பகுதி இனிவரவுள்ள நிபுணர்கட்கும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாக உள்ள பொருள்கட்கும் போவதுடன் மிஞ்சுவது யாவை? நிச்சயமாக இந்த அரசாங்கம் செலவழிக்க டொலர்களாகக் கிடையாது. என்றுமே எந்த அரசாங்கமும் நாட்டுக்காகச் செலவழிக்க எதுவுமே கிடையாது. அது தான் அமெரிக்க உதவி.

## கோபி அனான் கூறிய உண்மை

"வரலாற்று ரீதியான அனுபவத்தை அடிப்படையாக வைத்து நோக்கினால் எனக்கு சந்தேகம் ஏற்படவே செய்கிறது. சுனாமிப் பேரழிவுக்கு 200 கோடி டொலர்களுக்கு மேல் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இறுதியில் இத் தொகை முழுவதும் பெறப்படக் கூடியாதாக இருக்கும் என நான் நினைக்கவில்லை. 2003 ஜனவரியில் ஈரான் பாம் நகரில் இடம் பெற்ற பூகம்பத்தினால் பெரும் அழிவுகள் ஏற்பட்டன. உலக நாடுகள் பெருமளவு உதவியளிப்பதாக உறுதியளித்திருந்தன. ஆனால் இறுதியில் சிறு பகுதி உதவிகளே கிடைத்தன. இதனால் ஈரான் பாம் நகர மக்கள் விரத்தியடைந்திருக்கிறார்கள்" இவ்வாறு ஐ. நா. சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் ஜனவரி 3ம் திகதி நியூயோர்க்கில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அதிருப்தி வெளியிட்டுள்ளார். அவர் உறுதியளிக்கப்பட்டபடி நிதி உதவாது நடந்து கொண்டமைக்கு மறைமுகமாக அமெரிக்க மேற்குலக நாடுகளையே சுட்டிக் காட்டினர்.

### வடக்கு கிழக்கை .......

1ம் பக்க தொடர்ச்சி

அண்மை இயற்கைப் பேரழிவு என்பன தந்த பாடங்களையும் அனுபங்களையும் பட்டறிவாகக் கொண்டு விட்டுக்கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும் தூரநோக்குடனும் அரசாங்கமும் புலிகளும் இணங்கிச் செயல்படுவது அவசியமானதாகும். சுனாமிப் பேரழிவாகிய இயற்கையின் நிகழ்வு ஏற்படுத்தியுள்ள வரலாற்று திருப்பம் என்னும் சந்தர்ப்பத்தை இருதரப்பும் உரியவாறு பயன்படுத்தப்படுவதையே மக்கள் விரும்புகின்றர்கள்.

## பு. ஜ. கட்சி செயற்பட்டாளர்
## சி. ஐ.டி யால் விசாரிக்கப்பட்டதற்கு
## கண்டனம்

அட்டன் நகரை சேர்த்த புதிய ஜனநாயகட்சியின் செயற்படட்டாளர் ந. வரதராஜ் அட்டன் பொலிசை சேர்ந்த சி. ஐ. டி என்று அறிமுகம் செய்து கொண்ட ஒருவரால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

அவரின் பு. ஜ. கட்சி நடவடிக்கைகள் பற்றியும் அதன் செயற்பாட்டாளர்கள் பற்றியும் கேட்கப்பட்டுள்ளது.

ஆசிரியராக தொழில்புரியும் அவரை விசாரிக்கவென குறித்த நபர் (சி. ஐ. டி?) வேலை நேரத்தில் அவரது பாடசாலைக்கு சென்றுள்ளார்.

இந்நடவடிக்கை ஜனநாயக பூர்வமான அரசியல் நடவடிக்கைகளை அச்சுறுத்தும் செயல் என்று புதிய ஜனநாயக கட்சி கண்டிக்கிறது. கட்சியின் நடவடிக்கைகளை அறிய ஒரு செயற்பாட்டாளரை விசாரிக்கத் தேவை இல்லை. அதுவும் ஒரு செயற்பாட்டாளரின் வேலை செய்யும் பாடசாலைக்கு தேடிச் சென்று குற்றவாளிகளை விசாரிப்பது போன்று விசாரித்தமை தவறானதாகும். அரசியல் கட்சியொன்றில் இணைந்து செயற்படுவது, ஆதரவளிப்பது என்பதெல்லாம் ஜனநாய அடிப்படை உரிமைகளாகும். அவற்றை மீறும் வகையில் பெலிசார் செயற்படுவதை ஏற்று க்கொள்ள முடியாது. ஜனநாயக ரீதியாக செயற்படும் ஒருவரை அசௌகரியத்திற்குட்படு த்து நடவடிக்கைகளை பொலிஸார் செல்வதன் பின்னணி என்னவெ ன்று புதிய ஜனநாயக கட்சி கேள்வி எழுப்புகிறது.

### அந்நியப் படைகள் .......

1ம் பக்க தொடர்ச்சி

இவ்விடயத்தில் யூ என். பி சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற இடதுசாரிகள் ஜே.வி. பி யாவரும் அமெரிக்காவின் வருகை க்கு சாமரை வீசி நிற்கிறார்கள். இவர்கள் இவ் அந்நிய ராணுவப் பிரசன்னத்தை வைத்து விடுதலைப் புலிகளையும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தையும் அச்சுறுத்தி அடிபணியச் செய்வதற் குரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி நிற்பதையே அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய சூழலை உருவாக்க அமெரிக்க மேற்குலக சக்திகள் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டுத் தளங்களில் செயலாற்றி வந்துள்ளது. அதேவேளை ராணுவ மூலோபாயத்திற்கு அமைய உள்ளார்ந்த செயற்பாடுகளையும் முன்னெடுத்து வந்துள்ளது. புத்தளத்தில் அமைந்துள்ள "வொஸ் ஒவ் அமெரிக்கா" பிரதான பங்கை வகித்து வந்தது. ஏற்கனவே இலங்கையுடன் அமெரிக்கா செய்து கொண்ட "இலங்கையின் வான் பரப்பை சுதந்திரமாகப் பயன்படுத்தும் ஒப்பந்தம்" இப்போது நடைமுறைக்கு வந்துள்ளது. அமெரிக்காவின் ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி அடிக்கடி இலங்கை வந்து பலாலி திருகோணமலை போன்ற கேந்திர நிலையங்களைகப் பார்வையிட்டுச் சென்றமையின் தாள் பரியம் இப்போது பலருக்குப் புரிந்திருக்கும். அது மட்டுமன்றி இலங்கையின் அதி உயர்ந்த மலையான பீதுறுதாலகாலாவில் கண்காணிப்புக் கோபுரம் அமைக்க அமெரிக்கா முயற்சி செய்து வருகின்றமையும் தற்செயலான தொன்றல்ல.

எனவே இலங்கையின் சுதந்திரம் சுயாதிபத்தியம் இறமை என்பனவற்றுக்கும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிராகவும் உலக மேலாதிக்கத்திற்காகவும் அமெரிக்கா முதலாவது பரீட்சார்த்தமாகவே சுனாமிப் பேரழிவின் சாட்டில் இலங்கையில் வந்திறங்கி நிற்கிறது. ஆதலால் இலங்கையின் சகல மக்களும் நேர்மையான ஜனநாயக இடதுசாரி முற்போக்கு சக்திகளும் அமெரிக்க ராணுவத்தையும் ஏனைய அந்நிய ராணுவங்களையும் நாட்டைவிட்டு வெளியேற்றும் இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும். அதற்குரிய அடிப்படை வேலைத்திட்டத்தை சகல சக்திகளும் ஒன்றுபட்டு வரைந்து மக்கள் மத்தியில் முன்னெடுக்க வேண்டும். அந்நிய ராணுவங்கள் இங்கு நிலை கொள்ள முடியாதவாறான கொள்கை நிலைப்பாட்டை சுனாமிப் பேரழிவுகளிலிருந்து மீளக் கட்டியெழுப்புவதிலும், தேசிய இனப்பிரச்சினையிலும், பொருளாதார அபிவிருத்தியிலும் உறுதியாக முன்னெடுக்க வேண்டும். இதன் அடிப்படையிலேயே அந்நிய ராணுவங்களை அகற்ற முடியும்.

### பாலஸ்தீன விடுதலை...

10ம் பக்க தொடர்ச்சி

ஆனால் ஐக்கியமுன்னணியைக் கட்டுவதில் (பா.வி.இ) அவர் அவருடைய ஃபதா இயக்க விருப்பங்களுக்கு மாறாக ஏனைய அமைப்புகளுடன் சமரசங்களையும் விட்டுக் கொடுப்புகளையும் செய்தார் என்பதையும் அவற்றினால் பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்ததையும் அதற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தது என்பதையும் மறந்து விடலாகாது.

பாலஸ்தீனத்தில் பெரும்பான்மையானோர் இஸ்லாமியர்களாகையால் இஸ்லாமிய மதவாதமும் மத அடிப்படைவாதமும் பாலஸ்தீன ஐக்கிய முன்னணிக்கு (பா.வி.இ) பெரும் சவாலாகவே இருந்தன. யாசீர் அரபாத் இஸ்லாமிய மதவாதியாகவோ மதஅடிப்படைவாதியாகவோ அன்றி தேசிய ஜனநாயகவாதியாக அவரது தலைமைத்துவத்தை நிலைநாட்டியுள்ளார். 1987 இற்குப் பிறகு போராட்டம் ஸ்திர நிலையடைந்த பிறகு பா.வி.இயக்கத்திற்கு எதிராக திட்டமிட்டு வளர்க்கப்பட்ட இஸ்லாமிய மத அடிப்படைவாதத்திற்கு எதிராக செயற்பட வேண்டியவரானார். 1993 இற்கு பிறகு பா.வி. இயக்கம் ஹமாஸ் இயக்கத்தினரின் மோசமான தாக்குதல்களுக்குள்ளானது. அவரது சொந்த வாழ்க்கையில் கூட மதம் மேலாதிக்கம் செலுத்துவதை அவர் விரும்பியவரல்லர் என்றே அவரை பற்றி எழுதிய பலர் கூறியுள்ளனர். பாலஸ்தீனரான ஆனால் கிறிஸ்தவரான அவரது மனைவி இஸ்லாமிய மதத்தை தழுவ வேண்டுமென்பதில் அவர் விடாப்பிடியாக இருக்கவில்லை என்றே கூறப்படுகிறது.

எனவே பாலஸ்தீன விடுதலை இயக்கம் பொதுநோக்கம் உடைய பல வித்தியாசமான கருத்துக்களை கொண்ட அமைப்புகளின் கூட்டாக இயங்குவதில் இடையூறாக ஃபதா இயக்கத்தின் மேலாண்மையை நிலைநாட்ட எடுக்கப்பட்ட முயற்சிகளை அரபாத் விமர்சித்துள்ளார். அதற்கு எதிராகவும் போராடியுள்ளார்.

அதேவேளை அவ்வியக்க செயற்பாடு பிற்காலத்தில் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் ஐக்கிய முன்னணிக்கு மாறாக இருந்துள்ளன. அவை விமர்சனத்திற்குரியனவாகும். அவற்றையும் கருத்திற் கொள்வது தேசிய விடுதலை இயக்கமொன்றின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

### குடிக்கும் தண்ணீரிலும்........

4ம் பக்க தொடர்ச்சி .....

உருவாக்கினீர்கள் எனச் சினந்து கொண்டதை இளைஞர்கள் வேதனையோடு குறிப்பிட்டனர். கூட்டமைப்புக்கு வாக்கு கேட்ட போது நான் உங்கள் சாதி, நான் உங்கள் பிரதிநிதியாக வேண்டும் என தாழ்த்தப்பட்ட மக்களிடம் வாக்குச் வேட்டையாடிச் சேகரித்த இந்த வடமராட்சி பாராளுமன்ற உறுப்பினர் இன்று அதே மக்கள் எதிர்நோக்கி நிற்கும் குடி நீர் எடுக்கும் கிணற்றுப் பிரச்சினையில் மழுப்பல் நியாயமும் எதிர்தரப்புக்கு தலைசொறிந்து குனிந்து கொள்ளும் நிலை கண்டு தாழ்த்தப்பட்டவர்கள் வேதனைப்படுகின்றனர். வெறும் பாராளுமன்றப் பிரதிநித்துவத்தால் சாதியத்தை எதிர்கொள்ள முடியாது. பேராட்டத்தால் மட்டுமே அதனை எதிர்த்து நிற்க முடியும் என்பதையே முன்னைய போராட்டங்கள் எடுத்துக் காட்டின. இனிமேலும் அந்தப் பாதையே சரியானதாகும். முன்னைய சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் முன்னின்ற ஒரு கிராமத்திலிருந்து வந்த பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு நடந்து கொண்டமை தான் மக்களைச் சினக்க வைக்கிறது. பதவிகள் பட்டங்கள் நியாயத்தின் பக்கம் நிற்பது அரிதாகவே இருக்கும் என்பதில் உண்மை உண்டு தான்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3 மடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு கொம்பிரின்ட் 334A.K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13